| | |
|---|---|
| | **ANDERSON JUNIOR COLLEGE**<br>**அண்டர்சன் தொடக்கக் கல்லூரி**<br>**PRELIMINARY EXAMINATION- 2017**<br>**முன்னோட்டத் தேர்வு** |

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்<br>தாள் - 1 (பகுதி 1)<br><br>**HIGHER 2 TAMIL LANGUAGE, LITERATURE**<br>**PAPER -1( Part 1)** | **A**<br>**9561/1**<br>**13/09/2017**<br><br>Duration: 1 hr 15 mins |

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

**1.** இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விரண்டு பகுதிக்கும் விடையளிப்பதற்கு **2.15 மணிநேரம்** வழங்கப்பட்டுள்ளது.

**2.** முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

**3.** அகராதியைப் பயன்படுத்துதல்:

அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தலாம்.

ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

இ) நீவிர் பயன்படுத்தும் அகராதியின் பெயரை விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையின் மேல் வலப்பக்கக் கோடியில் எழுதவேண்டும்.

**4.** ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

**5.** பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

**முதல் பகுதியின் 4 கட்டுரைத் தலைப்புகள் பக்கம் 2-இல் அச்சிடப்பட்டுள்ளன.**

I.பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ <u>350 சொற்களில்</u> ஒரு கட்டுரை வரைக. (35 மதிப்பெண்கள்)

**Q1.*அடியில் கொடுக்கப்பட்டுள்ள படக்காட்சியினை அடிப்படையாகக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.***




**Q2. *“வெறுங்கை என்பது மூடத்தனம். உன் விரல்கள் பத்தும் மூலதனம்”*-கருத்துரைக்க.**

**Q3. இன்றைய இளையர்களுக்குப் ‘பொறுமை’ என்னும் பண்பு சிறிதும் இல்லை – விவாதிக்க.**

**Q4. காலத்தின் அருமை குறித்து ஆராய்க.**

| | |
|---|---|
| | **ANDERSON JUNIOR COLLEGE**<br>**அண்டர்சன் தொடக்கக் கல்லூரி**<br>**PRELIMINARY EXAMINATION- 2017**<br>**முன்னோட்டத் தேர்வு** |

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்<br>தாள் - 1 (பகுதி 1)<br><br>**HIGHER 2 TAMIL LANGUAGE, LITERATURE**<br>**PAPER -1( Part 2)** | **A**<br>**9561/1**<br>**13/09/2016**<br><br>Duration: 1 hr |

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1.கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டுஅவற்றின்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2.விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ளவிடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3.பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப் புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

**இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள வினாக்கள் பக்கம் 4 முதல் 6 வரை அச்சிடப்பட்டுள்ளன.**

## ‘அ பிரிவு‘

**<u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>** **(5 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

வாழ்க்கையும், படிப்பும் வேறு வேறு அல்ல. இரண்டையும் இணைத்தே பார்க்கும் மனப்பக்குவம் வேண்டும். வாழ்க்கையை மேம்படுத்துவதற்கே Q1____________________. நம்மை நாம் மேம்படுத்திக்கொண்டால் உலகில் எங்கு சென்றாலும், திறம்பட செயலாற்ற முடியும். நாட்டையும், அரசாங்கத்தையும் Q2____________________ சொல்வதை விட்டுவிட்டு, ஒவ்வொருவரும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். மாணவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் பல்வேறு Q3.____________________ பயன்படுத்தி, அறிவை வளமாக்கி, கூடுதல் திறன்களை மேம்படுத்தும்போது, நல்ல வேலைவாய்ப்புகள் Q4.____________________ தேடிவரும். தொழிற்நுட்ப அறிவை எப்படி எல்லாம் மேம்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் மேம்படுத்திக்கொள்ள Q5.____________________ வேண்டும். ‘எனது பார்வை மற்றவர்களிடம் இருந்து வேறுபட்டு இருக்கும். புத்தாக்க முறையில் புதுமையாகச் சிந்தித்து அரிய கண்டுபிடிப்புகளை நிச்சியம் நிகழ்த்துவேன்’ என்று ஒவ்வொரு மாணவரும் தங்களுக்குள்ளேயே கூறிக்கொண்டு, அதை நோக்கியே பயணிக்க வேண்டும்.

## <u>‘ஆ பிரிவு‘</u>

**<u>சுயவிடைக் கருத்தறிதல் (1)</u>** **(30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை தருக.**

மானிட இனம் சிறப்புற வாழக் கல்வி ஓர் அற்புத சாதனமாகத் திகழ்கிறது. கல்வித்தாகம் ஒவ்வொருவரின் உயிரோட்டத்திலும் **<u>ஊற்றெடுக்க</u>** வேண்டிய ஒன்றாகும். இம்மாபெரும் கல்விச் செல்வமானது அனைவரது வாழ்விற்கும் விடிவெள்ளியாக அமைந்து வருகின்றது என்றால் மிகையாகாது. கண்களுக்கு நிகராகப் போற்றப்படும் கல்வியைக் கற்பதன்வழி, ஒரு மனிதன் தன் வாழ்வைச் சீர்படுத்திக் கொண்டு செம்மையாக வாழலாம். உயிர் உடலில் இருந்து பிரிந்தாலும் ஒரு மானிடன் வாழ்ந்த வாழ்வை இவ்வுலகம் தொடர்ந்து பேசிக்

கொண்டே இருக்கும். அப்பேச்சு, தூற்றும் வகையில் அமைவதும் போற்றும் வகையில் அமைவதும் ஒருவர் கடைப்பிடித்த வாழ்க்கை நெறியைப் பொறுத்துள்ளது. இவ்வாழ்க்கை நெறி கல்வியின் மூலமே பெறப்படுகிறது. கல்வியானது பண்பு நிறைந்த **குமுகாயத்தை** உருவாக்கும் வல்லமையைக் கொண்டது. கல்வி ஒரு சமுத்திரத்தைக் காட்டிலும் பெரியதாகும். வாழ்க்கை என்ற சிகரத்தை அடைய கல்வி என்ற தூண்டுகோல் அவசியமாகும்.

கல்வி வழியாக அன்பு, பணிவு, கருணை போன்ற உயர்ந்த குணங்கள் ஒருவரது ஆழ்மனதில் கலந்துவிடும். அதோடு கல்வி கற்ற ஒரு மானிடனால் நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து நடக்க இயலும். இதனால், கல்விமானாகத் திகழும் ஒவ்வொரு மனிதனும் என்றும் மாசற்றவர்களாகத் திகழ்வர் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. மேலும், கல்வித் தென்றலில் உலாவரும் ஒவ்வொரு மனிதனும், மதிப்பும் மரியாதையும் பெற்று, புகழின் சிகரத்தை அடைவான் என்பது நாமறிந்த ஒன்றே. கல்வி கற்காதவன் உலக மக்களால் தற்குறி என்று கூறப்படுவான்.

கல்வி ஞானம் பெற்ற ஒருவரின் பேச்சும் ஆலோசனையும் மட்டுமே உலக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழ்வில் செயல்படுத்தப்படுகின்றது. கற்றவரின் கருத்து என்றும் வளமானதாகவும் வலுவானதாகவும் இருக்கும். கற்றவர்கள் எவ்வித சிக்கல்களையும் தங்கள் அறிவால் சுமூகமாக நிவர்த்திச் செய்யும் ஆற்றலைப் பெற்றிருப்பர். அதோடு, கற்றவர்கள் எவ்வித சூழ்நிலைகளிலும் தன்னடக்கத்துடன் செயல்படுவர். இவை போன்ற சிறந்த தன்மைகளைக் கொண்டிருப்பதால் கற்றவர்கள் சென்ற இடமெல்லாம் சிறப்பிக்கப்படுவர் என்பதைக் ‘கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு’ என்னும் முதுமொழி விளக்குகின்றது.

கற்றவன் நிறைகுடத்தைப் போன்றவன். கல்லாதவன் அனைத்து விதத்திலும் குறைகுடமாகவே திகழ்வான். கல்வி கற்காதவனிடம் பல தீய குணங்கள் மிக விரைவில் தொற்றிக் கொள்ளும். ஏனெனில், அவர்களுக்குப் பகுத்தறியும் தன்மை **குன்றியே** காணப்படும். மாசற்ற மழை நீர் செம்மண்ணில் விழுந்து தூயத்தன்மையை இழப்பது போல் ஒரு நல்ல மனிதனும் கல்வி கற்காவிட்டால் மிக விரைவில் தீய குணங்களுக்கு அடிமையாகிச் சீரழிந்து விடுவான். கல்வி என்னும் அமுதச் சுரபியைப் பெறும் ஒவ்வொரு மானிடனும் தனது பொது அறிவை வளர்த்துக் கொள்ள இயலும். கல்வி கற்கும் பொழுது நாம் அதன்வழி பல தகவல்களை அறிகின்றோம். இத்தரணி தோன்றியது முதல் மனிதன் வளர்ச்சி அடைந்த காலம் வரை உள்ள தகவல்களை நாம் கல்வியின் வழி கற்றறியலாம். ஆகவே, முழுமையான கல்வி கற்றுச் சிறப்பான வாழ்வின் உன்னத நிலையை அடைவோம்.

## வினாக்கள் (30 மதிப்பெண்கள்)

Q6. வாழ்க்கைமுறை சிறப்பாக அமைய ஒருவருக்கு எது அவசியமாகின்றது? ஏன்?

**(6 மதிப்பெண்கள்)**

Q7. கல்வியறிவு இல்லாதவர்களின் பண்புநலன்கள் எவ்வாறு அமையக்கூடும்?

**(6 மதிப்பெண்கள்)**

Q8. 'கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்று ஏன் கூறப்படுகின்றது?

**(6 மதிப்பெண்கள்)**

Q9. கற்றவர், கல்லாதவர் இவ்விருவர் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

**(6 மதிப்பெண்கள்)**

### Q10. சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றிற்கான பொருளை எழுதுக.

அ. ஊற்றெடுக்க
ஆ. குமுகாயத்தை
இ. குன்றியே

# முற்றும்

## ***பனுவல் ஒன்று: அறிவியல் மற்றும் தொழிற் நுட்பம்***

தொழிற் நுட்பம் என்பது அறிவியல் முறையையும், பொறியியல் கருவிகளையும் பயன்படுத்தி நுணுக்கமான வேலைகள் மூலம் திட்டங்களையும், வரையீடுகளையும் செயற்படுத்துவதாகும். அதாவது விஞ்ஞான அறிவு முறைகளையும், பொறியியல் ரீதியான இயந்திரங்களையும் கொண்டு நுணுக்கமாக வேலைகளை மேற்கொள்ளுவதற்காகப் பயன்படுத்தப்படும் செயற்பாடுகளை உள்ளடக்கியதே தொழிற் நுட்பாகும். ***தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக மனிதர்களின் அடிப்படைத் தேவைகளை இலகுவாகப் பூர்த்திசெய்யக்கூடிய நிலமை காணப்படுகின்றன.*** இன்றைய சூழலில் நவீன தொழிற்நுட்பங்களினால் தகவல் தொடர்பு சாதனங்கள் அதிகரித்துள்ளன. உலகமயமாதல் என்ற கொள்கையினால் உலகமே சுருங்கிவிட்ட நிலைமை காணப்படுகின்றது. உடனுக்குடன் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்ளவும் இலகுவாக அமைகின்றது.

தொழில் நுட்பத்தின் காரணமாக சுகாதார நலன்களிலும் வளர்ச்சி நிலைமை காணப்படுகின்றது. அதாவது புதிய வகை மருந்துகளின் கண்டுபிடிப்புக்கள், புதிய மருத்துவக் கருவிகளின் பயன்பாடு முதலானவை தொழில் நுட்பத்தின் வளர்ச்சியினால் உருவாக்கப்பட்டவையாகும். எடுத்துக்காட்டாக புற்று நோய்களுக்கான மருந்துப் பொருட்களின் பாவனைகள், அறுவைச் சிகிச்சைகள் முதலானவை மனிதர்களுடைய ஆயுள் எதிர்பார்ப்புக்களை உயர்வடையச் செய்கின்றன.

அதுமட்டுமல்லாமல், போக்குவரத்துத் தொடர்பாக நோக்குகின்றபோது குறித்த சில மணிநேரத்திற்குள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வதற்கான தொழில் நுட்பங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. அதாவது தரை, நீர், வான் போக்குவரத்துக்கள் மூலமாக பயணிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக விமானங்கள், கப்பல்கள், மின்சார ரயில்கள் முதலான சாதனங்கள் மனிதர்களினுடைய போக்குவரத்துத் தேவைகளை துரித கதியில் மேற்கொள்வதற்கு உதவுகின்றன.

சுருக்கமாக, அறிவியல் தொழிற் நுட்பம், பொருளாதரத்தையும் சமூகத்தையும் முன்னேற்றுகிறது. அறிவு வளர்ச்சிக்கு அறிவியல் தொழில்நுட்பம் ஒரு முக்கியக் காரணியாகவும் திகழ்கின்றது.

# ANDERSON JUNIOR COLLEGE
## அண்டர்சன் தொடக்கக் கல்லூரி
## PRELIMINARY EXAMINATION - 2017
## முன்னோட்டத் தேர்வு

| | |
|---|---|
| **உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்**<br>**தாள் - 3**<br>**HIGHER 2 TAMIL LANGUAGE, LITERATURE**<br>**PAPER -3** | **11/09/2017**<br>Duration: 3 hours |

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தபட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள 8 வினாக்கள் பக்கம் 2 முதல் 3 வரை அச்சிடப்பட்டுள்ளன.

# உயர்தரம் 2 தமிழ் மொழி, இலக்கியம் - தாள் 3

## முக்கியக் குறிப்புகள்

1 மொத்தம் **நான்கு வினாக்களுக்கு** விடையெழுத வேண்டும்.
2 ஒவ்வொரு வினாவிற்கும் **25 மதிப்பெண்கள்** வழங்கப்படும்.
3 ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும்.

## ‘அ’ பிரிவு

நாவல்

**Q1.** **நிர்மலா கதாபாத்திரம் தனது தவறை உணர்ந்து திருந்தியதற்கான காரணங்களை ஆராய்க.**

**Q2.** **எக்காலத்திற்கும் ஏற்ற வாழ்க்கைப் படிப்பினைகள் கொண்ட நாவல் கரித்துண்டு - ஆராய்க.**

## *‘ஆ’ பிரிவு*

சிறுகதை

**Q3. ‘இது மிஷின் யுகம்’ என்னும் சிறுகதை, இன்றைய நவீன உலகைச் சித்தரித்துக்காட்டுகின்ற ஒரு படைப்பு என்பதைத் தக்க ஆதாரங்களுடன் விவரிக்க.**

**Q4. ‘நாடோடிகள்’ சிறுகதையின் கருப்பொருளை வெளிப்படுத்துவதற்கு ஆசிரியர் இராம.கண்ணபிரான் எத்தகைய உத்திகளைக் கையாண்டு அக்கதையைப் படைத்துள்ளார்?**

## 'இ' பிரிவு

**நாடகம்**

**Q5. பிள்ளைகளின் மனநிலையைப் பெற்றோர்கள் புரிந்துகொள்வதில்லை என்பதைக் காதல் என்ன விலை, சிங்கப்பூர் மாப்பிள்ளை ஆகிய இரு நாடகங்களின் துணைகொண்டு ஆராய்க.**

**Q6. சிங்கப்பூரர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய உண்மைகளை சே.வே.சண்முகம் அவர்களின், 'சிங்கப்பூர் மாப்பிள்ளை' என்னும் நாடகத்தில் வரும் சில நிகழ்வுகளைக் கொண்டு விளக்குக.**

## 'ஈ' பிரிவு

**கவிதை**

Q7. **சங்க காலக் கவிதைகளில் காதல், கடமை மற்றும் வாழ்வியல் குறித்துக் கூறப்பட்டுள்ள கருத்துகள் இக்கால வாழ்க்கைச் சூழலுக்குப் பொருந்துகின்றதா? ஆராய்க.**

**Q8.** 'இரவிலும் பகலை எதிர்பார்' **கவிதையின் மூலம் அறியலாகும் விழுமியங்கள் யாவை? அவற்றை விளக்க அமலதாசன் கையாண்டுள்ள கவிதை உத்திகள் யாவை?**

**(முற்றும்)**

INNOVA JUNIOR COLLEGE
PRELIMINARY EXAMINATION 2017
in preparation for General Certificate of Education Advanced Level
**Higher 2**

| | | | |
|---|---|---|---|
| CANDIDATE NAME | | | |
| CLASS | | INDEX NUMBER | |

**தமிழ் மொழி, இலக்கியம்**
**தாள் 1 (பகுதி 1)**

**9567/1**

**TAMIL LANGUAGE & LITERATURE**
**Paper 1 (Part 1)**

**29 Aug 2017**

**2hr 15mins**

**(Total Time for Paper 1 Part 1 & Part 2 )**

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்:**

1 இவ்வினாத்தாளின் பகுதி 1, பகுதி 2 ஆகியவை தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.
2 பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றிற்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.
3 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

4 அகராதியைப் பயன்படுத்துதல்:

(அ) பகுதி 1-க்கு விடையளிக்கும்போது நீ அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம். அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள்.
(ஆ) பகுதி 2-க்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

| கேள்வி எண் | மதிப்பெண் | |
|---|---|---|
| | கருத்து | /17 |
| | மொழி | /18 |
| | Total | / 35 |

This document consists of 3 printed pages including cover page and 1 blank page.

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக. (35 மதிப்பெண்கள்)**

Q1 ‘சிந்திக்கத் தெரிந்தவர்க்கு ஆலோசனை தேவையில்லை.’ இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்?

Q2 சிங்கப்பூரர்கள் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்வதையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுள்ளனர். - கருத்துரைக்க.

Q3 உன் வகுப்பு மாணவர்கள் நிதி திரட்டு நடவடிக்கை ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்நடவடிக்கையின் முக்கிய பொறுப்பு ஒன்றை நீ ஏற்றுக்கொண்டாய். ஆனால், அந்நாளன்று உன்னால் நடவடிக்கையில் கலந்துகொள்ள இயலாமல் போனது. அப்பிரச்சினையை எவ்வாறு சமாளித்தாய் என்றும் அப்போது உனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் அதிலிருந்து நீ கற்றுக்கொண்ட பாடத்தையும் விவரித்து எழுதுக.

Q4 பின்வரும் சூழலைக்கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.







| |
|---|
| தவறுகள் ஏற்படுவது நீங்கள் அவற்றைத் திருத்திக்கொள்ள முயல்கிறீர்கள் என்பதையே உணர்த்துகிறது. |

**முற்றும்**

# BLANK PAGE

INNOVA JUNIOR COLLEGE
PRELIMINARY EXAMINATION 2017
in preparation for General Certificate of Education Advanced Level
**Higher 2**

CANDIDATE NAME

CLASS | INDEX NUMBER

**தமிழ் மொழி, இலக்கியம்**
**தாள் 3**
**TAMIL LANGUAGE & LITERATURE**
**Paper 3**

**9567/3**

**13 Sept 2017**

**3 hrs**

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்:**

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

| Section | Qn No | Marks |
|---|---|---|
| 'அ' பிரிவு | | / 25 |
| 'ஆ' பிரிவு | | / 25 |
| 'இ' பிரிவு | | / 25 |
| 'ஈ' பிரிவு | | / 25 |
| Total | | / 100 |

**முக்கியக் குறிப்புகள்**

**ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

## ‘அ’ பிரிவு

**நாவல்**

Q1. ‘கரித்துண்டு’ நாவலில், மனித நேயம் போற்றப்பட வேண்டும் எனும் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ள பாங்கினை சான்றுகளுடன் விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

Q2. ‘கரித்துண்டு’ நாவலில் இடம்பெற்றுள்ள கதாப்பாத்திரங்களில் இன்றைய இளையர்களுக்குச் சிறந்த முன்மாதிரியாக விளங்கும் கதாப்பாத்திரம் என யாரைக் குறிப்பிடுவாய்? உனது காரணங்களை விளக்கி எழுதுக.

(25 மதிப்பெண்கள்)

## ‘ஆ’ பிரிவு

**சிறுகதை**

Q3. ஒருவர் தாம் கூறும் அறிவுரைக்கேற்ப முன்னுதாரணமாகச் செயல்படாவிட்டால், இன்னல்களுக்கு ஆளாகுவர் என்பதை ‘ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது’ எனும் சிறுகதையின் வழி ஆராய்க.

(25 மதிப்பெண்கள்)

Q4. ‘இது மிஷின் யுகம்’ எனும் சிறுகதையில் கிருஷ்ணன் கதாப்பாத்திரம் இக்கால மக்களின் பிரதிநிதி என்ற கருத்தை சான்றுகளுடன் விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

## **‘இ’ பிரிவு**

**நாடகம்**

Q5. ‘காதல் என்ன விலை’ என்ற நாடகம் இன்றைய பெற்றோர்களின் மனப் போராட்டங்களை நன்கு விளக்குகிறது. இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா? சான்றுகளுடன் விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

Q6. ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’ எனும் நாடகத்தில் இடம்பெறும் கோபால்சாமியின் செயல்கள் இக்கால வாழ்க்கைச் சூழலுக்குப் பொருந்துமா? ஆராய்க.

(25 மதிப்பெண்கள்)

## **‘ஈ’ பிரிவு**

**கவிதை**

Q7. புறநானூற்றுப் பாடல்கள் சீரிய வாழ்விற்கு வழிகாட்டுவன என்று கூறுவது எவ்வகையில் பொருந்தும் என்பதை சான்றுகளுடன் விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

Q8. ‘புல்’ மற்றும் ‘இயற்கை இன்பம்’ ஆகிய கவிதைகளில் இடம்பெறும் கற்பனை மற்றும் இலக்கிய நயத்தைச் சான்றுகளுடன் விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

முற்றும்

BLANK PAGE

INNOVA JUNIOR COLLEGE
PRELIMINARY EXAMINATION 2017
in preparation for General Certificate of Education Advanced Level
**Higher 2**

| | | | |
|---|---|---|---|
| CANDIDATE NAME | | | |
| CLASS | | INDEX NUMBER | |

**தமிழ் மொழி, இலக்கியம்**
**தாள் 1 (பகுதி 2)**

**9567/1**

**29 Aug 2017**

**TAMIL LANGUAGE & LITERATURE**
**Paper 1 (Part 2)**

**1 hr**

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்:**

1. இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.
2. முதற்பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.
3 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

**அகராதியைப் பயன்படுத்துதல்:**

(அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம். அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள்.
(ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

| கேள்வி எண் | மதிப்பெண் | |
|---|---|---|
| | கருத்து | /5 |
| | மொழி | /30 |
| | Total | / 35 |

This document consists of 5 printed pages including cover page and 1 blank page.

## <u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> (5 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

இந்தியக் கலாசாரத்தில் திருமணம் என்பது ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. சமீப காலங்களில் ஒருவரைப் பார்த்து மற்றவர் தங்கள் வசதி வாய்ப்புகளைக் கருத்தில் கொள்ளாமல் மற்றவர்கள் Q1 ______________ வகையில் விமரிசையாகத் திருமணத்தை நடத்திடவே விரும்புகின்றனர்.

திருமண அழைப்பிதழ் தொடங்கித் திருமண மண்டபம், விலை உயர்ந்த புத்தாடைகள், உணவு ஏற்பாடுகள், பாட்டுக் கச்சேரிகள், நண்பர்களைத் திருப்திப்படுத்த மதுவகைகள் என Q2 ______________ பொருட்செலவு செய்து பின்னர் பொருளாதார நெருக்கடியில் வருந்துகின்றனர். திருமண விருந்தில் வகைவகையான உணவுப் பதார்த்தங்களைத் தயார் செய்து அவசர அவசரமாகப் பரிமாறிவிட்டுச் செல்வதும், Q3 ______________ சாப்பிடுவதற்குள் மற்றொன்று என இலைகளில் கேட்காமலேயே வைத்துவிட்டுச் செல்வதும் வழக்கமாகிவிட்டது. அதோடு, அடுத்த பந்திக்குக் காத்திருப்போர் சாப்பிடுபவர்களுக்கு அருகாமையில் வந்து நின்று, தர்மசங்கடமான ஒரு நிலையை உருவாக்குவதால், அவர்கள் சரிவரச் சாப்பிடாமல் இலையை மூடிவிட்டு எழுந்து சென்று விடுகின்றனர்.

இதனால் உணவுப்பொருள்கள் வீணாவதோடு, நன்றாக, நிதானமாகச் சாப்பிட்ட திருப்தியும் இன்றித் திருமண வீட்டை விட்டுச்செல்ல நேரிடுகிறது. Q4 ______________, எந்த வகையிலும் தேவைக்கு மிகுதியாக உணவுப் பொருள்களை இலைகளில் பரிமாறி வீணாக்கப்படுவதைத் தவிர்த்தாக வேண்டும். திருமண நிகழ்வில் ஆடம்பரச் செலவுகளை அறவே தவிர்த்தும், உன்னதமான, உயர்வான கலாசாரத்தை வெளிபடுத்தும் விதமாகத் திருமண நிகழ்ச்சிகள் Q5 ______________ வேண்டும். மேலும், வசதி படைத்தவர்கள் எளிமையான முறையில் தங்கள் வீட்டுத் திருமணங்களை நடத்தி மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டும்.

**சுயவிடைக் கருத்தறிதல் (1) (30 மதிப்பெண்கள்)**
**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை எழுதுக.**

எல்லோருமே வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தேடுகிறோம், ஓர் அர்த்தத்தைத் தேடுகிறோம், வெற்றியடைய ஆசைப்படுகிறோம். மகிழ்ச்சியும், அர்த்தமும், வெற்றியும் எது என்பது ஆளுக்கு ஆள் மாறுபடும் என்றாலும் எல்லோருடைய தேடலும் அவற்றை நோக்கியே இருக்கின்றன. என்றேனும் ஒரு நாளில் வெற்றியடைவோம், வாழ்வில் அர்த்தம் கண்டுபிடிப்போம், மகிழ்ச்சியடைவோம் என்ற எதிர்பார்ப்பில் தினசரி வாழ்க்கையைக் கோட்டை விடும் முட்டாள்தனம் பலரிடம் இருக்கிறது. பலருடைய தினசரி வாழ்க்கை எந்திரத்தனமாக உள்ளது. என்றோ வாழப்போகும் நல்லதொரு வாழ்க்கைக்கான ஓட்டப்பந்தயமாக அமைந்துவிடுகிறது. வாழ்கின்ற வாழ்க்கை சரிதானா என்ற சந்தேகம் அடிக்கடி ஏற்பட அடுத்தவர்களைப் பார்த்து அவ்வப்போது மாற்றிக் கொள்வதாகி விடுகிறது. இயற்கையான ஆரம்ப **இலக்குகள்** மாறி, பணம், புகழ், படாடோபம் என்ற இலக்குகள் பெரும்பாலானவர்களின் இலக்குகளாகி விடுகின்றன. இந்த இலக்குகளில் மகிழ்ச்சியும், அர்த்தமும், வெற்றியும் தேடும் போது பலருக்கும் ஏமாற்றமே மிஞ்சுகிறது.

ஒருவரின் வாழ்க்கையில், உண்மையான மகிழ்ச்சி, அர்த்தம், வெற்றி இருக்கிறதா என்பதை அறிவதற்குச் சில அளவுகோல்கள் உள்ளன. உங்கள் வாழ்க்கையில், காலத்தை மறந்து செய்கின்ற வேலையில் ஐக்கியமாவது உண்டா? பெரிய செலவில்லாமல் ரசிக்கும் சின்னச் சின்ன விஷயங்கள் உண்டா? அடுத்தவர் பார்வைக்கு எப்படி இருக்கிறது என்று கவலைப்படாமல் உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதற்காகவே ஈடுபடும் விஷயங்கள் உண்டா? பெரும்பாலான நாட்களில் உற்சாகமாக எதிர்பார்க்கவும், செய்யவும் ஏதாவது புதுப்புது முயற்சிகள் உண்டா? இவற்றில் ஓரிரண்டு கேள்விகளுக்காவது உங்கள் பதில் “ஆம்” என்று இருந்தால் உங்கள் வாழ்க்கை அர்த்தத்தோடும், மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் போய்க் கொண்டிருக்கிறது என்று பொருள். அதற்கு எதிர்மாறாக உங்கள் தினசரி வாழ்க்கை இருந்தால் உங்கள் வாழ்க்கையில் உண்மையான உயிரோட்டம் இல்லை என்று பொருள். கேளிக்கைகளில் ஈடுபட்டால் தான் மகிழ்ச்சி கிடைக்கிறதா? தினசரி குடித்தால் தான் நிம்மதி கிடைக்கிறதா? அடுத்தவர்களைப் பற்றி வம்பு பேசினால் தான் பொழுது போகிறதா? அடுத்தவருடன் ஒப்பிட்டுப் பார்த்து மிஞ்ச **முனைவதில்** தான் தினமும் அதிக நாட்டம் செல்கிறதா? பொருளாதார இலாபம் இல்லாவிட்டால் உங்களுக்கு மிக ஆர்வமுள்ளவற்றில் கூட கவனம் செலுத்த மறுக்கிறீர்களா? இவற்றில் சிலவற்றிற்குப் பதில் “ஆம்” என்றால் உங்கள் வாழ்க்கையில் ஓட்டம் இருக்கலாம், ஆனால் உயிர் இல்லை என்று பொருள்.

எடிசன், ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிகளில் மூழ்கிவிடும் போது உலகத்தையே மறந்து விடுவார்களாம். கொண்டுவந்து வைக்கப்படும் உணவை உண்ணக்கூட மறந்து விடுவார்களாம். லியார்னாடோ டாவின்சி, மைக்கேல் ஏஞ்சலோ போன்ற ஓவிய மேதைகளும் அப்படியே தங்கள் படைப்பில் மூழ்கி விடுவார்களாம். அந்த நேரங்களில் செய்யும் வேலையின் சிரமங்களோ, வரப்போகும் இலாபங்களோ, கிடைக்கப் போகும் புகழோ அவர்கள் கவனத்தில் இல்லை. அந்தத் தருணங்கள் மிக அழகானவை. உயிரோட்டமுள்ளவை. செய்யும் செயல் முழுமை பெறப் பெற அவர்கள் அடையும் மகிழ்ச்சி வார்த்தைகளில் அடங்காதது. அதே நேரத்தில் அது அர்த்தமுள்ளதாகவும் அமைந்து வெற்றியையும் அளித்துவிடுகிறது. இத்தகைய தனித்திறமை இல்லாவிட்டாலும் எத்தனையோ பேர் தங்கள் இயல்புக்கு ஏற்ப உயிரோட்டமான, உபயோகமான வாழ்க்கை வாழ்வதை நாம் பார்க்கலாம். அமைகின்ற வேலை உற்சாகமாக இல்லாதபோது பொழுதுபோக்கு ஒன்றையாவது உற்சாகமாகவோ, உபயோகமாகவோ வைத்துக் கொள்வது மிக புத்திசாலித்தனமான அணுகுமுறை. ஒரு குடும்பத்தலைவி தோட்ட வேலைகளில் மிகவும் ஈடுபாடு

கொண்டிருந்தார். நடும் செடிகளில் தளிர்க்கும் ஒவ்வொரு இலையிலும், பூக்கும் ஒவ்வொரு பூவிலும் ஆனந்தம் காணும் தன்மை அவரிடம் இருந்தது. இன்னொரு மனிதர் புத்தகப்பிரியர். புத்தகம் ஒன்று கிடைத்துவிட்டால் உலகையே மறந்து அதில் ஆழ்ந்து விடுவார். அவருடைய வேலை எந்திரத்தனமாக அமைந்திருந்தாலும் தனக்குப் பிடித்த புத்தகங்களைப் படித்து வாழ்க்கையில் உற்சாகம் **குன்றாமல்** அவர் பார்த்துக்கொள்கிறார். இப்படிப் பலர் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் தங்களுக்குப் பிடித்த ஒன்றில் ஆர்வமாக ஈடுபட்டு வாழ்க்கை எந்திரத்தனமாக மாறிவிடாமல் பார்த்துக் கொள்கிறார்கள். சாதனை புரியவோ, சரித்திரம் படைக்கவோ முடியாவிட்டாலும் வாழ்க்கை உயிரோட்டமாக இருக்கும்படி இப்படிப்பட்டவர்கள் பார்த்துக் கொள்கிறார்கள்.

தங்கள் வாழ்க்கையில் தங்கள் வழியில் நிறைவு காண்பவர்கள் அடுத்தவர்கள் வாழ்க்கையில் அனாவசியமாகக் குறுக்கிடுவதில்லை. அடுத்தவர்களை நோகடிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகளையும், துக்கங்களையும் சமாளித்து சீக்கிரமே மீண்டும் விடுகிறார்கள். உயிரோட்டமில்லாத வாழ்க்கை வாழ்பவர்களோ அதிகமாக அடுத்தவர்களைப் பார்த்தே வாழ்கிறார்கள். பொருளாதார நிலையே மிக முக்கியம் என்று நம்பி சம்பாதிக்கும் முனைப்பில் தனிப்பட்ட இயல்பான திறமைகளையும், ஆர்வங்களையும் பலி கொடுத்துவிடுகிறார்கள். பணம், பொருள், சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டே போகும் அவர்கள் வாழ்வில் முன்பு கூறியது போல ஓட்டம் இருக்கிறது. உயிர் இருப்பதில்லை. ஒரு வெறுமை என்றும் இருந்து கொண்டே இருக்கிறது. அந்த வெறுமையை நிரப்ப சிலர் போதையை நாடுகிறார்கள், சிலர் கேளிக்கைகளில் அதிகம் ஈடுபடுகிறார்கள், சிலர் பதவி அதிகாரம் தேடி அடைகிறார்கள். வெளிப்பார்வைக்கு அந்த வாழ்க்கை வெற்றியாகவும், மகிழ்ச்சியாகவும் தோன்றினாலும், நிரப்ப முடியாத வெறுமையாகவே வாழ்க்கை இருந்து விடுவதுதான் சோகமானது. எனவே, உங்கள் வாழ்க்கையில் உயிரோட்டம் உள்ளதா என்பதை சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். மாற்றம் தேவையானால் மாற்றிக்கொள்வது அவசியமாகும்.

நன்றி : என்.கணேசன் - நிலாச்சாரல்

**வினாக்கள்**

Q6 பலருடைய தினசரி வாழ்க்கை எந்திரத்தனமாக உள்ளது எனக் கட்டுரை ஆசிரியர் கூறுவதற்கான காரணங்கள் யாவை?

(6 மதிப்பெண்கள்)

Q7 உயிரோட்டமான வாழ்க்கை வாழ்பவர்கள் எவ்வாறு செயல்படுவார்கள்?

(6 மதிப்பெண்கள்)

Q8 'அந்தத் தருணங்கள் மிக அழகானவை' என ஏன் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?

(6 மதிப்பெண்கள்)

Q9 வாழ்க்கையில் வெறுமையைத் தவிர்க்க ஒருவர் செய்ய வேண்டுவன யாவை?

(6 மதிப்பெண்கள்)

**Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)**

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

அ) இலக்குகள்
ஆ) முனைவதில்
இ) குன்றாமல்

**முற்றும்**

BLANK PAGE

Answer Key H2TLL Prelims Exam 2017

**<u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>**

**(5 மதிப்பெண்கள்)**

Q1 வியக்கும்
Q2 தேவையற்ற
Q3 ஒன்றை
Q4 எனவே
Q5 அமைத்திடல்

**சுயவிடைக் கருத்தறிதல் (1) (30 மதிப்பெண்கள்)**

**<u>வினாக்கள்</u>**

Q6 பலருடைய தினசரி வாழ்க்கை எந்திரத்தனமாக உள்ளது எனக் கட்டுரை ஆசிரியர் கூறுவதற்கான காரணங்கள் யாவை?

(6 மதிப்பெண்கள்)

எல்லோருமே வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தேடுகிறோம், ஒரு அர்த்தத்தைத் தேடுகிறோம், வெற்றியடைய ஆசைப்படுகிறோம். மகிழ்ச்சியும், அர்த்தமும், வெற்றியும் எது என்பது ஆளுக்கு ஆள் மாறுபடும் என்றாலும் எல்லோருடைய தேடலும் அவற்றை நோக்கியே இருக்கின்றன. என்றேனும் ஒரு நாளில் வெற்றியடைவோம், வாழ்வில் அர்த்தம் கண்டுபிடிப்போம், மகிழ்ச்சியடைவோம் என்ற எதிர்பார்ப்பில் தினசரி வாழ்க்கையைக் கோட்டை விடும் முட்டாள்தனம் பலரிடம் இருக்கிறது. பலருடைய தினசரி வாழ்க்கை எந்திரத்தனமாக உள்ளது. என்றோ வாழப்போகும் நல்லதொரு வாழ்க்கைக்கான ஓட்டப்பந்தயமாக அமைந்துவிடுகிறது.

Q7 உயிரோட்டமான வாழ்க்கை வாழ்பவர்கள் எவ்வாறு செயல்படுவார்கள்?

(6 மதிப்பெண்கள்)

காலத்தை மறந்து, செய்கின்ற வேலையில் ஐக்கியமாவது உண்டா? பெரிய செலவில்லாமல் ரசிக்கும் சின்னச் சின்ன விஷயங்கள் உண்டா? அடுத்தவர் பார்வைக்கு எப்படி இருக்கிறது என்று கவலைப்படாமல் உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதற்காகவே ஈடுபடும் விஷயங்கள் உண்டா? பெரும்பாலான நாட்களில் உற்சாகமாக எதிர்பார்க்கவும், செய்யவும் ஏதாவது புதுப்புது முயற்சிகள் உண்டா? இவற்றில் ஓரிரண்டு கேள்விகளுக்காவது பதில் ஆம் என்று இருந்தால் உங்கள் வாழ்க்கை அர்த்தத்தோடும், மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் போய்க் கொண்டிருக்கிறது என்று பொருள். அதற்கு எதிர்மாறாக உங்கள் தினசரி வாழ்க்கை இருந்தால் உங்கள் வாழ்க்கையில் உண்மையான உயிரோட்டம் இல்லை என்று பொருள்.

Q8 ‘அந்தத் தருணங்கள் மிக அழகானவை’ என ஏன் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?

(6 மதிப்பெண்கள்)

எடிசன், ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிகளில் மூழ்கிவிடும் போது உலகத்தையே மறந்து விடுவார்களாம். கொண்டுவந்து வைக்கப்படும் உணவை உண்ணக்கூட மறந்து விடுவார்களாம். லியார்னாடோ டாவின்சி, மைக்கேல் ஏஞ்சலோ போன்ற ஓவிய மேதைகளும் அப்படியே தங்கள் படைப்பில் மூழ்கி விடுவார்களாம். அந்த நேரங்களில் செய்யும் வேலையின் சிரமங்களோ, வரப்போகும் லாபங்களோ, கிடைக்கப் போகும் புகழோ அவர்கள் கவனத்தில் இல்லை. அந்தத் தருணங்கள் மிக அழகானவை. உயிரோட்டமுள்ளவை. செய்யும் செயல் முழுமை பெறப் பெற அவர்கள் அடையும் சந்தோஷம் வார்த்தைகளில் அடங்காதது. அதே நேரத்தில் அது அர்த்தமுள்ளதாகவும் அமைந்து வெற்றியையும் அளித்துவிடுகிறது.

Q9 வாழ்க்கையில் வெறுமையைத் தவிர்க்க ஒருவர் செய்ய வேண்டுவன யாவை?

(6 மதிப்பெண்கள்)

தங்கள் வாழ்க்கையில் தங்கள் வழியில் நிறைவு காண்பவர்கள் அடுத்தவர்கள் வாழ்க்கையில் அனாவசியமாகக் குறுக்கிடுவதில்லை. அடுத்தவர்களை நோகடிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகளையும், துக்கங்களையும் சமாளித்து சீக்கிரமே மீண்டும் விடுகிறார்கள். உயிரோட்டமில்லாத வாழ்க்கை வாழ்பவர்களோ அதிகமாக அடுத்தவர்களைப் பார்த்தே வாழ்கிறார்கள். பொருளாதார நிலையே மிக முக்கியம் என்று நம்பி சம்பாதிக்கும் முனைப்பில் தனிப்பட்ட இயல்பான திறமைகளையும், ஆர்வங்களையும் பலி கொடுத்துவிடுகிறார்கள். பணம், பொருள், சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டே போகும் அவர்கள் வாழ்வில் முன்பு கூறியது போல ஓட்டம் இருக்கிறது. உயிர் இருப்பதில்லை.

**Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)**

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

அ) இலக்குகள் - குறிக்கோள்கள், இலட்சியங்கள்
ஆ) முனைவதில் - முயல்வதில், முயற்சிப்பதில்
இ) குன்றாமல் - குறையாமல்

**முற்றும்**

INNOVA JUNIOR COLLEGE
PRELIMINARY EXAMINATION 2017
in preparation for General Certificate of Education Advanced Level
**Higher 2**

| | |
|---|---|
| CANDIDATE NAME | |

| | | | |
|---|---|---|---|
| CLASS | | INDEX NUMBER | |

**தமிழ் மொழி, இலக்கியம்**
**தாள் 2**
**TAMIL LANGUAGE & LITERATURE**
Paper 2

**9567/2**

**29 August 2017**

**1 hr**

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்:**

1. இத்தேர்வில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.
2. கொடுக்கப்பட்டிருக்கும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப்ப படித்து, அவற்றையொட்டி அமைந்த வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.
3. தேர்வாளர் கூறியதும் ‘START’ என்பதைக் கிளிக் செய்து தேர்வைத் தொடங்கவும்.

| Section | Qn No | Marks |
|---|---|---|
| கேள்வி 11 | | / 4 |
| கேள்வி 12 | | / 5 |
| கேள்வி 13 | | / 6 |
| கேள்வி 14 | | / 15 |
| Total | | / 30 |

This document consists of 4 printed pages including cover page.

**சுயவிடைக் கருத்தறிதல் (2)**

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

**<u>பனுவல் ஒன்று</u>**

**பெற்றோரின் கவனம்**

உடல், மன, ஆன்மீக ரீதியான ஒட்டு மொத்த வளர்ச்சியையும் தெரிந்து கொள்வதையும் உள்ளடக்கியதே உண்மையான கல்வி. இன்று கல்வி என்பதன் வரையறை மாறி வெறும் புத்தக அளவிலே இருக்கிறது. உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதை இன்றைய கல்வி கற்றுக் கொடுப்பது கிடையாது. குழந்தைக்காகப் பணம் ஒதுக்க முடிந்த பெற்றோர்களால் அவர்களுக்காக நேரம் ஒதுக்க முடிவதில்லை.

அயராமல் உழைத்து முன்னேற வேண்டும் என்று நினைப்பவர்கள், யாருக்காக உழைக்கிறோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். குழந்தைகளுக்காகக் கட்டாயம் நேரம் ஒதுக்கி, அவர்களின் மீது கவனம் கொள்ள வேண்டும். முன்பு போலக் கூட்டுக் குடும்பமாக வாழாததால் பெரியோர்களிடமிருந்து போதிய அறிவுரைகள் குழந்தைகளுக்குக் கிடைப்பதில்லை. நல்ல வழிகாட்டல் இல்லையென்றால், அவர்களது எல்லையற்ற ஆற்றல்களெல்லாம் தவறான வழிகளில் வீணாகும் வாய்ப்பு உண்டு. தீய நண்பர்களுடன் சேர்ந்து, பண்பாட்டுப் பிறழ்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, எப்படியும் வாழலாம் என்ற எண்ணம் உருப்பெற்று விடுகிறது.

குழந்தைகள் நல்லவர்களாக வளர்ந்து குழந்தைகளின் வாழ்வு சிறக்க வேண்டும் என்றால் பெற்றோரோ, குடும்பத்தினரோ கட்டாயமாகத் தங்கள் அணுகுமுறைகளை மாற்ற வேண்டும். இன்றைய காலக் கட்டத்தில் எதிர்மறையான எண்ணம் உடையவர்களைப் பார்த்து அவர்களைப் போலச் சீரழிந்தும் போகிறார்கள். இவ்வாறு நிகழாமல் இருக்க வேண்டுமாயின் பெற்றோரின் கண்காணிப்பு தேவை.



**(அடுத்த பக்கம் பார்க்க)**

**<u>பனுவல் இரண்டு</u>**

**வலைப்பூ**

| **கருத்துக்களம்** | | | | |
|---|---|---|---|---|
| என்னைப் பற்றி | என்னைத் தொடர்புகொள்ள | என் படைப்புகள் | என் நண்பர்கள் | ஆவணங்கள்<br>• 2013<br>• 2014<br>• 2015 |
| | | | | |

**<u>அச்சுறுத்தும் தொலைக்காட்சிப் பயன்பாடு</u>**

இன்றைய குடும்பங்கள் தொலைக்காட்சியில் புதைந்து கொண்டிருக்கின்றன. பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை அதன் முன்னால் தங்களுடைய நேரத்தின் பெரும்பகுதியைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நடுவே யார் வீட்டிற்கு வந்தாலும் அவர்களைத் தொந்தரவாகவே நினைக்கும் மனோபாவம் பெருகி வருகிறது. ஒரு காலத்தில் கூட்டுக் குடும்பங்கள் நிறைய இருந்தன. வீட்டிற்குள் ஆட்கள் பலர் இருந்தனர். கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள நிறைய ஆட்களும் வாய்ப்புகளும் இருந்தன. ஆனால் இன்று தனிக்குடும்பங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. பெரும்பாலும் வீட்டில் நான்கைந்து நபர்களே இருக்கின்றனர். அவர்களுக்குள்ளும் மனம்விட்டுப் பேசுதலும், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுதலும் இல்லாமல் போக தொலைக்காட்சி ஒரு முக்கியக் காரணமாக இருக்கிறது என்பதே உண்மை.

வீட்டுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் அந்நியராக இருக்கும் அவலம் இன்று அதிகமாகி வருகிறது. ஓய்வு நேரங்களில் இருப்பது தொலைக்காட்சி முன்னால்தான். அதனால் ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பேசுவது என்பது குடும்பங்களில் அபூர்வமாகி வருகிறது. வீட்டுக்குள்ளேயே இந்த நிலை என்றால் அக்கம்பக்கத்து வீட்டாருடன் இருக்கும் உறவு பற்றிக் கேட்கவே வேண்டாம். அடுத்த வீட்டில் இருப்பவர்கள் பற்றி எதுவுமே தெரியாமல் இருப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

சிறார்கள் ஓடியாடி விளையாடுவது குறைந்துவரும் அவலம் இன்று சிறிது சிறிதாக அரங்கேறி வருகிறது. நல்ல திறமைகள் உள்ளவர்களுக்கு அந்தத் திறமைகளை வளர்த்துக்கொள்வதில் ஈடுபாடு குறைவதற்கும் இந்தத் தொலைக்காட்சிப் பழக்கம் காரணமாகிவிடுகிறது. புத்தகங்கள் படிக்கும் பழக்கமும் குறைந்துவிடுகிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலேயே மூழ்கிக் கிடக்கும் குடும்பங்களில் இருப்போரின் மன வளர்ச்சியும் மனப்பக்குவமும் வாழ்க்கையைச் சந்திக்கப் போதுமான அளவில் இருப்பதில்லை. தொலைக்காட்சி பார்ப்பதிலேயே மூழ்கிக் கிடப்பவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சியுடையதாக இருப்பதற்கான சாத்தியம் மிகக் குறைவு என்று சமீபத்திய ஆராய்ச்சி ஒன்றில் கண்டிருக்கிறார்கள்.

**உங்கள் கருத்து…**

**(அடுத்த பக்கம் பார்க்க)**

**<u>வினாக்கள்</u>**

Q1. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று)

(4 மதிப்பெண்கள்)

*நல்ல வழிகாட்டல் இல்லையென்றால், அவர்களது எல்லையற்ற ஆற்றல்களெல்லாம் தவறான வழிகளில் வீணாகும் வாய்ப்பு உண்டு.*

(அ) குறிப்புவினை

(ஆ) ஆறாம் வேற்றுமை உருபேற்ற சொல்

Q2. குழந்தைகளின் வாழ்வு சிறக்க பெற்றோர் மேற்கொள்ள வேண்டுவன யாவை? (பனுவல் ஒன்று)

(5 மதிப்பெண்கள்)

Q3. கருத்துகள் அடிப்படையில் பனுவல் ஒன்று பனுவல் இரண்டிலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கிறது? (இரண்டு பனுவல்களிலிருந்தும்)

(6 மதிப்பெண்கள்)

Q4. இன்றைய வாழ்க்கை முறையில், 'வீட்டுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் அந்நியராக இருக்கும் அவலம் இன்று அதிகமாகி வருகிறது' என்பதற்குக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுள்ள காரணங்கள் ஏற்புடையனவா என்பது பற்றிய உனது கருத்துகளை 140 சொற்களில் எழுதுக.

(பனுவல் இரண்டு)

(15 மதிப்பெண்கள்)

**முற்றும்**

Answer Key

**<u>வினாக்கள்</u>**

Q1. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று)

(4 மதிப்பெண்கள்)

*நல்ல வழிகாட்டல் இல்லையென்றால், அவர்களது எல்லையற்ற ஆற்றல்களெல்லாம் தவறான வழிகளில் வீணாகும் வாய்ப்பு உண்டு.*

(அ) குறிப்புவினை - உண்டு

(ஆ) ஆறாம் வேற்றுமை உருபேற்ற சொல் - அவர்களது

Q2. குழந்தைகளின் வாழ்வு சிறக்க பெற்றோர் மேற்கொள்ள வேண்டுவன யாவை? (பனுவல் ஒன்று)

(5 மதிப்பெண்கள்)

குழந்தைகளின் வாழ்வு சிறக்க, அவர்களை ஓடியாடி விளையாடச் செய்தல், நல்ல திறமைகள் உள்ள குழந்தைகளிடையே அந்தத் திறமைகளை வளர்த்துக்கொள்ள ஊக்குவித்தல், புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலேயே மூழ்கிக்கிடப்பதை கண்ணகானித்தல் போன்ற செயல்களை மேற்கொள்ள வேண்டும்.

Q3. கருத்துகள் அடிப்படையில் பனுவல் ஒன்று பனுவல் இரண்டிலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கிறது? (இரண்டு பனுவல்களிலிருந்தும்)

(6 மதிப்பெண்கள்)

பனுவல் இரண்டு, இக்காலக் குடும்பங்களில் தொலைக்காட்சியின் ஆதிக்கம், அதனால் குடும்ப உறுப்பினர்களிடையே ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பேசாதிருப்பதால் ஏற்பட்டுள்ள அந்நியத்தன்மை மற்றும் குழந்தைகள் விளையாட்டு, வாசிப்பு போன்றவற்றில் ஈடுபடாதது பற்றிக் குறிப்பிடுகிறது. பனுவல் ஒன்று, பிள்ளைகள் கூட்டுக்குடும்ப அமைப்பில் பெரியோர்களிடமிருந்தும் வழிகாட்டுதல் இன்றி வளர்வதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் இவ்விளைவுகளைத் தவிர்க்க, பெற்றோர் தம் அணுகுமுறைகளை மாற்றி பிள்ளைகளின் முழுமையான வரச்ச்சியைக் கண்காணிக்க வேண்டும் என்பதையும் குறிக்கிறது. இவ்வாறு பனுவல் ஒன்று பனுவல் இரண்டிலிருந்து வேறுபடுகிறது.

Q4. இன்றைய வாழ்க்கை முறையில், ‘வீட்டுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் அந்நியராக இருக்கும் அவலம் இன்று அதிகமாகி வருகிறது‘ என்பதற்குக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுள்ள காரணங்கள் ஏற்புடையனவா என்பது பற்றிய

உனது கருத்துகளை 140 சொற்களில் எழுதுக. (பனுவல் இரண்டு)

(15 மதிப்பெண்கள்)

சுயவிடை

**முற்றும்**

# Jurong Junior College

# JC2 Preliminary Examination 2017

**தமிழ்மொழி - உயர்தரம் 2**
**தாள் 1 (பகுதி 1)**
**H2 Tamil Language and Literature**
**Paper 1 (PART 1)**

**9567/ 1**

**12 September 2017**
**08:00 – 10:30**

**2 hours 15 mins**

(Total time for Part 1 and Part 2 )

---

**தேர்வு எழுதுவோருக்கான குறிப்புகள்**

1. இவ்வினாத்தாளின் பகுதி 1, 2 தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விரண்டு பகுதிக்கும் விடையளிப்பதற்கு 2 மணி 15 நிமிடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

2. முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில்/ விடைத்தாளில் எழுத வேண்டும்.

3. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்

4. **அகராதியைப் பயன்படுத்துதல்;**
   அ) பகுதி 1 - க்கு விடையளிக்கும்போது நீ அங்கீகரிக்கப்பட்ட அகராதியைப் பயன்படுத்தலாம்.

   ஆ) பகுதி 2 – க்கு விடையளிக்கும்போது நீ **அகராதியைப் பயன்படுத்துக்கூடாது**.

5. பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும்/விடைத்தாளினையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

பெயர்:_______________________________ வகுப்பு:_______________

( Questions are printed from page 2 only)

( இவ்வினாத்தாள் 2 அச்சடிக்கப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது)

# ஜூரோங் தொடக்கக் கல்லூரி
# முன்னோட்டத் தேர்வு
# உயர்தரம் 2 தமிழ் மொழி
# தாள் 1


**1. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ <u>350</u> சொற்களில் ஒரு கட்டுரை வரைக.** (35 மதிப்பெண்கள்)

Q1 'ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் முன் திட்டமிட்ட பின்னர் செய்வதுதான் வெற்றியைத் தரும்' - கருத்துரைக்க.

Q2 "பெற்றோர்கள் இளையர்களுக்கு அளவுக்கு அதிகமாகச் சுதந்திரம் கொடுக்கிறார்கள்". - விவாதிக்க.

Q3 சிங்கப்பூரில் அமைதியும் ஒற்றுமையும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டியதன் அவசியத்தையும், அவை நிலைத்திருக்கச் செய்ய நீவிர கூறும் ஆலோசனைகள் பற்றியும் விளக்கி எழுதுக.

Q4 பின்வரும் சூழலைக் கருத்தில் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக .



முற்றும்

2

# Jurong Junior College
# JC2 Preliminary Examination 2017

**தமிழ்மொழி - உயர்தரம் 2** **9567/ 1**
**தாள் 1 (பகுதி 2 )**
**H2 Tamil Language and Literature**
**Paper 1 (PART 2)**

**12 September 2017**
**08:00 – 10:30**

(Total time for Part 1 and Part 2 ) **2 hours and 15 mins**

**தேர்வு எழுதுவோருக்கான குறிப்புகள்**

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்

2.. **அகராதியைப் பயன்படுத்துதல்;**

ஆ) பகுதி 2 – க்கு விடையளிக்கும்போது நீ **அகராதியைப் பயன்டுத்துக்கூடாது**.

3. பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும்/விடைத்தாளினையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

பெயர்:_______________________________ வகுப்பு:_______________

(இவ்வினாத்தாள் **5** அச்சடிக்கப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது )

(This question paper have **5** printed pages)

# ஜூரோங் தொடக்கக் கல்லூரி
# முன்னோட்டத் தேர்வு

## உயர்தரம் 2 தமிழ் மொழி
## தாள் 1 ( Part 2 )

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

முதல் பகுதியின் முகப்பு அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பார்க்கவும்.

## **'அ 'பிரிவு**

**முன்னுணர்வுக் கருத்தறிதல்** (5 மதிப்பெண்கள்)

உண்மையான பேச்சாற்றல் என்பது, மேடையில் பேசுவதைவிட, பேசும் உரையாடலில் தெளிவாக இருப்பதாகும். மேடைப் பேச்சு நன்றாக அமைந்தால், சில நேரங்களில் கொஞ்சம் பாராட்டு கிடைக்கலாம்; ஆனால், தனிப்பட்ட உரையாடல்களே நல்ல (Q1)__________ நமக்குப் பெற்றுத் தருகின்றது. உரையாடலிலும், எப்படிப் பேச வேண்டும் என்று தெரிந்து வைத்திருப்பதை விட (Q2)__________ பேசாமல் இருப்பது என்று தெரிந்து வைத்திருப்பது மிக அவசியம். மௌனம் கரன்ஸி நோட்டைப் போன்றது; அது எப்போதும் அமைதியாகவே இருக்கும்'. பேச்சின் மதிப்பைவிட மௌனத்தின் மதிப்பே உயர்ந்தது என்பார்கள்.

கோபத்தில் நாம் காக்கும் அமைதி, நமக்கே மிகவும் பாதுகாப்பாக விளங்குகின்றது. அதில், எப்போதும் நாம் (Q3)__________ காண்பதில்லை. அதே நேரம், நமது அமைதியே சிலசமயங்களில் அடுத்தவருக்குத் தண்டனையாகவும் விளங்குகின்றது; நம்மை அவர்களுக்கு (Q4)__________ வைக்கின்றது. நமக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்ல ஆரம்பித்தாலும் பேசிக்கொண்டேயிருப்போம்; எல்லாம் தெரியும் என்று நினைத்தாலும் பேசிக் கொண்டே இருப்போம். இந்த இரண்டுமே, மற்றவர்களிடம் நம்மைப்பற்றிய ஏளன (Q4)__________உருவாக்கும்.'சொல்லாத சொல்லுக்கு விலை ஏதுமில்லை' என்ற கண்ணதாசனின் திரைப்பாடல் வரிகள், வாழ்க்கையைக் காதலிக்கும் எவருக்கும் வழிகாட்டுபவைகளாக இருக்கும்.

**'ஆ 'பிரிவு**

**சுயவிடைக் கருத்தறிதல்** (30 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியைப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

நகர வாழ்க்கையின் நெருக்கடிகள் பணத்தின் மீது ஆர்வத்தை அதிகரித்திருக்கின்றன. பொருளாதாரத்தால் சாதித்தவர்களைக் கண்டு மற்றவர்களும் அந்தப் பாதையைப் பின்பற்றத் தொடங்குகின்றனர். வாழ்க்கையே பொருளாதாரத்தை மேம்படுத்துவது மட்டும்தான், என்ற நினைப்பு **மேலோங்கி** இருக்கிறது. பொருளாதாரத்தைக் கடந்த, வாழ்வியலை மறந்து கொண்டிருக்கிறோம். பள்ளி, கல்லூரியில் படிக்கும் மாணவர்களும் அதிகமான ஊதியத்தைத் தரக்கூடிய படிப்பு, நல்ல வேலையை வரவேற்கும் வகையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். இதற்கு முக்கிய அடிப்படைக் காரணமாக "பொதுநலன், இரக்கம் போன்றவை குறைந்து வருவது, சுயநலம் பெருகி வருவது" போன்றவையே ஆகும் என உளவியலாளர்கள் கருதுகிறார்கள்.

பொதுநலன், இரக்கம் போன்றவை அதிகரிக்க வேண்டுமானால் அதற்கான சூழ்நிலைகள் நம்மைச் சுற்றி இருக்க வேண்டும் அல்லது அதனை உருவாக்கிக்கொள்ள வேண்டும். கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை மறைந்து வரும் வேளையில் சூழ்நிலைகள் இயற்கையாகவே அமைவதற்கான **வாய்ப்புகள்** குறைவாக உள்ளன. வளரும் இளம் தலைமுறைக்கு தேவையானதைக் கற்றுக்கொடுப்பதன் மூலமே சுயநலத்தை மாற்ற முடியும். கற்றுக்கொடுத்தல் என வரும்பொழுது அதில் பெரும் பங்கு வகிப்பது புத்தகங்கள்.ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரி தெரிவதைப்போல், தெரிவதை மாற்றக்கூடிய திறன் புத்தகங்களுக்கு உண்டு. ஏனெனில் புத்தகங்கள் அனைத்தும் ஒரே மாதிரியான பார்வையையோ, கருத்துக்களையோ, கொள்கைகளையோ கொண்டிருப்பதில்லை. அவை **மாறுபட்ட** கோணத்தில் நம்மைச் சிந்திக்க வைக்கும் பணியை வெற்றிகரமாகச் செய்கின்றன. ஒரு புத்தகத்தை வாங்கிவிட்டோம் என்றால் அந்தப் புத்தகம் நாம் விரும்பும் நேரமெல்லாம் அதன் கருத்தை நம்மோடு பகிர்ந்துகொள்கிறது. மற்றொரு புத்தகத்தைப் படிக்கும் பொழுது அது வேறு ஒரு கோணத்தில் இந்த உலகைப் பார்ப்பதற்கு உதவி செய்கிறது.

படித்த மாறுபட்ட புத்தகங்கள் சிந்தனையைத் தூண்டுகிறது. சிந்தனை தேடுதலை உண்டாக்குகிறது. தேடுதல் நாம் அறிந்திராத பல கண்டுபிடிப்புகளை நம்மை கண்டுகொள்ள வைக்கிறது. ஒரு இயல்பான வாழ்க்கை முறையை மாற்றிச் செயல்திறன் வாய்ந்த **புதிய வாழ்க்கைக்குள் அழைத்துச் செல்லும் பணியைப் புத்தகங்கள் சிறப்புறச் செய்கின்றன**. நாம் சந்தித்திராத மனிதர்களின் வாழ்க்கையை, தெரியாத

அறிவியலை, புரியாத வரலாற்றை, உலகின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் கலையை, மரபுகளை புத்தகங்கள் நமக்குத் தெரியப்படுத்துகின்றன.இளம் தலைமுறைக்கு மின் சாதனங்களிலிருந்து விடுதலை அளித்துப் புத்தகங்களை கையில் எடுக்க வைப்பது அவசியமாக இருக்கிறது. கண்களுக்கும், பொருளாதாரத்திற்கும் பாதிப்பைத் தரும் அவற்றை விட்டு, புத்தக வாசிப்பு பழக்கத்திற்கு அழைத்து வருவது ஒரே நாளில் வந்துவிடாது. அதனைச் சிறு வயதிலிருந்தே பழகிக் கொள்வது நம் கடமை ஆகும்.



**வினாக்கள்**

Q6 இன்றைய வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை?

(6 மதிப்பெண்கள்)

Q7 பொது நலப் பண்பை இளையர்கள் பெற முடியாமல் போவது ஏன்?

(6 மதிப்பெண்கள்)

Q8 புத்தகங்கள் எவ்வகையில் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன என்று கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?

(6 மதிப்பெண்கள்)

Q9 **புதிய வாழ்க்கைக்குள் அழைத்துச் செல்லும் பணியைப் புத்தகங்கள் சிறப்புறச் செய்கின்றன** என்று கூறுவதற்குரிய காரணங்கள் யாவை?

(6 மதிப்பெண்கள்)

## Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.

அ) மேலோங்கி

ஆ) வாய்ப்புகள்

இ) மாறுபட்ட

**5**

முற்றும்

# Jurong Junior College

## JC 2 Preliminary Examination 2017

## ஜூரோங் தொடக்கக் கல்லூரி

தமிழ்மொழி, இலக்கியம் - உயர்தரம் 2

தாள் 3

**H2 Tamil Language & Literature**

**Paper 3**

**9567/3**

**25 August 2017**

**08:00 – 11:00**

**3 hours**

**தேர்வாளர்களுக்கான குறிப்புகள்**

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர், விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும், வகுப்பையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3. இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள வினாக்கள் பக்கம் 2-3இல் அச்சிடப்பட்டுள்ளன.

(Questions are printed from page 2 to 3 )

பெயர்:_____________________________ வகுப்பு:________________



**முக்கியக் குறிப்புகள்**

**மொத்தம் *நான்கு* வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

**‘அ’ பிரிவு**

## Q1. கவிதை

(அ) ‘கழிவறைக் குழந்தை’ என்னும் கவிதையில் குழந்தையின் மன உணர்வுகளைக் கவிஞர் வெளிப்படுத்தும் பாங்கினை விளக்குக.

(12 மதிப்பெண்கள்)

(ஆ) ‘மனிதன் என்பவன் தெய்வமாகலாம்‘ எனும் கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள்

உணர்த்தும் கருத்துகளைக் குறிப்பிடுவதோடு இப்பாடல் வரிகள் உனக்குள் ஏற்படுத்திய தாக்கத்தையும் பற்றி விளக்குக.

(13 மதிப்பெண்கள்)

**அல்லது**

Q2 பாரதி தாசன் தன்னுடைய விருப்பங்களை 'எந்நாளோ? ' என்னும் கவிதையில் கூறியிருப்பது இக்காலச் சூழலில் நிறைவேறுமா – விவாதிக்க.

(25 மதிப்பெண்கள்)

**<u>'ஆ' பிரிவு</u>**

**<u>சிறுகதை</u>**

Q3 தான் பிறந்த நாட்டில் இருந்து தனக்குரிய கடமைகளைச் செய்யாத தமிழன், நாடோடியாய் இருப்பதில் எந்த வித நன்மையும் இல்லை என்னும் விழுமியத்தை 'நாடோடிகள்' என்னும் சிறுகதை உதவியுடன் விளக்குக.

**அல்லது**

Q4 'ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது' என்ற தலைப்பு அக்கதைக்குப் பொருந்தும் விதத்தைப் பொருத்தமான சான்றுகளுடன் விளக்குக.

**<u>நாடகம்</u>**

Q5 புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை ‘ சிங்கப்பூர் மாப்பிள்ளை ’ என்னும் நாடகத்தின் துணைகொண்டு விளக்குக.

**அல்லது**

Q6 ‘காதல் என்ன விலை’ என்ற நாடகத்தில் இடம்பெறும் வள்ளியம்மை என்னும் கதாப்பாத்திரம் இன்றைய வாழ்க்கைப் போராட்டங்களைச் சந்திக்கும் பெண்களை மையமாகக் கொண்டு அமைகிறது – கருத்துரைக்க.

**<u>நாவல்</u>**

Q7 கரித்துண்டு நாவலில் இடம் பெற்றிருக்கும் நிர்மலாவின் கடிதம் நாவல் வளர்ச்சிக்கு எந்த அளவில் உதவியாக உள்ளது என்பது தொடர்பான கருத்துக்களை விளக்கி எழுதுக.

**அல்லது**

Q8 கரித்துண்டு என்னும் நாவல் ஒட்டுமொத்த மனித சமுதாயத்தின் பிரதிபலிப்பு என்று கூறலாமா - ஆராய்க.



**முற்றும்**

JURONG JUNIOR COLLEGE

PRELIMINARY EXAMINATION

J2 H2

Tamil Language and Literature

Paper 1 – Part 1

Answer key

**2. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை வரைக.** **(35** மதிப்பெண்கள்**)**

Q1 'ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் முன் திட்டமிட்ட பின்னர் செய்வதுதான் வெற்றியைத் தரும்' - கருத்துரைக்க.

- வாழ்க்கையில் எல்லோரும் தாம் செய்யவிரும்பும் எந்த ஒரு செயலிலும் வெற்றி பெறவே விரும்புகின்றனர்.
- அவ்வாறு வெற்றி பெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அது அவரவர் செய்யும் செயல் , அதற்கான முயற்சி, தொடர் உழைப்பு, ஊக்கம், தடைகளை மீறிச் செயல்படுவது என்று பல கூறுகளைக் கூறலாம்.
- இவை அனைத்திலும் எதையும் திட்டமிடாமல் செய்பவர்கள் வெற்றி பெறுவது மிகவும் கடினம்.
- எனவே திட்டமிட்ட ஒருவர் வெற்றிபெறுவதற்கு அத்திட்டம் பல வழிகளைக் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும்.
- தனிமனிதனோ, நாடோ, சமூகமோ எந்த ஒரு செயலையும் திட்டமிட்டுச் செய்யும்போது அங்கு வெற்றிக் கதவு கண்டிப்பாக மூடப்பட்டிருக்காது.
- வெற்றிமணியின் ஓசையைக் கேட்பதில் எந்தவிதத் தடையும் இல்லை.
- திட்டமிடுவதற்கு முன்பு எதை?எப்போது? எப்படி? எத்தகைய சூழலில் செய்யப்போகிறோம் என்பதில் திட்டமிருந்தால் வெற்றி நிச்சயம்.
- சோர்வும் சோம்பறித்தனமும் இருப்பவனுக்கு கடுகளவு செயலும் மலையாகத் தோன்றும்.
- கால்களில் கட்டியிருக்கும் இரும்புச் சங்கிலியை இலவம் பஞ்சாக மாற்ற விரும்புபவன் இரும்புச் சங்கிலியை எப்படி உடைக்கவேண்டும் என்பதைத் தெரிந்து வைத்திருந்தால் மட்டுமே அதனை உடைக்க முடியும்.
- திட்டமிடாத செயல் திடீரென்று ஏற்படும் தடையால் வெற்றிவாய்ப்பைத் தடுத்து விடும்.

- தடைகளை வென்று வெற்றிக்கனியைப் பறிக்க விரும்புபவன் தன் திறமை, முயற்சி, வாழ்க்கைச் சூழல் முதலிய அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு தன் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தினால் வெற்றி நிச்சயம்.
- மேலே சொல்லப்பட்ட கருத்துக்கள் அடிப்படையில் நல்ல மொழி நடையில் கருத்து வளர்ச்சியுடன் தலைப்புஒட்டி அமைந்தகட்டுரை சிறப்பான மதிப் பெண் பெற முடியும்.

Q2 “பெற்றோர்கள் இளையர்களுக்கு அளவுக்கு அதிகமாகச் சுதந்திரம் கொடுக்கிறார்கள்”. - விவாதிக்க.

- இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்களாக வருவதில் முதல் பங்கு பெற்றோர்களுக்குத் தான்.
- அன்னையையும் தந்தையையும் முன்னறி தெய்வங்களாக எண்ணும் இளையர்களுக்கு இன்றைய பெற்றோர்கள் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுத் தருவதோடு அவர்களுக்கு அளவுக்கு அதிகமான சுதந்திரம் கொடுக்கிறார்கள் என்பதில் பலருக்கு உடன்பாடும் உண்டு. மாற்றுக் கருத்தும் உண்டு.
- இதற்குக் காரணம் அவர்கள் கொண்ட அளவுக்கதிகமான பாசமும் அன்புமே ஆகும்.
- இவ்வுலகில் எல்லாவகை மதம், இனம், நாடுகளில் ஏன் எங்குமே குடும்பமே அடிப்படை அமைப்பு ஆகும்.
- அதில் பெற்றோர்களே முதன்மை பாதுகாவலர், வழிநடத்துனர், முன்மாதிரிகள் என்று கூறலாம்.
- இன்றைய தலைமுறையினர் எதையும் நினைத்த உடன் பெறலாம் என்ற எண்ணத்தில் வசதியான மகிழ்ச்சியான தன்னிச்சையான வாழ்க்கை வாழத்தான் விரும்புகின்றனர்.
- கேட்டது கிடைக்கும்போது எதுவும் செய்ய விரும்பும் மனத்தைக் கட்டுப்படுத்தி அவர்களை நல்ல குடிமக்களாக உருவாக்குவதில் பெற்றோர்கள் சற்று விழிப்புடன் இருக்கவேண்டும்.
- இணைய வசதியும் பெற்றோரின் பண வசதியிம் அவர்களை எங்கும் எப்படியும் இணைய வைக்கிறது.
- தங்களுக்கென உள்ள கடமை, பொறுப்புணர்வு, கல்வி என்று அனைத்திலும் கட்டுக்கோப்புடன் செயல்படுவதை அவர்கள் தங்களின் கடமையாகக் கொள்ளவேண்டும்.
- தங்காள் விரும்பிய ஒன்று கிடைப்பதற்கு அவர்கள் எதையும் செய்யத் துணிவர்.
- தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரம் போதாது இன்னும் வேண்டும் என்று எதிர்பார்க்கும் அவர்களுக்கு எது நல்லது எது கெட்டது என்பதைப் புரியவைக்க இன்று பெற்றோர்களுக்கு நேரமில்லை.
- பணம், வசதிகள், புகழ் என்பனவற்றைத் தேடி அலையும் அவர்கள் கண்டிப்புடன் கூடிய சுதந்திரத்தை அளித்து நாடும் வீடும் போற்றும் நல்லவர்களை உருவாக்கத் தம்மால் ஆன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

Q3 சிங்கப்பூரில் அமைதியும் ஒற்றுமையும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டியதன் அவசியத்தையும், அவை நிலைத்திருக்கச் செய்ய நீவிர கூறும் ஆலோசனைகள் பற்றியும் விளக்கி எழுதுக.

- நாடு என்பது நாம் அனைவரும் வாழும் ஒரு இல்லமாகும். இந்நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் இருப்பதைத்தான் அனைவரும் விரும்புகிறோம்.
- தனிமனித அமைதியே ஒரு நாட்டின் அமைதிக்கு அடிப்படை ஆகும்.
- பல இன சமூகங்கள் வாழும் நாட்டில் இது இன்னும் அதிகம் எதரிபார்க்கப்படுகின்றது.
- ஒற்றுமை , புரிந்துணர்வுடன் நடப்பது அவசியம். அப்போதுதான் எந்தப் பிரச்சனையும் பொதுவானதாக இருப்பதுடன் குறிப்பிட்ட ஒருவரைப் பற்றியதாக அமையாது.
- வேற்றுமையில் ஒற்றுமை என்பது இன்றைய உலகிற்கு மிக இன்றியமையாத ஒன்றாகும்.
- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு இல்லை என்றால் அமைதி குலைந்து நாட்டு மக்களிடையே பெரும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு மக்களிடையே பிரச்சனைகள் தலைதூக்கும்.
- பிற மொழி பேசுபவரது மொழியையும் கலாச்சாரத்தையும் மதித்தல்.
- ஒன்றுபட்டால் பிற நாட்டினரது எதிர்ப்பையும் தீவிரவாதத்தாக்குதலையும் நம்மால் சமாளிக்க முடியும்.
- கல்வி கற்கும் பள்ளிகளில் இருந்து சமூகம் வரை அனைவரும் ஒன்றிணைந்து அனைத்து விழாக்களையும் கொண்டாடுதல் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த சிறந்த வழியாகும்.
- நாடு நமக்கென்ன செய்தது என்று கேட்பதை விட நாம் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லவர்களாக இருப்போம்.
- யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பொது உணர்வு பொது உறவை பிறருடன் ஏற்படுத்தும் நம் சிங்கையில் என்றும் ஒற்றுமையை, அமைதியைக் கட்டிக்காப்பது நம் கடமை.

Q4 பின்வரும் சூழலைக் கருத்தில் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக ( படக்கட்டுரை).

- பிரச்சினைகளுக்கு காரணமாகும் சமூக வலைதளங்கள்- அண்மைக்கால சோக நிகழ்வுகள் இன்று பல நடந்து வருகின்றன.
- பலரும் வசதியாக பல தகவல்களைப்பெற்றாலும் இணைய வசதி இல்லை என்றால் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.
- மனித உறவுகளின் தொடர்பை மேம்படுத்துவதற்காக வந்த சமூக வலைதளங்கள், இன்று பல் வேறு பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக உள்ளதாக கூறப்படுகிறது.
- அந்தரங்க விஷயங்களை நிமிடத்துக்கு நிமிடம் சமூக வலைத் தளங்களில் பகிர்வதால் ஏற்படக் கூடிய விபரீத பின்விளைவுகளைப் பற்றி நம்மில் பலரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.
- ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த கணக்கெடுப்பின்படி சமூக வலைதளங்களில் 147 கோடி பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இந்த எண்ணிக்கை அதற்கு அடுத்த ஆண்டின் இறுதியில் 173 கோடியாக உயர்ந்திருக்கிறது.
- உலகில் நான்கில் ஒருவர் சமூக வலைதளங்களை பயன்படுத்துவ தாக ஆய்வு ஒன்று கூறுகிறது.

- முழுக்க முழுக்க மனித உறவையும், தொடர்பையும் மேம்படுத்து வதற்காக வந்ததாக சொல்லப்படுகிறது.
- ஆனால் கடந்த கால சம்பவங்கள் சிலவற்றை வைத்து பார்க்கும் போது சமூக வலைதளங்களால் பிரச்சினைகளே அதிகம் என்பது உறுதியாகிறது.
- மனித குலம் சந்தித்த புரட்சிகளில் மிக உன்னதமானதும், வலிவானதும், ஆபத்தானதும் தகவல் தொழில் நுட்ப புரட்சி தான்.
- அது நம் தினசரி வாழ்வில் ஊடுருவிய விதம் நமக்கு யோசிக்க கூட அவகாசம் இல்லாமல் போனது.
- கை பேசியும் இணையதள இணைப்பும் இல்லை என்றால் நமது இளைய தலைமுறை பைத்தியம் பிடித்து செய்வது அறியாமல் திகைத்து நிற்கும். இத்தகைய இன்றியமையாத ஒன்றை கையாளும் பொழுது நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.
- முக நூலில் நாம் பதிவேற்றம் செய்யும் ஒவ்வொரு செய்தியும் நாம் உதிர்க்கும் வார்த்தைகள் போல. ஒரு முறை எழுதிவிட்டால் பிறகு அது நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்காது.
- மேலும் அந்தச் செய்தி எங்கெல்லாம் செல்கிறது, யாரெல்லாம் படிக்கிறார்கள், எப்படியெல்லாம் மற்றவர்களுக்கு பகிரப் படுகிறது என்பது நமக்கே தெரியாது. எனவே ஒட்டு மொத்த சமூகத்திற்கும் தகவல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை அளிப்பது நமது கடமையாகும்.

## End

J2 H2 TLL PRELIMINARY EXAMINATION

Paper 1 – Part 2

Answer key

**'அ 'பிரிவு**

**முன்னுணர்வுக் கருத்தறிதல்** ( 5 மதிப்பெண்கள்)

(Q1) பாராட்டை
(Q2) எப்போது
(Q3) வெற்றி
(Q4) புரியவும்
(Q5) எண்ணத்தை

**ஆ 'பிரிவு**

**சுயவிடைக் கருத்தறிதல்** ( 30 மதிப்பெண்கள்)

(Q6) இன்றைய வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை?
( 6 மதிப்பெண்கள்)

1. பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் உயர்ந்து நிற்பதால் உண்மையான வாழ்க்கை மறக்கப்படுகின்றது.
2. பள்ளி கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் நல்ல வருமானத்தைப் பெற்றுத்தரும் வேலையைப் பெறுவதில் அக்கறை கொள்கின்றனர்.
3. பொதுநலம் , இரக்கம் என்ற உயர்ந்த எண்ணங்கள் குறைந்து சுயநல எண்ணம் பெருகி வருகிறது.

(Q7) பொது நலப் பண்பை இளையர்கள் பெற முடியாமல் போவது ஏன்?

(6 மதிப்பெண்கள்)

1. கூட்டுக் குடும்பத்தில் பிள்ளைகள் வளர்ந்தபோது எதுவும் இயல்பாக இருந்தது.
2. ஆனால் அத்தகைய சூழல் இன்று இல்லாததல் இயற்கையாக அமையும் சூழல் ஏற்படுவதற்குரிய வாய்ப்புக் குறைவதால் பொதுநலப்பண்பைப் பற்றி அறிவதில்லை.
3. அதைக் கற்றுக்கொடுத்து சுயநலம் இல்லாதவர்களாக அவர்களை மாற்ற வேண்டும் என்பனவே ஆகும்.

(Q8) புத்தகங்கள் எவ்வகையில் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன என்று

கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?

(6 மதிப்பெண்கள்)

1.எதையும் இளையர்களுக்குக் கற்றுக்கொடுப்பதில் புத்தகங்கள் முக்கியப் பங்கை வகிக்கின்றன.
2.ஒவ்வொரு நாளும் மாற்றம் இன்றி இருப்பதுபோல தெரிவதை மாற்றக்கூடியது புத்தகங்களே ஆகும்.
3.எதையும் மாறுபட்ட கோணத்தில் நம்மை பார்க்கவைத்து அவை நம்மைச் சிந்திக்கவைக்கின்றன.

(Q9) புதிய வாழ்க்கைக்குள் அழைத்துச் செல்லும் பணியைப் புத்தகங்கள் சிறப்புறச்

செய்கின்றன என்று கூறுவதற்குரிய காரணங்கள் யாவை?

1. நமக்குத் தெரியாத மனிதர்களைப் பற்றியும் அறிவியல், வரலாறு, கலை, மரபுகள் பற்றி நாம் அறிந்துகொள்கிறோம்.

2. தகவல் தொழில் நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும் இளையர்களுக்கு அவற்றிலிருந்து விடுதலை பெற்றுப் புத்தங்கள் புதிய வாழ்க்கையைக் கற்றுக்கொடுக்கின்றன.
3. கண்களுக்கும் பொருளாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க அவை உதவி செய்வதால் நாம் புதிய வாழ்க்கைக்குச் செல்கிறோம்.

(Q10) **சொற்பொருள்** ( 6 மதிப்பெண்கள்)

அ) தலைதூக்கி, உயர்ந்து

ஆ) சந்தர்ப்பங்கள்

இ) வேறுபட்ட

**End**

J2 H2 TLL PRELIMINARY EXAMINATION
Paper 2
Answer key

Q1 இலக்கணப் பிரிவு

அ) அந்த

ஆ) தவறாக

Q2 ஒருவரின் உள்ளம் மாணிக்கத்தால் கட்டப்படவேண்டுமாயின் அவர்கள்

- பிறர் செய்த தவற்றைப் பெரிதுபடுத்தாமல் அதைச் செய்தவரை மன்னிக்கவேண்டும்.
- தான் என்ற ஈகோ எல்லைக்கு வெளியே நின்று வாழ்க்கையின் அழகை இரசிக்க வேண்டும்.
- மற்றவர்கள் பின்பற்றி நடக்கக் கூடிய புனிதமான பாதைகளை அவர்கள் பெற்றிருக்கவேண்டும்.

Q3 கருத்துக்கள் அடிப்படையில் பனுவல் இரண்டு பனுவல் ஒன்றோடு வேறுபட்டிருக்கிறது.

காரணங்கள்

- பனுவல் ஒன்று தவறு செய்தவரை மன்னிக்காதவர் எப்படிப்பட்டவராக இருப்பார் என்பதைக் கூறுகிறது.
- அதனால் நமக்கு ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றியும் விளக்குகிறது
- பனுவல் இரண்டு பிறரை மன்னிப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிக் கூறுகிறது. முதல் பனுவல் அது பற்றிக் கூறினாலும் விளக்கமாக இல்லை.இரண்டாம் இன்னும் தெளிவாகக் கூறுகிறது.

Q4 இரண்டு பனுவல்களிலும் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் போதுமானவை இல்லை என்றாலும் இருக்கிறது என்றாலும் இரண்டு பனுவல் தொடர்பான கருத்துக்களை எடுத்துரைத்து விளக்கம் தரவேண்டும். பிறர் செய்த குற்றத்தை மன்னிக்கத் தெரிந்த மனிதர்கள் ஈகோ(ego) எனும் எல்லைக்கு வெளியில் நின்று பார்க்கவேண்டும்.அப்போதுதான் தவறை மற்றவர் பார்வையில் நின்று அவர் அதை ஏன்? செய்தார் என்பதுதொடர்பான கருத்துக்களை நம்மால் தீர்க்கமாக சிந்தித்து நடு நிலைமை தவறாது காரணங்கள் உணர

முடியும். மாணிக்கத்தால் கட்டப்பட்ட கோவிலில் வாழும் தெய்வம் போன்றவர்கள் அவர்கள். மேலும் தான் செய்த அறிந்து உணராதவர் அவர் நெஞ்சமே அவருக்கு அதை உணர்த்தும்போது அவரது மன சாட்சி அவருக்குத் தண்டனை தரும் என்பது தொடர்பான குறள் பற்றிக் கூறி பிற கருத்துக்களை சுருக்கமாக பொருள் பொருத்தமுற நிலைப்பாடு கருத்துக்குத் தொடர்பாக எழுதவேண்டும்.

கருத்துக்கள் போதாது என்றால் கூறப்பட்டுள்ள கருத்துக்களை சற்று விளக்கிப் பின், பல வேளைகளில் தவறிழைக்கும் நபர்கள், தவறை உணர்ந்து தட்டுத் தடுமாறி மன்னிப்புக் கேட்பதுண்டு. அப்படிப்பட்டவர்களை நிபந்தனையற்று மன்னிக்க வேண்டும். 'சே... இதுல மன்னிப்பு கேக்க என்ன இருக்கு' என்பது போன்ற வார்த்தைகள் நட்பையும், உறவையும் பலமடங்கு இறுக்கமாக்கும். சிலர் மன்னிப்புக் கேட்கத் தயங்குவார்கள். அப்படிப்பட்டவர்களுடன் பழகும்போது எந்த வித்தியாசமும் இல்லாமல் பழகவேண்டும். அவர்களை மனதார மன்னித்துவிட்டதைச் செயல்களில் காட்டவேண்டும் மன்னிப்புக் கேட்கும் முன்னாலேயே மன்னிப்பது உயர்ந்தது என்று முடிக்கவேண்டும்.

End

J2 H2 TLL PRELIMINARY EXAMINATION

Paper 3

Answer key

**'அ' பிரிவு**

Q1. **கவிதை**

(அ) 'கழிவறைக் குழந்தை' என்னும் கவிதையில் குழந்தையின் மன உணர்வுகளைக் கவிஞர் வெளிப்படுத்தும் பாங்கினை விளக்குக.

(12 மதிப்பெண்கள்)

- குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதார் என்பர்.
- அத்தகைய குழந்தைப்பேற்றின் சிறப்பை அறியாதவர்கள் தாங்கள் செய்த தவறால் அந்த ஒன்றும் அறியாத சிசுவை கழிவறையில் விட்டு விடுவது என்ன நியாயம்?
- இதை யாரும் கேட்க மாட்டார்கள். இது மறைக்கப்பட்ட ஒன்றாக இருப்பதால் அதை அக்குழந்தையே கேட்கிறது என்ற அமைப்பில் இக்கவிதை உள்ளது.
- நீ என்னைத் தூக்கி எறிந்தாய். ஆனால் நான் உன்னை மதித்து மன்னிக்கிறேன்.
- உனக்கு மனசாட்சி இருந்தால் இப்படிச் செய்யமாட்டாய் என்று தாயைப் பார்த்து கேட்பது போல் கவிதை உள்ளது.
- தன்னைச் சுமை என்று அறிந்தும், கருவிலேயே அழித்திடாமல் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தக் காரணத்திற்காக நீ செய்த பாவத்தை என் உயிரை ஆயுள் முழுவதும்

சுமக்க நான் தயாராக இருக்கிறேன் என்று சிசு தாயிடம் கூறுவதாகக் கவிஞர் பாடுகிறார்.

- தாய்மையின் நியதிகளை மீறி தன்னைத் தூக்கி வீசிய தாயை தூக்கிலிடாமல் தண்டிக்காமல் சிசு மன்னித்துவிட்டாலும் அத்தாயின் மனசாட்சி அவளை மன்னிக்குமா என எச்சரிக்கும் கேள்வியுடன் கவிதையை நிறைவு செய்கிறார் கவிஞர்.
- பொருத்தமான கவிதை வரிகளை எடுத்காட்டி வினாவுடன் தொடர்புபடுத்தி திறனாய்வுக் கருத்துக்களுடன் எழுதுவது அவசியம். தாயைப் பழிவாங்குவதைக் காட்டிலும் அந்தத் தாயை இந்நிலைக்கு ஆளாக்கிய நயவஞ்சகனை எண்ணி வருத்தப்படுவதாகக் கூறுகிறார் கவிஞர்.

(ஆ) 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்' எனும் கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள் உணர்த்தும் கருத்துகளைக் குறிப்பிடுவதோடு இப்பாடல் வரிகள் உனக்குள் ஏற்படுத்திய தாக்கத்தையும் பற்றி விளக்குக. (13 மதிப்பெண்கள்)

- அரிது அரிது மானிடராயப் பிறத்தல் அரிது அதிலும் கூன் குருடு செவிடு நீங்கி பிறத்தல் அதைவிட அரிது.
- அத்கைய பிறவி எடுத்த மனிதன் மனிதனுக்குரிய பண்புகளைப் பெற்றிருந்தால் அவன் மனிதனாக மதிக்கப்படுவான்.
- அவன் தெய்வமாவது எப்போது? என்ற கேள்விக்கு வினாவாக இக்கவிதை அமைகிறது.
- வாழைபோல் தன்னைத் தந்து தியாகி உருகி ஓடும் மெழுகுபோல் பிறர் மீது இரக்கம் காட்டவேண்டும்.
- இன்றைய அவசர உலகத்தில் மனிதன் மனிதநேயத்தைப் மறந்து தீவிரவாத எண்ணத்துடன் தான் அழிந்து மற்றவரையும் அழிக்கிறான்.
- நம்பிக்கை,தியாக உணர்வு பிறர்மீது கருணை. அன்பு கொண்டு மற்றவரை மனிதனாகப் பார்க்கும் என்று இவை அனைத்தும் கொண்டவனே மனிதருள் தெய்வமாகிறான்.
- கண்ணதாசனின் கவிதை வரிகளை எடுத்துக்காட்டி மனிதன் தெய்வமாவதற்கு இந்தப்பண்புகள் எப்படி உதவி செய்யும் என்பன போன்ற கருத்துக்களை விளக்கி எழுதவேண்டும்

Q2 பாரதி தாசன் தன்னுடைய விருப்பங்களை 'எந்நாளோ? ' என்னும் கவிதையில் கூறியிருப்பது இக்காலச் சூழலில் நிறைவேறுமா – விவாதிக்க

பாரதியின் கவிதை நயத்தில் தன் மனதைப் பறிகொடுத்து தமிழைப்பற்றியும் தமிழர்களைப் பற்றியும் அவர்கள் செய்ய வேண்டியது என்ன ? என்றும் தம்முடைய பல கனவுகள் நிறைவேறும் நாள் எந்நாள் என்று நம்மிடம் கேட்டு நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.அவரது கவிதைகளில் இடம்பெறும் கனவுகள் நிறைவேறும் என்பது நம் கையில் உள்ளது.

1.தமிழர் அனைவரும் கல்வி கற்று, அறிவால், அன்பால், கலைகளால் உயர்ந்த இமயமலைபோல் புகழோடு வாழ்கின்றார்கள் எனப் பிறர் கூறுவதைக் கேட்பது எப்போது எனக் கேட்கிறார் கவிஞர்.

2. கைத்திறச் சித்திரங்கள், கணிதங்கள், வான நூல்கள், மெய்த்திற நூற்கள், சிற்பம், விஞ்ஞானம், காவியங்கள் ஆகியன கொண்டுள்ள தமிழர் நூல்கள் உலகின் நூல்நிலையங்களில் எங்கும் இடம்பெறச் செய்து வையத்தில் புதுமை செய்வது எந்த நாளோ? என ஏங்குகிறார் கவிஞர்.

3. தாய் போன்ற அழகுதமிழில் எழுதப்பெற்ற தமிழரின் கவிதைகள் உலகிலுள்ள பிற எண்ணற்ற ஆயிரம் மொழியில் காண இவ்வுலகம் பெரிதும் விரும்பிற்று என்ற மதுவின் சுவை போன்ற இனிய வார்த்தைகள் என் செவியில் வந்து ஆறாகப் பாயுநாள் எந்த நாளோ, யார் இதை என்னிடம் கூறுவார் இங்கே? எனக் கேட்கிறார் கவிஞர்.

4. உலகில் உள்ள தொழில் அனைத்தையும் கொண்ட பயன் தரும் ஆலைகளைத் தமிழர் கூட்டம் தொடங்கிற்று எனக் கேட்பதேன்றோ? தமிழர்கூட்டம் போர்த்தொழிலில் அணிஅணியாய்ப் பயில்வதெண்ணிப் புவியெலாம் நடுங்கிற்று என்ற வார்த்தையைக் கேட்டு நெஞ்சு மகிழ்ந்து கூத்தாடுவது என்றோ?

5. தமிழர்கூட்டம் வெள்ளம்போல உரம் கொண்டு, அவர்கள் உள்ளத்தால் ஒருவராகவும் உடலினால் பலராகவும் இருப்பர். கள்ளத்தனம் நெருங்க முடியாமல் இந்த உலகம் கலங்கக்கண்டு துள்ளும்நாள் எந்த நாளோ? உள்ளம் சொக்கும் நாள் எந்த நாளோ?

6. பிற நாட்டவர்கள் கோபத்தினால், தமிழன்பால் வெறுப்பினை ஏற்படுத்தும் குற்றம் செய்தால், உடனே அவர்களின் முதுகெலும்மைத் தமிழர்கள் நொறுக்கினார்கள் என்ற செய்தி கேட்டு இன்பத்தில் குதிக்கும் நாள் எந்தநாளோ?

7. மாயையில் இருந்த உலகம், தமிழன் காட்டிய வழியிற் சென்று பிழைத்தது என்றும், அவன் சுட்டுவிரலில் இந்த உலகம் ஆடிற்று என்றும் நான் கேட்டு, இன்ப ஊற்றுக் கேணியில் குளிப்பது எந்தநாளோ?

8. விண்ணில் பல்லக்கில் ஊர்ந்து உலகத்தைக் கலக்குவதற்கும் பாட்டிலே தமிழைச் சேர்த்துப் பாரினை மயக்குவதற்கும் மண்ணிலே வாளையேந்திப் பகைவர்களை அழிப்பதற்கும் எண்ணிராத் தமிழர் உள்ளார் என்னும் நிலையைக் காண்பதென்றோ?

9. கண்களும் ஒளியும் போல அழகான மலரும் வாசம்போல பெருந்தமிழ் நாட்டில் பெண்களும் ஆண்களும் குளிர்ந்த கடல்போன்ற அன்பால் ஏற்றத் தாழ்வு இன்றி, சமத்துவம் ஆனார் என்றபாடல் வந்து காதில் பாய்ந்து பருகும் நாள் எந்த நாளோ? என்ற அவரது கனவுகளை நனவாக்குவோம்.

(25 மதிப்பெண்கள்)

## **<u>'ஆ' பிரிவு</u>**

**<u>சிறுகதை</u>**

Q3 தான் பிறந்த நாட்டில் இருந்து தனக்குரிய கடமைகளைச் செய்யாத தமிழன், நாடோடியாய் இருப்பதில் எந்த வித நன்மையும் இல்லை என்னும் விழுமியத்தை 'நாடோடிகள்' என்னும் சிறுகதை உதவியுடன் விளக்குக.

- தமிழன் என்று சொல்லவும் தலை நிமிர்ந்து நிற்கவும் தமிழன் என்றும் தயங்கக் கூடாது.
- ஆயிரம் பழம் பெருமை கொண்ட நாம் பிறந்த நாட்டை மதித்து நாட்டுப்பற்று உடையவர்களாக இருக்கவேண்டியது அவசியம்.
- நாடோடிகள் என்ற தலைப்பில் அமைந்த இக்கதை பிறந்த நாட்டையும் தன் இனத்தையும் மதிக்காத தனபாலையும் நாட்டை மதித்து இனத்தை மதித்து எந்த நிலையிலும் நாட்டை விட்டுச் செல்லாத நல்லவன் என்று பாராட்டப்படும் பார்த்திபனையும் படைத்து சிறுகதையை நமக்கு ஒரு பாடம் உணர்த்துவதாக படைத்துள்ளார்.
- தனபால் தன் தந்தை காலத்தில் அவரை மதிக்காத தமிழ் இனத்தாரை வெறுக்கிறான்.
- நன்றாகப்படித்து பணம் சம்பாதித்து மற்றவர்கள் போற்றும வாழ்வை வாழ விரும்பி கண்டதே காட்சி கொண்டதே கோலமான தன் வாழ்க்கையை எண்ணி இறுதியில் வருந்துகிறான்.
- அவனது மனைவியும் மகளும் மேலை நாட்டுக்கலாசாரத்தால் ஆடம்பர வாழ்வை வாழ எண்ணம் கொள்கின்றனர்.

- மகள் படித்துப் பட்டம் பெற்ற பின் நல்ல வாழ்க்கை வாழாமல் பல துன்பங்களுக்கு உள்ளாகிறாள்.
- வாழ வைத்த நாட்டை மறந்தவனை இவ்வுலகம் மட்டுமல்ல யாரும் மதிக்கமாட்டார்கள்.
- நாட்டின் மீது பற்றுக்கொண்ட பார்த்திபன் செயல்களையும் அவனுக்கு மாறான பண்புகள் கொண்ட தனபாலின் செயல்களையும் விளக்கி பொருத்தமான சான்றுகளை கதையில் இருந்து எழுத வேண்டும்.

Q4 ‘ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது’ என்ற தலைப்பு அக்கதைக்குப் பொருந்தும்

விதத்தைப் பொருத்தமான சான்றுகளுடன் விளக்குக.

- மனிதன் பிற மனிதர்களின் முன்பு தன்னைப் பற்றி எப்போதும் நல்லதை நினைக்க வேண்டும் என்று விரும்புகிறான்.தனக்கென்று முகத்திரை போட்டுக்கொள்கிறான்.
- அவன் எப்போதும் அவனாக இருப்பதில்லை.தனக்கென்று உள்ள தனிப்பட்ட பழக்கங்களையும், குணங்களையும் மறைத்து வாழ்கிறான்.ஏனைன்றால் மனிதன் தனியாக வாழ முடியாது.தன்னுடைய சமூகத்தைச் சார்ந்து வாழ வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறான்.
- மனிதன் தான் வாழும் சமூகத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ள முயற்சி செய்கிறான்.சில சமயங்களில் வெற்றி கிடைக்கலாம். சில சமயங்களில் தோல்வியும் கிடைக்கலாம்.
- இக் கதையில் இடம்பெறும் படைப்பாளர் தனக்கு சமூகத்தில் ஒரு அந்தஸ்து அல்லது மதிப்பு இருக்கவேண்டும் என்று விரும்பியதால் தனக்குப் பிடித்ததைச் செய்ய முடியாமல் சமூகத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்கிறார்.
- அதனால் அவரது சொந்த வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இதனால் தன்னை மாற்றிக் கொள்ள தன் ஆன்மாவிற்குத் தன்னால் போடப்பட்ட திரையை முகமூடியை அகற்ற வேண்டும் என்று முடிவு செய்கிறார்.இதனால்தான் இக்கதைக்கு ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது என்று தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.
- பிறருக்கென வாழ்பவர்கள் தன் சொந்த வாழ்க்கையில் பலவற்றை இழக்கின்றனர். தையில் இடம்பெறும் பாத்திரப்படைப்பு தானே பேசிக்கொண்டு தன் கதையை எழுதிச் செல்வது.
- அதனால்தான் அந்தப் பாத்திரப்படைப்பு தன்னை எழுத்தாளர் என்று சொல்கிறாரே தவிர தனக்கு ஒரு பெயர் கொடுக்கவில்லை.
- ‘என் மனம் சொல்வதற்கு ஏற்ப நான் நடப்பவன்.என் விருப்பங்களுக்கு ஏற்ப ஆடுபவன்’ – என்ற வரிகளுக்கு ஏற்ப தன்மனம் முடிவு செய்ததை அவர் செயல்படுத்துகிறார்.
- தனி மரம் தோப்பாகாது. தனிமனிதன் சமூகம் ஆக முடியாது. அவன் மற்றவர்களைச் சார்ந்து வாழ்கிறான். அதனால் சமூகத்திற்கு ஏற்ற கட்டுப்பாடுகளைப் பின்பற்றவேண்டும். அப்படி இல்லை என்றால் சமூகம் அவனுக்கு தண்டனை கொடுக்கும்.
- தனக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரம் தனக்குத் தேவை. அதனை எதற்காகவும் விட்டுக்கொடுக்கமாட்டேன். என்று ஆசிரியர் இறுதியில் தன்னுடைய எழுத்துச்

சுதந்திரத்தை விட்டுக்கொடுக்கிறார். தன் ஆன்மாவின் திரையை அகற்றிவிட்டு உண்மையான மனிதனாக தனக்காக வாழத் தொடங்குகிறார்.

- எதனை இழந்தால் தான் மகிழ்ச்சியாக தன் விருப்பப்படி வாழ முடியும் என்று நினைக்கத் துவங்கியவுடன் படைப்புகளை குவியலாக்கி அதனை எரிக்க விரும்புகிறார்.
- படைப்பாளன் தன் ஆன்மாவிற்குப் போடப்பட்ட திரை விலக்கப்படும்போது அவர் படைப்பாளர் என்ற சமூக மதிப்பை இழக்கிறார். அதனால் தலைப்பு பொருந்தும்.

<u>**நாடகம்**</u>

Q5 புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை

‘ சிங்கப்பூர் மாப்பிள்ளை ’ என்னும் நாடகத்தின் துணைகொண்டு விளக்குக.

- நாடு விட்டு நாடு செல்லும் எவருக்கும் பல பிரச்சனைகள் ஏற்படும்.
- அந்த நாட்டு வாழ்க்கையைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப வாழும்போது ஏற்படும் பிரச்சனைகள்
- பிறந்த நாட்டிற்கு நன்றி உணர்வுடன் இருக்க முடியாமல் வாழவந்த நாட்டுக்கும் நன்றிக்கடன் படாமல் இருப்பதும் பிரச்சனை
- கோபால்சாமி தன் ராஜ பரம்பரையின் புகழ் பாடுபவராக இருக்கிறார். தன் பெண்ணுக்கு தன் குடும்பத்தில் உள்ள உறவுப்பையனை மணம் முடிப்பதில் உறுதியாக உள்ளார்.
- ஆனால் அப்பெண் வேறு ஒருவனை விரும்புவதால் ஏற்படும் பிரச்சனை.
- குடும்பப் பெருமையை விட்டுக்கொடுக்க முடியாமல் ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் உள்ளவராக பலரும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்றனர்.
- அனுபவம் அண்ணாமலை, சின்னச்சாமி, கோபால் என்பவர்கள் போன்ற பலரும் தங்கள் குடும்ப உறவுகளாலும் வாழ்க்கைச் சூழலாலும் பாதிக்கப்படுவதை பொருத்தமான கருத்துக்களுடன் விளக்கலாம்.
- வையாபுரியும் அவரது மனைவியும் கோபால் சாமிக்கு கொடுக்கின்ற பிரச்சனைகளைப் பற்றி நன்கு விளக்கலாம்.
- சில சமயங்களில் கௌரவம், தகுதி, தாய் நாடு என்று ஒருவர் வாழக்கூடாது.கோபால்சாமி என்னும் கதாபாத்திரம் வையாபுரியின் அனைத்து வேண்டுகோளுக்கும் தலையாட்டியதைப்போல் ஒருவர் இருக்கக்கூடாது.
- பிறர் உழைப்பில் கிடைக்கும் பலனை நம்பி ஒருவர் வாழ்வதும், அதற்காக ஏங்குவதும், முயல்வதும் தவறான செயலாகும்.
- சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஏற்படும் பிரச்சனை.
- உறவுகள் தேவை அவை நல்லுறவாக இருக்கவேண்டும்.இவ்வாறு பல பிரச்சனைகளில் முக்கியமான மூன்று அல்லது நான்கினை எடுத்து நன்கு விளக்கி திறனாய்வு நோக்கில் வினாவுடன் பொருத்தமாக எழுதுவது சிறப்பு.

Q6 'காதல் என்ன விலை' என்ற நாடகத்தில் இடம்பெறும் வள்ளியம்மை என்னும் கதாப்பாத்திரம் இன்றைய வாழ்க்கைப் போராட்டங்களைச் சந்திக்கும் பெண்களை மையமாகக் கொண்டு அமைகிறது – கருத்துரைக்க.

- வள்ளியின் பெற்றோர்கள் அவளது திருமணம் தொடர்பான கனவுகளுடன் வாழ்கிறார்கள்.
- தங்கள் பெண்ணுக்கு நல்ல படிப்பு, பணவசதி, குடும்ப பெருமையுடன் கூடிய மாப்பிள்ளை வேண்டும் என்று பல முயற்சிகளைச் செய்கின்றனர்.
- படிப்பு, நல்ல குணம், தனக்குப்பிடித்த பண்புகளைக் கொண்டவராக வள்ளி விரும்புகிறாள்.
- இங்குதான் பிரச்சனை தொடங்குகிறது
- பெண் பார்க்கும் படலம் என்ற ஒன்று பெண்களுக்கு ஏற்பட்ட ஒரு சாபக்கேடு. பெண்ணை அலங்காரப் பொம்மையாக ஒப்பனை செய்து வருகின்ற மாப்பிள்ளை உட்காரவைத்து ஏலம் போடுவது போல் வள்ளி உணர்கிறாள்.
- தன் பெற்றோர்களின் மனத்தை புண்படுத்த விரும்பாமல் அவர்களின் அன்பைப் புரிந்துகொண்டு நடக்கும்போது அவள் பல போராட்டங்களைச் சந்திக்கின்றாள்.
- கோவிலில் மாப்பிள்ளை வந்து பெண்பார்த்தது, கல்யாணமாலை பெண் பார்க்கும் படலம், வெளிநாட்டு மாப்பிள்ளை வந்து அவளைப் பார்த்துவிட்டு
- தனக்கு பிடித்த முறையில் அவள் இருக்கவேண்டும் என்று கூறியதை என்று இவை அனைத்தும் வள்ளியின் போராட்டங்கள்.
- போராட்டமே வாழ்ககை என்ற நிலையில் இருந்த வள்ளி தனக்கு எதுவும் வேண்டாம் யாரும் வேண்டாம் என்று வெறுத்துக்கூறுகிறாள்.
- வினாவிற்குப் பொருத்தமான போராட்டங்கள் முறையாக ஒவ்வொன்றாக வரிசைப்படுத்தி பொருத்தமான நாடக மேற்கோளுடன் எடுத்துரைப்பது சிறப்பு.

**<u>நாவல்</u>**

Q7 கரித்துண்டு நாவலில் இடம் பெற்றிருக்கும் நிர்மலாவின் கடிதம் நாவல் வளர்ச்சிக்கு எந்த அளவில் உதவியாக உள்ளது என்பது தொடர்பான கருத்துக்களை விளக்கி எழுதுக.

- நிர்மலா மோகன் யார்? எப்படி இருந்தார்கள் என்று எதுவும் புரியாமல் இருக்கும் படிப்பவர்களது ஆர்வத்தையும் பல கேள்விகளுக்கான விடைகளையும் இக்கடிதம் விடையாக அமைகிறது.

- மோகன் நிர்மலா, நாகு , திருவேங்கடம், பொன்னி, பேராசிரியர், குமரேசம் என்று பல பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட நாவலின் தொடக்கம் மிக நீண்ட கதையாக உள்ளது.
- மோகனின் கடந்த கால வாழ்க்கை, நிர்மலா, செந்தாமரை, மாதுரி என்பவர்களைப் பற்றியும் விளக்கமாக கடிதம் கூறுவதிலிருந்து அறிய முடிகிறது.
- நாவல் தொடங்கி பல பிரச்சனைகளைப் பற்றி விளக்கி வளர்ந்த முடிவு பெற வில்லை என்றால் அது முழுமையான நாவல் ஆகாது.
- இக் கடிதம் நிர்மலா மோகன் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சனைகளையும் இப்போது உள்ள அவர்களின் வாழ்க்கை முறைகளையும் எடுத்துக் கூறுகிறது.நிர்மலா தன் கடந்த கால வாழ்க்கையைப் பற்றி விரிவாக எழுதியிருந்தாள். அவள் திருந்தியதற்கு முதல் காரணம் செந்தாமரை; இரண்டாவது காரணம் அவள் தினமும் படிக்கும் திருக்குறள்; மூன்றாவது காரணம் பேராசிரியரின் உறவு.

- செந்தாமரை மாதவி அச்சகம் வைத்திருக்கும் திரு நாதனின் தங்கை. அவளுடைய கணவன் தான் இளங்கோ. அவர் பேராசிரியர் உடன் படித்தவர். இளங்கோவின் தூண்டுதலால் தான் தமிழ்ச்சங்கத்தார் பேராசிரியரைப் பம்பாய்க்கு அழைத்தார்கள்.

- இளங்கோவின் குடும்பம் கல்கத்தாவில் இருந்தபோது, நிர்மலாவின் குடும்பத்திற்கு நல்ல பழக்கம். ஆனால் இளங்கோவை பம்பாய்க்கு மாற்றிய பிறகு அந்தப் பழக்கம் நின்று விட்டது.

- நிர்மலா ஆசிரியராக பணிபுரிந்த போது, பேராசிரியர் பம்பாய்க்குச் சொற்பொழிவுக்காகப் போனார். அப்போது நாள்தோறும் நிர்மலாவைப் பார்த்து வந்தார். தன்னை அறியாமல் அவருக்கு விருப்பம் ஏற்பட்டது.

- கடித உறவு திருமண எண்ணம் வளர்த்துவிட்டது. பிறகு பம்பாயில் உள்ள ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டு தம்முடன் சென்னைக்கு அழைத்து வந்து விட்டார் பேராசிரியர்.

- அந்தக் காலத்தில் ஆடம்பர மோகம், ஒழுக்கத்தை மதிக்காத தன்மை, கற்பை பழங்காலத்துச்சரக்கு என்று எண்ணும் மனம், இருந்தது நிர்மலாவிக்கு. ஆனால் நிர்மலா கூட வாழ்ந்த நாட்களில் இவை எதையும் பேராசிரியர் உணரவே இல்லை.

- இவ்வாறு கடிதம் நிர்மலா மோகன் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்வுகளை விளக்கி நாவலின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

Q8 கரித்துண்டு என்னும் நாவல் ஒட்டுமொத்த மனித சமுதாயத்தின் பிரதிபலிப்பு என்று

கூறலாமா - ஆராய்க.

- சமூகத்தில் ஏற்படும் பல பிரச்சனைகளை எடுத்துக்கூறி அவற்றிற்கான தீர்வுகளைக் கூறுவதாக நாவல் அமைகிறது.
- ஏழை பணக்காரர்களின் வாழ்வு தொடர்பான ஏற்றத் தாழ்வுகள்.
- அரசியல் தலைவர்கள் தங்கள் பதவிக்காக புகழுக்காக மட்டும் அதனைப் பயன்படுத்துகிறார்கள்.
- மக்களுக்கென்று எந்த வித உதவியும் செய்வதில்லை. அதைத் தவிர ஏழைகளின் அன்றாடத் தேவைகளான உணவு, உடை,, இருபபிடம் என்பவற்றைக் கூட அவர்கள் நிறைவேற்றத் தவறுகின்றனர்.
- வெள்ளம் ஏற்பட்ட போது அப்பகுதி மக்கள் படும் துன்பத்தைப் பற்றி திருவேங்கடம் மோகன், பேராசிரியர் என்று மூவரும் பேசுவது சமுதாயத்தைப் பிரிதிபலிக்கிறது.
- இந்த உலத்தில் படித்த பட்டதாரிகள் எவ்வளவு அடிமைகளாக இருக்கிறார்கள் என்பதை இப்போதுதான் தெரிந்துகொண்டேன் என்று குமரேசன் வேகத்துடன் கூறுகிறான். மேலும் படித்தவர்கள் மற்றவர்களை விட நன்றாக வாழ வேண்டும் என்பதால் தங்களைத் தாங்களே விற்றுக் கொள்கிறார்கள் என்றும் அவன் சொல்வதிலிருந்து வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதற்கு அரசியலும் அரசியல் தலைவர்களும் காரணம் என்கிறான்.

- குமரேசன் திருவேங்கடத்தைப் பார்த்து உனக்கு அந்த ஓவியரைப் பற்றி நன்கு தெரியுமே அவர் வாழ்க்கையைப் பற்றிக் கேட்டுப் பார் என்று திருவேங்கடத்திடம் சொன்னபோது, நம்முடைய உணர்ச்சி, விறகு எடைபோடும் தராசின் முனை போன்றது என்றால் கலைஞனுடைய உணர்ச்சி பொன்னை எடைபோடும் தராசுமுனை போன்றது என்று திரு விளக்கினார். கலைஞர்கள் மதிக்கப்படாதபோது ஏற்படும் இரக்க உணர்வு வெளிப்படுகிறது.

- எந்தச் சமூகம் கலைஞனையும் கலையையும் மதித்து வளர்க்கின்றதோ அச்சமூகம் என்றும் மதிக்கப்படும்.

- மோகனது கலையும் அவனது திறமையும் மதிக்கப்படாததால் கலை கரித்துண்டால் வரையப்படும் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

- உயர்மட்டத்தில் வாழ்பவர்கள், கலையை மதிக்காமல் இழிவாகப் பார்ப்பது, ஏழைகளின் அன்றாட வாழ்க்கைப்போராட்டம் எனப் பல சமூக போராட்டங்கள் பேசப்படுவதால் தனிமனிதச் சமூகத்தின் எண்ணங்களை நாவல் அதன் பிரதிபலிப்பாக வெளிப்படுத்துகிறது.

- சமூகப் பிரதிபலிப்பு என்பது தொடர்பான கருத்துக்களில் முக்கியமானவற்றை மட்டும் நன்கு விளக்கி பொருத்தமான சான்றுகளுடன் விளக்கி இந்நாவல் சமூகத்தின் ஒட்டு மொத்த பிரதிபலிப்பாக அமைகிறது என்று கூறுவது இன்னும் சிறப்பு.

- கருத்துக்களின் விளக்கம், பொருத்தமான மேற்கோள், சுய கருத்துக்களை மேற்கோளுடன் இணைத்து எழுதுவது பொருத்தமான பதிலாக இருக்கும்.

Candidate Name: ______________________________

| Class | Adm No |
| --- | --- |
| | |

H

Higher 2
உயர்தரம் 2

millennia institute

# மிலெனியா கல்வி நிலையம்

## 2017 PRELIMINARY EXAMINATION 2

Pre-university 3

தமிழ்மொழி,இலக்கியம் **9567/1**
தாள் 1 (பகுதி 1) **29 Aug** 2017

Tamil Language and Literature 2 Hour 15 min
Paper 1 (Part 1) (Total time for Part 1 and Part 2)

### தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. இவ்வினாத்தாளில் முதல் பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.

2. முதல் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்கும் உரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

4. அகராதியைப் பயன்படுத்துதல் :
   அ) முதல் பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தலாம். அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள்.

   ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் <u>பயன்படுத்தக்கூடாது.</u>


**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை வரைக. (35 மதிப்பெண்கள்)**

Q1 கடந்த காலத்தைப் பற்றிக் கற்பதால் இக்காலத்தில் வாழும் நமக்கு எவ்விதப் பயனும் இல்லை. இக்கூற்றை நீவிர் ஏற்றுக்கொள்கிறீரா? விளக்குக.

Q2 வாழ்க்கை என்பது எவ்வளவு இழந்தீர்கள் என்பதல்ல; இனி எவ்வளவு உயர போகிறீர்கள் என்பதே – ஓர் அறிஞர் கருத்து. இக்கூற்றைச் சான்றுகளுடன் விவரித்து எழுதுக.

Q3 ஒருவர் தமக்கு மகிழ்ச்சி தரும் செயல்களை மட்டுமே செய்ய வேண்டும். விவாதிக்க.

Q4 பின்வரும் சூழலைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.




**(முற்றும்)**

Candidate Name: ______________________________

| Class | Adm No |
| --- | --- |
| | |

**H**

Higher 2
உயர்தரம் 2

millennia institute

மிலெனியா கல்வி நிலையம்

---

**2017 PRELIMINARY EXAMINATION 2**
Pre-university 3

தமிழ் மொழி, இலக்கியம் 9567/1
தாள் 1 (பகுதி 2) 29 Aug 2017

Tamil Language and Literature 2 Hour 15 min
Paper 1 (Part 2) Total time for Part 1 and Part 2)

---

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

---

இவ்வினாத்தாள் 4 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது

# <u>‘அ’பிரிவு</u>

**<u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>** (5 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக.**

மனித வாழ்வில் முக்கியமான காலம் இளமைக்காலம் ஆகும். அக்காலத்தில் நம் வாழ்வு நெறிப்படுத்தப்பட்டால் ஆயுட்காலம் முழுவதும் மன அமைதியோடும் நிறைவோடும் வாழலாம். இளமைப் பழக்கங்கள் தான் வாழ்வுக்கு ____(Q1)____ சேர்க்கும். அதனால்தான், ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது’ என்கிறார்கள். இளமைப் பருவம்தான் நினைவாற்றல் மிக்க பருவம். துணிச்சல் நிறைந்த பருவம். இப்பருவத்தில் ____(Q2)____ கல்வி ‘சிலையில் எழுத்து’ எனப்படுகிறது. முதுமைப்பருவம் கற்றற்குரிய பருவமன்று.

கல்வியை ____(Q3)____ நற்பண்புகளும் ஒருவனிடம் இளமை முதற்கொண்டே அமைந்தால் அவன் சான்றோனாக வாழ்வான். வாய்மை, கொல்லாமை, கள்ளாமை, ஊக்கமுடைமை, இன்னாசெய்யாமை போன்ற நற்பண்புகளை ஒருவன் தன் இளமைப் பருவத்தில் வளர்த்துக்கொண்டால் முதுமையில் சான்றோர்கள் பலராலும் பாராட்டப்படும் ____(Q4)____ அடைவான். ஆகவே, மாணவர்கள் தம் இளமைப் பருவத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசாங்கம் ____(Q5)____ நன்மைகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இயன்றவரை நற்பண்புகளையும் நல்லொழுக்கங்களையும் பழக்கிக் கொள்ள வேண்டும். இவற்றைக் கடைப்பிடித்தால் வாழ்வில் உயர்ந்து விளங்க முடியும்.

## <u>“ஆ” பிரிவு</u>

**சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை எழுதுக.**

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி. பலவகை இலக்கியங்களுள் குழந்தை இலக்கியம் பழமையான ஓர் இலக்கியமாகக் காணப்படுகிறது. இந்த இலக்கியத்துள் குழந்தைப் பாடல்கள், கதைகள், நாவல்கள், நாடகங்கள் என்பன உள்ளடங்குகின்றன. இவற்றுள் குழந்தைப் பாடல்களும் குழந்தைக் கதைகளும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. உலகம் முழுவதும் கதைகளுக்குச் <u>**செல்வாக்கு**</u> உண்டு. சிறிய வயதில் தாயின் மடியில் படுத்துக்கொண்டு கதை கேட்காமல் தூங்கிய குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். கதை கேட்டுப் பழகாத குழந்தைகளால் சம்பவங்களைத் தொகுத்துச் சொல்ல முடியாது; அதைவிடவும் முக்கியமானது கற்பனை மூலம் புதுப்புது உலகங்களை உருவாக்கிக் கொள்ளவும் முடியாது. கதை கேட்பது குழந்தைகளுக்கு மிக அவசியமான செயல்பாடாகும். குழந்தைக் கதைகளின் நோக்கம் உயரிய விழுமியங்களையும் அறநெறிக் கருத்துகளையும் அறிவுறுத்துவதாகும்.

கதை சொல்வது நீதி <u>**போதனைக்காக**</u> மட்டும் அல்ல என்பதைக் குழந்தைகளுக்கான கதைகளைத் தெரிவுசெய்யும்போது பெற்றோர் கவனத்திற்கொள்ள வேண்டும். நேரடியான முறையில் நீதி போதிப்பது குழந்தைக் கதைகளின் முக்கியமான நோக்கமல்ல. கதைகளைக் கேட்கும்போதும் படிக்கும்போதும் விழுமியங்களையும் அறநெறிகளையும் உணர்ந்துகொள்ளுமாறு செய்ய வேண்டும்.

நம்மில் பெரும்பான்மையோர் ஆழ்ந்து கேட்கப் பொறுமை இல்லாதவர்களாய்த்தான் இருக்கிறோம். ஒருவர் பேசும்போது <u>**இடைமறிக்கிறோம்**</u>. எனக்குத் தெரியாததையா இவர் சொல்லப் போகிறார் என்னும் மனப்பாங்கும் இதற்குக் காரணமாகும். ஆனால், உன்னிப்பாகக் கேட்டல் என்பது ஒரு திறன் மட்டுமல்ல; விரும்பத்தக்க மனப்பான்மையும் ஆகும். உன்னிப்பாகக் கேட்டல் என்னும் திறன் தன்னுடன் பேசுபவரை மதிக்கின்ற மனப்போக்கையும் வளர்க்கிறது. கதை சொல்வதன் மூலமாக இத்திறனை வளர்க்க முடியும்.

குழந்தைகளுக்கு உன்னிப்பாகக் கேட்கும் திறன் வளர வளர அதைச் சோதித்துப் பார்க்க அவர்கள் விரும்புகிறார்கள். அதனால், தங்களுக்குப் பிடித்த கதைகளைக் குழந்தைகள் மீண்டும் மீண்டும் கேட்க விரும்புகிறார்கள். இரண்டாவது, மூன்றாவது முறை கேட்கும்போது அடுத்து என்ன நடக்கும் என்பதை அவர்களால் சரியாக ஊகிக்க முடிவதால் மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்களுக்குத் தாங்கள் ஊகிக்கும் திறனைப்பற்றிய நம்பிக்கை பெருகுகிறது.

மற்றவர்களோடு நமது எண்ணங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வது சொற்களின் மூலமாகத்தான் நடைபெறுகிறது. உதாரணமாகக் குழந்தைகள் தமது அனுபவத்தின்மூலம் பசி, தாகம், கோபம் முதலான உணர்வுகளைப் பெற்றிருக்கிறார்கள். கதைகளைக் கேட்கக் கேட்கக் குழந்தைகள் இந்த உணர்வுகளை அர்த்தமுள்ள விதத்தில் புரிந்துகொள்கிறார்கள். இதன்மூலம் தம் மொழியறிவையும் உலகம் பற்றிய அறிவையும் வளர்த்துக்கொள்கிறார்கள்.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். எனவே அவர்கள் வருங்காலச் சமுதாயத்தை உருவாக்கித் தாங்கி நிற்கும் தூண் போன்றவர்கள். அவர்கள் நற்பண்புடையவர்களாகத் திகழ வழிவகுப்பது குழந்தை இலக்கியமே.

**வினாக்கள்**

Q6 தாயிடம் கதை கேட்கும் குழந்தைகள் பெறும் பயன்கள் யாவை?
(5 மதிப்பெண்கள்)

Q7 குழந்தைகளுக்குக் கதை கூறும்போது எத்தகைய நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்? (6 மதிப்பெண்கள்)

Q8 உன்னிப்பாகக் கேட்கும் குழந்தைகள் என்னென்ன நன்மைகள் பெறுவார்கள்?
(6 மதிப்பெண்கள்)

Q9 சிறுவர்களை நற்பண்புடையவர்களாகத் திகழச் செய்வதில் குழந்தை இலக்கியத்தின் பங்கு யாவை? (7 மதிப்பெண்கள்)

Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

**(அ) செல்வாக்கு – வரவேற்பு**

**(ஆ) போதனைக்காக – அறிவுரைக்காக, கற்பித்தலுக்கா**

**(இ) இடைமறிக்கிறோம் – குறுக்கிடுகிறோம்**

( முற்றும் )

Class | Adm No

Candidate Name: ______________________________

Higher 2
உயர்தரம் 2

millennia institute

**மிலெனியா கல்வி நிலையம்**

---

# 2017 PRELIMINARY EXAMINATION 2

Pre-university 3

தமிழ் மொழி, இலக்கியம் 9567/ 3
தாள் 3

Tamil Language and Literature 18 Sep 2017
Paper 3 3 hours

---

## <u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

---

இவ்வினாத்தாள் 3 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது. கடைசி வினாவின் கீழ் “முற்றும்” என்னும் சொல் காணப்படுகிறது.

## முக்கியக் குறிப்புகள்

மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் **ஒரு** வினாவிற்கு விடையெழுதவும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

## ‘அ’ பிரிவு

## கரித்துண்டு

Q1. தமிழர்களின் அறக்கோட்பாட்டை எடுத்துரைக்கவே கரித்துண்டு நாவலை டாக்டர் மு வரதராசன் படைத்துள்ளார் – நீ இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறாயா? சான்று தந்து நிறுவுக.

Q2. இன்றைய தமிழ்ச் சமுதாயத்திற்குக் குடும்ப வாழ்க்கை என்றால் என்ன என்பதை உணர்த்தவே டாக்டர் மு வரதராசன் நிர்மலா, பொன்னி ஆகிய பாத்திரங்களைப் படைத்திருக்கிறார். ஆராய்க.

## ‘ஆ’ பிரிவு

## சிறுகதை

Q3. ஆயிஷாவின் முடிவு பெண்ணினத்திற்குப் பேரிழப்பு என்று கூறலாமா? ஆராய்க

Q4. புலம்பெயர்ந்த நிலையிலும் கலாசாரமும் மொழியும் காக்கப்பட வேண்டும் என்னும் கருத்தை “நாடோடிகள்” சிறுகதை வழி நின்று நிறுவுக.

.

## **‘இ’ பிரிவு**

### **நாடகம்**

Q5. சிங்கப்பூரர்கள் உணர்ந்துகொள்ள வேண்டிய உண்மைகளை, சே.வெ.சண்முகம் அவர்களின் சிங்கப்பூர் மாப்பிள்ளை என்னும் நாடகத்தில் வரும் சில நிகழ்வுகளைக் கொண்டு விளக்குக.

Q6. காதல் என்ன விலை? என்னும் நாடகம் இக்கால இளையர்களின் எண்ணவோட்டத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை விளக்குக.

## **‘ஈ’ பிரிவு**

### **கவிதை**

Q7. அன்புடைமை அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள குறட்பாக்கள் அனைத்தும் இன்றைய உலக நடைமுறைக்குப் பொருந்துமா? ஆராய்க.

Q8. இயற்கையின் அழகு பற்றியும் அதன் தன்மைகளைக் கவிஞர்கள் விளக்கிய பாங்கினையும் நீ படித்த கவிதைகள் வழி நின்று ஆய்க.

**(முற்றும்)**

| Name : | |
|---|---|
| Class: | |
| Admin No : | |
| Thumb Drive No : | |
| Signature : | |

தமிழ் மொழி, இலக்கியம்
தாள் 2

**9567/2**
29 Aug 2017

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**: **பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

| H | **Singapore – Cambridge**<br>General Certificate of Education Advanced Level | **Duration 1h 0m 0s** |
|---|---|---|

| | |
|---|---|
| Q1 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்துத் தட்டச்சு செய்க. (பனுவல் ஒன்று) (4 மதிப்பெண்கள்)<br><br>***உடல் நலமும் அறிவுக்கூர்வையும் கொண்டவராக இருந்தாலும் வீட்டில் நிம்மதி இல்லையென்றால் ஒருவரால் நிம்மதியாக வாழ இயலாது.***<br><br>அ) 7 ஆம் வேற்றுமை உருபேற்றச் சொல்<br>ஆ) குறிப்பு வினைமுற்று | |

| | |
|---|---|
| Q2 கல்வி பயிலும் பருவத்தில் உடல் உழைப்பு எவ்வாறு பயனளிக்கும் என்று எழுத்தாளர் குறிப்பிடுகிறார்? (பனுவல் இரண்டு) (6 மதிப்பெண்கள்) | |
| Q3 புகழ் எல்லாச் செல்வங்கைவிடச் சிறந்தது என ஏன் கருதப்படுகிறது? (பனுவல் ஒன்று) (5 மதிப்பெண்கள்) | |
| Q4 உடல் நலம் மன நலம் ஆகிய இரண்டும் இன்றியமையாதவை என்பதை நீ ஏற்றுக்கொள்கிறாயா? கொடுக்கப்பட்டுள்ள இரு பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு உன் கருத்துக்களைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் தட்டச்சு செய்க. (15 மதிப்பெண்கள்) | |

H

# 2017 PRELIMINARY EXAMINATION 2

Pre-university 3

தமிழ் மொழி, இலக்கியம்

**9567/2**

தாள் 2

29 Aug 2017

**TAMIL LANGUAGE AND LITERATURE**

Paper 2

**1 hour**

---

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1. இத்தேர்வில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

2. கொடுக்கப்பட்டிருக்கும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றையொட்டி அமைந்த வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.

| H | Singapore – Cambridge<br><br>General Certificate of Education Advanced Level **Duration 1h 0m 0s** |
|---|---|

**பனுவல் 1**

**உடல் நலம்**

பணம் படைத்தவர்களைச் செல்வந்தர்கள் என்று சொல்கிறோம். ஆனால், அது மட்டுமே ஒருவனைச் செல்வந்தன் ஆக்கிவிடுவதில்லை. முதலில் அவன் உடல் நலத்துடன் இருக்க வேண்டும். இந்த உடல்தான் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருக்கிறது. உடல் நலம் சீராக இருக்கும்போதுதான் மற்ற செல்வங்களால் பயன் விளையும். உடல் நலம் என்னும் செல்வம் இருக்கும்போதுதான் மற்ற செல்வங்களை ஒருவனால் துய்க்க இயலும். உடல் நலம் மற்ற எல்லாச் செல்வங்களையும் நம் காலடியில் கொண்டு வந்து குவிக்கும். மருத்துவமனையில் இருக்கின்ற பணக்காரனைவிட நோய்நொடி இல்லாத ஏழை மகிழ்ச்சியாக இருப்பான்.

ஒருவனிடம் முக்கியமாக அமைந்திருக்க வேண்டியது மனநலம். மனம் குறைபாடு இல்லாமல் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்றால் அந்த மனம் அன்பினால் நிறைக்கப்பட்டிருக்க வேண்டும். நுட்பமான அறிவைக் கொண்டதாக இருக்க வேண்டும். மனிதநேயம் உடையதாக இருக்க வேண்டும். தொலைநோக்குப் பார்வை உடையதாகவும், அமைதியை நாடுவதாகவும் இருக்க வேண்டும். இத்தனையும் இருந்தால்தான் அது மனநலம். இந்த மன நலம் உடையவர்களால்தான் மற்ற செயல்களைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

அடுத்த செல்வம் குடும்ப நலமாகும். வீடுதான் ஒரு மனிதனின் தொடக்கம். வீடு என்பது குடும்பம் மட்டுமல்ல. நம்மைச் சுற்றியிருக்கும் சுற்றத்தார் நண்பர்களையும் கூட குறிக்கும். உடல் நலமும் அறிவுக்கூர்மையும் கொண்டவராக இருந்தாலும் வீட்டில் நிம்மதி இல்லையென்றால் ஒருவரால் நிம்மதியாக வாழ இயலாது.

இறுதியாகப் புகழ் மற்ற செல்வங்களைவிடச் சிறந்தது. முதலில் சொல்லப்பட்ட செல்வங்கள் எல்லாம் ஒரு மனிதனின் வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதை அவனுக்குக் காட்டும். ஆனால், புகழ் செல்வமோ

**பனுவல் 2**

**உடலும் உள்ளமும்**

உடலைப் பேணும் வழிகளைச் சரியாகத் தெரிந்துகொண்டு அனுசரித்து வந்தால், பிற்காலத்தில் ஏற்படக்கூடிய உடல்நலப் பாதிப்புகளைத் தவிர்க்க முடியும். புதிதாகத் தெரியவந்துள்ள உண்மைகளின் அடிப்படையில் எப்படி உடல் நலத்தைப் பேணுவது என்பதை மாணவப் பருவத்திலேயே அறிந்து பின்பற்றுவது நல்லது. வாழ்வின் முழு வெற்றிக்கு உடல்நலம் பேணல் அவசியமான ஒன்று. உடலுக்கும் மனத்திற்கும் நிறையத் தொடர்புகள் உண்டு. மனம் பாதிக்கப்படும்போது உடலும் பாதிப்படையும். “ஒரு மனிதன் நோயற்று இருந்தால் அவனைச் சுகாதாரமான அல்லது ஆரோக்கியமான மனிதன் என்று கூறிவிட முடியாது. மாறாக மனிதனின் உடல், உள்ளம் இரண்டும் ஆரோக்கியம் பெற்றிருப்பதே உண்மையான சுகாதாரமாகும்”, என்று உலகச் சுகாதார நிறுவனம் கூறுகிறது. நோய் நொடியின்றி இருப்பதற்கும், மகிழ்ச்சியோடு வாழ்வதற்கும் மனநலம் மிகவும் முக்கியமானதாகும். மனத்தால் வாழ்வதுதான் மனித வாழ்க்கை. மனத்தால் வாழக்கூடிய தன்மையும் ஆற்றலும் மனிதனைத் தவிர பிற உயிரினங்களுக்கு இல்லை. மனத்தில் உண்டாகும் உணர்ச்சிகள்தாம் மனிதனது இன்ப துன்பங்களுக்குப் பெரிதும் காரணமாயிருக்கின்றன.

மாணவப் பருவத்தில் உடல் உழைப்பிற்கு அவசியம் இல்லாமல் இருப்பதாலேயே அவர்கள் விளையாட்டுகளில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். உடலை வருத்தாமல் மூளையை மட்டும் கசக்கிப் பிழிந்துகொண்டிருந்தால் உடல்நலம் குன்றும். உடலை உழைப்பில் ஈடுபடுத்தினால் தசை இயக்கம், இரத்த ஓட்டம், சுவாச இயக்கம் போன்றவை சீர்படும். மேலும், மூளையையும் களைப்படையாமல் இயங்கச் செய்து அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அத்துடன் நாள்தோறும் ஓட்டப் பயிற்சி மேற்கொள்வதால் இளமை பாதுகாக்கப்படுவதாகவும், மூப்பின் செயல்பாடுகள் மெதுவாக இருக்குமென்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்

| | |
|---|---|
| அதை உலகத்துக்கே வெளிச்சமிட்டுக் காட்டும். 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்பது வள்ளுவரது வாய்மொழி. ஆகவே நாம் எப்படிப்பட்ட நிலையில் வாழ்பவராயினும் நம் கடமைகளைச் செம்மையாகச் செய்து புகழடைய முயல வேண்டும். | தெரிவித்துள்ளனர். |

| | |
|---|---|
| | National Junior College<br><br>**Preliminary Exam – H2 –Tamil –JC2** |

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ் மொழி, **இலக்கியம்**<br>தாள் 1 (பகுதி1)<br><br>HIGHER 2 TAMIL LANGUAGE - PAPER 1 (Part 1)<br><br>Additional materials provided: Writing papers | **A**<br>**9567/1**<br>**29 August 2017**<br>Tuesday<br>Duration: 2.15hrs<br>(For Part 1 & 2) |

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 - வ்வினாத்தாளின் முதற்பகுதியும் - ரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ள. - வ்விரண்டு பகுதிக்கும் விடையளிப்பதற்கு 2.15 மணிநேரம் வழங்கப்பட்டுள்ளது.

2 முதற் பகுதிக்கும் - ரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 அகராதியைப் பயன்படுத்துதல்:

**அ** முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தலாம்.

**ஆ** - ரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

**இ** நீவிர் பயன்படுத்தும் அகராதியின் பெயரை விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையின் மேல் வலப்பக்கக் கோடியில் எழுதவேண்டும்.

4 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு_ புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

5 பயன்படுததப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு தாள்களையும் தேர்வு நடைபெறும் - டத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

வினாக்கள் பக்கம் 2-- ல் அச்சிடப்பட்டுள்ளன

**உயர்தரம் 2**
**தமிழ்மொழி, இலக்கியம்**
**தாள் 1 (பகுதி 1)**

1. பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக.

(35 மதிப்பெண்கள்)

Q1. "நல்வாழ்விற்கு அடிப்படையான அன்பும் அறனும் மக்களிடம் இன்று மிகவும் குறைந்து விட்டன" - விவாதிக்க.

Q2. "ஒரு நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கை அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் அமைவது அந்நாட்டை வழிநடத்தும் தலைவர்களின் கைகளில்தான் உள்ளது" கருத்துரைக்க.

Q3. இன்று உலகம் எதிர்நோக்கும் மிகப்பெரிய சவால் என நீவிர் எதனைக் கருதுகிறீர்? - ஆராய்க.

Q4. அடியில் கொடுக்கப்பட்டுள்ள படக்காட்சி உணர்த்தும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.



| National Junior College<br><br>**Preliminary Exam – H2 –Tamil –JC2** | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ் மொழி<br>தாள் 1 (பகுதி2)<br><br>HIGHER 2 TAMIL LANGUAGE - PAPER 1 (Part 2)<br><br>Additional materials provided: Writing papers | **A**<br>**9567/1**<br>**29 August 2017**<br>Tuesday<br>Duration: 2.15hrs<br>(For Part 1 & 2) |

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 - வ்வினாத்தாளின் முதற்பகுதியும் - ரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ள. - வ்விரண்டு பகுதிக்கும் விடையளிப்பதற்கு 2.15 மணிநேரம் வழங்கப்பட்டுள்ளது.

2 முதற் பகுதிக்கும் - ரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 அகராதியைப் பயன்படுத்துதல்:

**அ** - ரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

4 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு_ புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

5 பயன்படுததப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு தாள்களையும் தேர்வு நடைபெறும் - டத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

வினாக்கள் பக்கம் 4 முதல் 6 வரை அச்சிடப்பட்டுள்ளன

**உயர்தரம் 2**
**தமிழ்மொழி, இலக்கியம்**
**தாள் 1 (பகுதி 2)**

## “அ” பிரிவு

**I** முன்னுணர்வுக் கருத்தறிதல் (5 **மதிப்பெண்கள்**)

பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

மனித உரிமைகள் என்றால் என்ன என்பதில் தொடங்கி எவையெல்லாம் மனித உரிமை மீறல்கள் என்பதை எளிமையான கதைகளின் மூலமாகவும், ஊடகங்களில் வெளியான உண்மை நிகழ்வுகள் மூலமாகவும் எடுத்துச் சொல்கின்றனர். இவற்றோடு **Q1** __________ மனித உரிமை மீறல்களிலிருந்து சட்டப்படியான பாதுகாப்பையும் நிவாரணத்தையும் பெறுவதற்கான வழிமுறைகளையும் கூட கற்றுத் தருகின்றனர். இந்தப்பாட முறையின் காரணமாக, ஒரு சிறுவனால் ஒரு பெண் குழந்தையின் உயிரைக் **Q2** ___________ முடிந்தது. இன்றைய கல்வி முறையானது, ஒரு மனிதன் பிழைக்க உதவக் கூடியதாக இருக்கிறதே அன்றி வாழ வழி செய்வதாக **Q3** _____________ என்கின்றனர் பலர். பிழைப்பு என்பது பொருளாதாரத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதற்கு சமூகத்தைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை. எந்த ஒரு மனிதனின் திறனும், அவன் பெற்றிருக்கும் புகழ் மற்றும் பொருளாதார வளர்ச்சி இவற்றை வைத்தே **Q4** ____________. ஒருவருக்கு ஏதேனும் தனித்திறன் இருப்பின் உடனடியாக "இத்தனைத் திறனை வைத்துக் கொண்டு ஏன் சும்மா இருக்கிறாய்? அதை வைத்து தொழில் செய்யலாமே? பொருள் Q**5** ____________?" என்ற கேள்விகள் எழும் அளவிற்கு, "இத்திறனை பிறருக்கு பயன்படுமாறு பயன்படுத்தலாமே" என்ற வினா எழுவதே இல்லை.

## “ஆ” பிரிவு

**II** <u>சுயவிடைக் கருத்தறிதல் (1)</u> (30 **மதிப்பெண்கள்)**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

பண்டைய சமுதாயங்களோடு ஒப்பிடும்போது இன்றைய சமூகம் (நவீன) சிக்கலானதாக, எளிதில் புரிந்து கொள்ள முடியாதவையாக உணரப்படுகின்றது. இதன் உட்பொருள் அன்றைய சமுதாயங்கள் எளிமையாகவோ, எதிர்வினையற்று ஒருங்கிணைக்கப்பட்டவையாகவோ செயல்பட்டன என்பது அல்ல. ஆனால், அவற்றுள் எழுந்து வந்த முரண்பாடுகளும் பூசல்களும் பண்பாடு, மதம், மரபு என்ற பெயர்களால் மறைக்கப்பட்டோ, மறுக்கப்பட்டோ வந்தன என்பதே உண்மை. மேலும், பல **<u>சந்தர்ப்பங்களில்</u>**, பல்வேறு காரணங்களால் பொங்கி எழும் முரண்பாடுகள் முற்றி வெளிப்படும் தேவை இல்லாமல் போய் விட்டதும் மற்றொரு அம்சம். அவற்றிற்கு மாறாக இன்றையவையோ, மாறி மாறி எழும் சிக்கல்களையும் முரண்பாடுகளையும் மறைக்கவோ மறுக்கவோ முடியாமல் ‘சமாளிக்க வேண்டியவை' என்று ஏற்றுக் கொண்டு செயல்பட வேண்டிய நிர்பந்தத்திற்கு உட்பட்டவை.

இச்சிக்கல்களுக்கும் முரண்பாடுகளுக்கும் அடித்தளமாயும், அவற்றின் வெளிப்பாடுகளுக்கும் செயல்பாடுகளுக்கும் வடிகாலாகவும் அமைந்து அவை ஓர் எல்லையைத் **<u>தாண்டாமலும்</u>**, அவற்றின் செயல்பாடுகளால் சமூகம் உருக்குலையாமல் காப்பதற்குக் காரணியாகவும் பயன்படுவது இந்தக் கருத்தியலே. இந்தப் பின்னணியில் இருந்து நோக்கும்போது, அன்றைய சமூகங்களில் போல் அல்லாமல், இன்றையவற்றில் தெளிவாகவே, வெளிப்படையாகவே கருத்தியல் இருந்து பன்மையாகவும் பல திசைகளிலும் செயல்படுவதை உணரலாம். ஆயினும் இப்பன்மையையே ஒருமையாகக் காட்டும் பெரும் முயற்சிகளும், இம்முயற்சிகளுக்கு எதிர்வினையாக ஒருமையாகக் காட்டப்படும் கருத்தியலைக் கட்டவிழ்த்து, அதனுள் அடங்கிய முரண்பாடான பன்மைகளைக் கொணரும் சிறு முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்றே வருகின்றன. கருத்தியல் ஒருமையாகவோ, பன்மையாகவோ உணரப்படுவதும், வெளிப்படுத்தப்படுவதும் சமூக சக்திகளின் அசைவுகளையும், நெளிவு சுளிவுகளையும், ஏற்ற இறக்கங்களையும் பொறுத்தே அமையும்.

ஆகவே, இன்றைய சமுதாயத்தில் மிக வேற்றுமையற்றதும் மிக வேற்றுமையுற்றதுமாகிய பல கருத்தியல்கள், சமூக அல்லது குழு சக்திகளின் பிரதிபலிப்பாக இயங்குவது கண்கூடு. இவையாவும் ஒரே நிலையிலோ, நேர் கோட்டிலோ செயல்படாமல் என்றும் நிலையற்றவையாக ஒன்றையொன்று வெட்டியும் ஒட்டியும், சூழ்நிலைகளுக்கும் மாறிவரும் ஈடுபாடுகளுக்கும் ஏற்றதுபோல் உருப்பெற்றுச் செயல்படுவதையும் காண்கிறோம். எனவே, சமூக இயங்கியலை மேலெழுந்த வாரியாகவோ அல்லது அதன் ஓர் **<u>அம்சத்தை</u>** மட்டும் தனிமைப்படுத்தியோ ஆய்வு செய்யும் போது, இந்தப் பன்மையான கருத்தியல் உதிரியாகச் செயல்படுகிறதென்றும், அதனை ஒரு கிரமமான

கண்ணோட்டத்துக்குள் அடக்கி புரிந்து கொள்ள முடியாது என்ற முடிவுக்குமே வரவேண்டியிருக்கிறது. மாறாக, சமூகத்தின் அடித்தள இயங்கியலை ஒட்டு மொத்தமாகவும் விமர்சனக் கண்ணோட்டத்துடனும் ஆய்வுக்குட்படுத்தும் போது, கருத்தியல்கள் உதிரியானவை அல்ல என்றும் அவை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒன்றோடொன்று பிணைந்தும் இணைந்தும், வெட்டியோ ஒட்டியோ செயல்படுவன என்றும் அவை அனைத்தையும் ஒரே கிரமத்துள் அடக்கிப் புரிந்து கொள்ளவியலும் என்பது தெரியவரும்.

இயக்கத்தில் இருக்கும் எல்லா சமுதாயங்களிலும் எந்த நிலையிலாயினும் குறைந்த அல்லது நிறைந்த அளவில் ஒன்றுபட்ட கருத்தியல் உணர்வு இருக்கிறது என்றே கொள்ள வேண்டும். ஆனால், அத்துடன் அதே கூட்டுணர்வைக் குலைக்கும் எதிர்வினையாக, வலிமை படைத்த துருவ முரண்பாடுகளும் உடன் இருக்கவே செய்கின்றன. கூட்டுணர்வும், அதற்கெதிரான துருவ உணர்வும் ஒரே கருத்தியல் தொகுதியின் மாறுபட்ட முகங்களே. சிக்கலான சமுதாயத்தின் பலதரப்பட்ட செயல்பாடுகள், துருவத் தன்மையையோ, கூட்டுணர்வையோ தூண்டியும் உற்பத்தியும் செய்து விடக்கூடியவையாக இருப்பதால் இரண்டிற்குமிடையேயான சமன்நிலை, சீராகவோ, ஒரே நிலையிலோ நிலைப்பதில்லை.

**வினாக்கள்**

Q6. “இன்றைய சமூகம் புரிந்து கொள்ள முடியாதவை” என்பதன் உட்பொருள் என்ன? (6)

Q7. காரணியாக பயன்படும் கருத்தியலின் பின்னணியில் இருந்து நோக்கும்போது தெரிய வரும் செய்திகள் யாவை? (6)

Q8. “அவை அனைத்தையும் ஒரே கிரமத்துள் அடக்கிப் புரிந்து கொள்ளவியலும்” எனும் தொடரில் ‘**அவை**’ என்பது எதனைக் குறிப்பிடுகிறது? (6)

Q9. கூட்டுணர்வும், அதற்கெதிரான துருவ உணர்வும் ஒரே கருத்தியல் தொகுதியின் மாறுபட்ட முகங்கள் என்று ஏன் கூறப்படுகிறது? (6)

Q10. பொருள் கூறுக (6)

அ. சந்தர்ப்பங்களில்
ஆ. தாண்டாமலும்
இ. அம்சத்தை



(முற்றும்)

# National Junior College

**Preliminary Examination – H2 –Tamil -JC2**

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ் மொழி, **இலக்கியம்**<br>தாள் 2<br><br>HIGHER 2 TAMIL LANGUAGE - PAPER 2<br><br>Additional materials provided: Writing papers | **A**<br>**9567/2**<br>**29 August 2017**<br>**Tuesday**<br>Duration: 1hr |

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 - ப்பகுதிக்கு விடையளிப்பதற்கு 1 மணிநேரம் வழங்கப்பட்டுள்ளது.

2 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு_ புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

3 பயன்படுததப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு தாள்களையும் தேர்வு நடைபெறும் - டத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

| |
|---|
| வினாக்கள் பக்கம் 2,3,4-- ல் அச்சிடப்பட்டுள்ளன |

**I <u>சுயவிடைக் கருத்தறிதல்</u>** (2) (30 **மதிப்பெண்கள்)**

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக**.

**<u>பனுவல் ஒன்று</u>**
**<u>உணவே மருந்து, மருந்தே உணவு</u>**

சித்த மருத்துவத்தில் சித்த உணவியல் துறையைத் துவங்கி அதை முழுமையாகத் தமிழ் சமூகத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய ஒரு பெரிய முயற்சியி இது.. ஏன் என்றால் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தை வாளோடு முன் தோன்றிய மூத்த குடிமக்கள் வாழ்ந்த தமிழ்நாட்டில் இருந்துதான் நாகரீகமாக இருந்தாலும் சரி, உணவுக் கலாச்சாரமாக இருந்தாலும் சரி உலகம் முழுக்க எடுத்துச் சென்றதற்கான மிகப்பெரிய ஆதாரங்கள் உள்ளது. ஆக இந்த உணவு சார்ந்த கலாச்சாரம் உணவையே மருந்தாக பயன்படுத்திய தன்மை, அதன் பாங்கு எல்லாமே தமிழர்களுடைய வாழ்வியல் முறையில் தான் இருக்கிறது. அதற்கான ஆதாரம், எட்டுத்தொகை படித்தாலும் சரி, பத்துப்பாட்டு, கலித்தொகை படித்தாலும் சரி, உள்ளது. எல்லாவற்றிலும் பார்க்கும் பொழுது உணவு சார்ந்த மிகப்பெரிய ஆய்வு தமிழர்களுடைய சங்ககால இலக்கியங்களில் இருக்கிறதை நாம் கண் கூடாகப் பார்க்கலாம்.

ஆக தமிழர்கள், உணவே மருந்து, மருந்தே உணவு என்ற கொள்கையில் முழுமையாக இருந்து வாழ்ந்தார்கள். தமிழகத்தில் தோன்றிய சித்த மருத்துவத்தில், சித்தர்களால் வழங்கப்பட்ட சித்த மருத்துவத்தில் கடைப்பிடிக்கப்பட்ட ஒரே ஒரு விஷயம் என்னவென்றால், எது உனக்கு உணவாக இருக்கிறதோ அதுவே மருந்தாக இருக்க வேண்டும், எது உனக்கு மருந்தாக இருக்கிறதோ அதுவே உணவாக இருக்க வேண்டும் என்ற கொள்கை. சித்தர்கள் "பதார்த்தகுண சிந்தாமணி" என்ற நூலை எழுதி அந்த நூலிலே நாம் சாப்பிடக்கூடிய தண்ணீருக்கு என்ன குணம்? பாலுக்கு என்ன குணம்? பருப்புக்கு என்ன குணம்? அதே போல அரிசிக்கு என்ன குணம்? அரிசியில் எத்தனை வகை இருக்கிறது? பாலில் எத்தனை வகை இருக்கிறது? வெள்ளாட்டுப் பாலுக்கு என்ன குணம்? பசும்பாலுக்கு என்ன குணம்? காராம்பசு பாலுக்கு என்ன குணம்? எருமைப்பாலுக்கு என்ன குணம்? என்று ஒவ்வொன்றையும் வகைப்படுத்தி முழுமையாக எழுதியிருக்கிறார்கள். அந்த உணவுப் பொருள்களுக்கான குணத்தை வகுத்து, ஒரு மனிதன் தன்னுடைய உடல் கூறுக்குத் தகுந்த எந்த உணவை எந்தப் பருவகாலத்தில் சாப்பிடவேண்டும்? என்ற முறைகள் எல்லாம் தமிழர்களுடைய பழங்கால வாழ்வியல் முறைகளில் எல்லாமே எழுதப்பட்டுள்ளது.

## பனுவல் இரண்டு

## உணவே மருந்து, உணவே நச்சு

உலகத்துக்கே எடுத்துக்காட்டாக இருந்த தமிழ்ச் சமூகம் இன்றைக்கு உபயோகப்படுத்தக்கூடிய உணவுகள் என்ன? என்பதை பட்டியலிட்டுப் பார்த்தோமானால் மிகவும் வேதனை தரக்கூடிய விஷயமாக இருக்கிறது .உணவே மருந்து மருந்தே உணவு என்று இருந்த தமிழ்ச் சமூகம் இன்றைக்கு உணவே மருந்து, உணவே நச்சு என்ற கோட்பாட்டுக்கு ஒத்துக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறதுஅதற்கான காரணம் என்ன .? ஏன் இந்த உணவு சார்ந்த விழிப்புணர்வு இல்லாத சூழல் இங்கு உண்டாயிற்று? என்பதை எங்களுடைய ஆய்வில் எடுத்து ஒன்றொன்றாகச் செய்து கொண்டிருக்கிறோம் . ஆக உணவை எவ்வாறு மருந்தாக மாற்றுவது?

தமிழர்கள் பழங்காலத்தில் பயன்படுத்திய உணவுகள் என்று பார்க்கும் பொழுது சிறு தானியம் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்அதில் . பிரதானமானது வரகு, திணை, குதிரை வாலி, சாமைஇதனைத் தொடர்ந்து . சாப்பிட்ட தமிழர்களுக்கு எந்த நோய் நொடியும் இல்லாமல் நல்ல சிறு .ஆரோக்கியமான சூழலில் வாழ்ந்ததை நாம் கண்கூடாக பார்க்க முடிகிறது தானியங்களை உபயோகப்படுத்தும் பழக்கம் எல்லாத்தட்டு மக்களிடையுமே .அப்படியே இருந்திருக்கிறதுஅதாவது ஆடி, பொங்கல், தீபாவளி போன்ற தினங்களில் மட்டுமே அரிசி சோற்றை சாப்பிட்டு வந்த தமிழ்ச் சமூகம் ஒன்று இருந்ததுஅது காலப்போக்கில் அன்னியர் ஆதிக்கத்திற்குப் பிறகு ., மேற்கத்தியக் கலாச்சார மோகம் வந்த பிறகு தினமும் அரிசிச் சோறு சாப்பிடக்கூடிய பழக்கம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுக்கவுமே வேரூன்றக்கூடிய காலகட்டம் வந்ததுஆக பாரம்பரிய சிறுதானிய உணவுகளைத் தினசரி பயன்படுத்தும் போது . .நோயின் தாக்கம் மிகவும் குறைவாக இருந்தது

## <u>வினாக்கள்</u>

Q1. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக (4 மதிப்பெண்கள்)

உணவு சார்ந்த விழிப்புணர்வு இல்லாத சூழல் இங்கு ஏன் உண்டாயிற்று என்பதை எங்கள் ஆய்வில் எடுத்து ஒன்றொன்றாகச் செய்து கொண்டிருக்கிறோம்

அ) வேற்றுமைத் தொகை

ஆ) வினையெச்சம்

Q2. சித்தர்கள் "பதார்த்தகுண சிந்தாமணி" என்ற நூலில் எழுதியிருக்கும் செய்திகள் யாவை? (பனுவல் ஒன்று) (5 மதிப்பெண்கள்)

Q3. கருத்துகள் அடிப்படையில் பனுவல் இரண்டு எவ்வகையில் பனுவல் ஒன்றோடு வேறுபட்டிருக்கிறது? (6 மதிப்பெண்கள்)

Q4. பாரம்பரிய உணவு முறைகள் குறித்து பனுவல் இரண்டில் கூறப்பட்டுள்ள கருத்துகள் போதுமானவையா என்று கருத்துரைக்க. உனது கருத்துகளை 140 சொற்களில் எழுதுக. (பனுவல் இரண்டு) (15 மதிப்பெண்கள்)

((முற்றும்)

# National Junior College

**Preliminary Examination – H2 –Tamil –JC2**

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ் மொழி, **இலக்கியம்**<br>தாள் 3<br><br>HIGHER 2 TAMIL LANGUAGE - PAPER 3<br><br>Additional materials provided: Writing papers | **A**<br>**9567/3**<br>**11 September 2017**<br>Monday<br>Duration: 3hrs |

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு_ புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

2 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு தாள்களையும் தேர்வு நடைபெறும் - டத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

வினாக்கள் பக்கம் 2,3-- ல் அச்சிடப்பட்டுள்ளன

## உயர்தரம் 2
## தமிழ் இலக்கியம்
## தாள் 3

**முக்கியக் குறிப்புகள்**

**மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

### ‘அ’ பிரிவு

**நாவல்**

Q1. இல்லற வாழ்க்கை சிறப்படைவதற்குத் தேவையான அடிப்படைப் பண்புகள் யாவை? அவற்றை வெளிக்கொணரும் வகையில் டாக்டர் மு வரதராசன் கதைமாந்தர்களைப் படைத்துள்ள பாங்கினை விளக்குக.

Q2. குமரேசனின் செயல்பாடுகள் நாவலின் வளர்ச்சிக்கு எவ்வகையில் துணைபுரிகின்றன - ஆராய்க.

### ‘ஆ’ பிரிவு

**சிறுகதை**

Q3. “விடியுமா” எனும் சிறுகதை வாயிலாக அதன் ஆசிரியர் கு. ப. ரா. வாசகர்களாகிய நமக்குக் கூற விரும்பும் செய்திகள் யாவை?.

Q4. “ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது” என்னும் சிறுகதை, சிறுகதைக்குரிய கூறுகள் பலவற்றையும் தன்னகத்தே உடைய ஒரு சிறந்த கதை என்று கூறலாமா” - ஆராய்க.

## ‘இ’ பிரிவு

**நாடகம்**

Q5. “சிங்கப்பூர் மாப்பிள்ளை” என்ற நாடகம் வாயிலாக அதன் ஆசிரியர் கூற விரும்பும் கருத்துகளில் முதன்மையானது என நீவிர் எதனைக் கருதுகிறீர்? ஏன்? விளக்குக.

Q6. “காதல் என்ன விலை” என்ற நாடகம் நமது சமுதாயத்தின் யதார்த்த வாழ்வை அழகாக வெளிப்படுத்தும் ஒரு சிறந்த நாடகம் - ஆராய்க

## ‘ஈ’ பிரிவு

**கவிதை**

Q7. “புறநானூற்றுப் பாடல்களில் கூறப்படும் கருத்துகள், மாந்தர்கள் சிறப்புற வாழ்வதற்கு பொருத்தமானவைகள்” - விளக்குக

Q8. “இயற்கை இன்பம்” “சாந்தி தரும் அந்தி” ஆகிய இரு பாடல்கள் வாயிலாக வெளிப்படும் செய்திகள் குறித்து ஆராய்க.

(முற்றும்)

RAFFLES INSTITUTION
2017 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

**தமிழ் மொழி, இலக்கியம்** **9567/1**

தாள் 1 (பகுதி 1)

**TAMIL LANGUAGE AND LITERATURE** **19 Sep 2017**

**Paper 1 (Part 1)**

2 hours 15 minutes
(Total time for Part 1 and Part 2)

Additional Materials: Answer Paper

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 இவ்வினாத்தாளின் பகுதி 1, பகுதி 2 ஆகியவை தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.

2 பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றுக்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

4 அகராதியைப் பயன்படுத்துதல்:

(அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப் பயன்படுத்தலாம்.

அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள்.

(ஆ) பகுதி 1க்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப் பயன்படுத்தக் கூடாது.

இவ்வினாத்தாள் 4 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது


**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக.** (35 மதிப்பெண்கள்)

Q1 சிங்கப்பூரில் 'இன மத வேறுபாடுகளுக்கிடையில் நல்லிணக்கம் காண்பது நம் பெருமைமிகு சாதனைகளில் ஒன்று'. கருத்துரைக்க.

Q2 'அச்சம் இருக்கும் வரை அறிவாளியாக முடியாது'. விளக்குக-**பாரதியார்**

Q3 நம் நாட்டில் பல சம்பவங்கள் நடப்பதுண்டு. அச் சம்பவங்களுள் நம்மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவம் ஒன்றினையும் அதிலிருந்து நீ கற்றுக் கொண்ட பாடத்தையும் விவரித்து எழுதுக.

Q4 பின்வரும் சூழலைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.




**<u>முற்றும்</u>**

RAFFLES INSTITUTION
2017 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

**தமிழ் மொழி, இலக்கியம்** **9567/1**

தாள் 1 (பகுதி 2)

**TAMIL LANGUAGE AND LITERATURE** **19 Sep 2017**

**Paper 1 (Part 2)**

**2 hours 15 minutes**

Additional Materials: Answer Paper (Total time for Part 1 and Part 2)

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 முதல் பகுதியின் முகப்பு அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பார்க்கவும்

இவ்வினாத்தாள் 4 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது

## <u>‘அ’ பிரிவு</u>

**<u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>** (5 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக.**

வாழ்க்கையில் நெருக்கடிகள் நேர்வது(Q1)_______________. அப்போது தான் அறிவும் திறனும் பயன்பட வேண்டும். நெருக்கடி நேரும்போது எப்படி நடந்து கொள்வது என்று தெரியாததும் குறை தான். (Q2)_______________ முதன்மையாதோ அதைப் போற்றி மற்றவற்றைக் கைவிடத் தெரியாததும் குறை தான். இதே போல் தேர்வுக்குப் படிக்கும் மாணவன், தேர்வு நேரத்தில் பாட நூல்கள் முதன்மையானவை என்று உணர்ந்து மற்றவற்றைக் கைவிடத் துணியாவிட்டால் பயன் என்ன?

காந்தியடிகள் எவ்வளவு பெரிய போராட்டம், எத்தனை முறை நடத்தியிருக்கிறார். (Q3)_______________அதற்கு இணை இல்லை. ஆயினும் எவ்வளவு தெளிவும் துணிவும் அவருக்கு இருந்தன. சத்தியத்திற்காகவும், அகிம்சைக்காகவும் நாட்டின் விடுதலையையும் பொருட் படுத்தாது இருந்தார். நாட்டின் விடுதலை என்று வந்தபோது தம் அமைதியையும் குடும்ப நன்மையையும் கைவிடத் துணிந்தார். இப்படி எத்தனையோ(Q4)_______________ கண்டு, உடனுக்குடன் துணிந்து செயலாற்றிய வீரர் அவர்.

குடும்பத்திலுள்ளோர் இந்தத் தெளிவையும் துணிவையும் பெற்றுவிட்டால், ஒருவர் மற்றவருக்காகத் தியாகம் செய்யும் கலை இயல்பாக அமைந்து விடும். அப்போது வெளியுலகம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. வெளியுலகம் அவர்களை (Q5)_______________ என்று வெறுக்காது. வெறுக்கவும் முடியாது.

## <u>‘ஆ’பிரிவு</u>

**<u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (1) (30 மதிப்பெண்கள்)**


**பின்வரும் கட்டுரைப்பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, கேட்கப்படும் வினாக்களுக்கு உமது சொந்த நடையில் விடை எழுதுக.**

நெறிமுறைகள் என்பன ஒரு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பின்பற்றப்படும் நன்னடத்தை முறைகளாகும். உதாரணமாக நீதி, நியாயம், நேர்மை ஆகியனவற்றைக் கூறலாம். நெறிமுறைகள் பொதுவாகவே வாழ்வில் ஒருவருடைய நன்னடத்தைக்குத் தோற்றுவாய்களாக விளங்கக்கூடியவை. ஆனாலும் ஒருவர் நல்ல நடத்தையுள்ளவர் என்பதால் அவர் நெறிமுறைகளுக்கு உட்பட்டு வாழ்கிறார் என்று கூறி விட முடியாது. வெவ்வேறு சமூகங்கள் வெவ்வேறு விதமான நெறிமுறைகளுக்கு உட்பட்டு வாழ்கின்றன. ஒரு சமூகத்திற்குச் சரியெனப்பட்டது மற்றொரு சமூகத்திற்கு ஏற்புடையதாகாது. கடந்த காலங்களில் சந்திக்காத ஒரு புதிய சவாலாக ஓரின சமூகத்தில் வாழ்ந்திருந்த மனிதர்கள் அனைவரும் இன்று பன்முகமான சமூகங்களில் வசிக்கின்றோம். ஒரே இனமாக ஒரேவிதமான நெறிமுறைகளுக்கிணங்க வாழ்ந்த சமூகங்கள் ஒன்றுகலந்து இன்று **<u>ஒருமுகப்படுத்தப்பட</u>**வேண்டிய நெறிமுறைகளுக்கிணங்க வாழ வேண்டியுள்ளது

எல்லாம் கலந்து ஒரே நாடாக கட்சியளிக்கும் இவ்வுலகில் எனது உனது என்று நாம் நெறிமுறைகளை வைத்துக் கொண்டிருக்க முடியாது. எல்லா மக்களையும் இனங்களையும் உள்ளடக்கக்கூடிய நெறிகளை நாம் கடைப்பிடித்தாக வேண்டும். எல்லோரையும் சமமாக மதிப்பதும் ஒரு நன்னடத்தையே. அப்படிச் சமமாக மதிக்கவேண்டுமானால் சமமான நடத்தை முறைகள் வேண்டும். அதாவது இவ்வுலகில் வாழ்வதற்கு நமக்கு உடலும் அதைச் சேர்ந்த **<u>அவயங்களும்</u>** மிகவும் அவசியம். கைகால்கள் இல்லையெனில் வாழ்க்கை பெரிதும் துன்பமாகிவிடும். நிறைய காரியங்களை நம்மால் செய்ய இயலாது போகும். அதே போல் அடுத்த உலகங்களில் நாம் வாழப்போகும் வாழ்க்கைக்கு இவ்வுலகிற்குத் தேவைப்படும் கைகால்கள் போன்றுள்ள வேறு பல ஆற்றல்கள் அவசியமாகின்றன. அச்சக்திகள் இல்லாமல் அவ்வுல வாழ்க்கை நரகமாகிவிடும்.

நித்தியமான அவ்வுலக வாழ்வு அநித்தியமான இவ்வுலகில் நாம் கடைபிடிக்கப்போகும் நெறிமுறைகளையே பெரிதும் நம்பியுள்ளது. ஆக இவ்விஷயமே நம்மை ஓர் ஒழுங்குடனான வாழ்க்கை வாழ்வதற்குத் **<u>தூண்டுகோலாக</u>** இருக்கவேண்டும். பொதுவாக எல்லாருமே நெறிமுறைகள் குறித்து ஓரளவிற்கு அறிந்து வைத்திருப்பார்கள். தெரியாது என யாருமே கூற முடியாது. அப்படித் தெரியாவிட்டாலும் பாதகமில்லை,

வாழ்க்கையின் நோக்கம் அறிந்து அதற்குகந்த நன்னடத்தையுடன் வாழ வேண்டும் எனும் ஆழமான அவா மனதில் பதிந்திருக்கவேண்டும். இது முதல் படியாகும். அதாவது மனத் தூய்மையோடு ஒரு காரியத்தில் இறங்குவதாகும் . நெறிமுறைகளின் மதிப்பு பிறவிப் பயனை அடைவதிலேயே இருக்கின்றது. நெறிமுறைகள் இல்லாமல் வாழ்வின் உண்மையான



நோக்கம் நிறைவேறாது. அடுத்து,'அரைக்க அரைக்க அம்மியும் நகரும்' என்பார்கள். அதே போல் நமது பழக்க வழக்கங்களையும் சிறுகச் சிறுகவே மாற்றிக்கொள்ள முடியும். ஒரேயடியாக மாற்ற முடியாது. பழக்கங்கள் தாமாக மாறாது. அதற்கு முயற்சியும் தியாகம் செய்யும் குணமும் தேவை. இதில் விடாப்பிடியாக இருந்தோமானால் காலப்போக்கில் நிச்சயமாக வெற்றி காணலாம். ராபர்ட் புரூஸ், சிலந்தியை வழிகாட்டியாகக் கொண்டே எதிரியை விரட்டியடித்து, வரலாற்றில் முதல் இடத்தைப் பெற்றான். இப் பேரரசன் 16 முறை போர் தொடுத்து போரில் வென்றானாம்.அவனது புகழுக்கு சிலந்தியே காரணம். அதற்கு முயற்சியும் தியாகம் செய்யும் குணமும் தேவை. இதில் விடாப்பிடியாக இருந்தோமானால் காலப்போக்கில் நிச்சயமாக வெற்றி காணலாம். எதிலுமே நாம் கற்கும் மனப்பான்மையைப் பின்பற்ற வேண்டும்.

**<u>வினாக்கள்</u>**

Q6 'நெறிமுறைகள் என்றால் என்ன' என்பதை முதல் பத்தியை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (6 மதிப்பெண்கள்)

Q7 நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் உள்ள சிக்கல்கள் யாவை? (6 மதிப்பெண்கள்)

Q8 நெறிமுறைகளுக்கு இணங்க வாழ்வதற்கான ஊக்கம் பெற என்ன செய்ய வேண்டும்? (6 மதிப்பெண்கள்)

Q9 'சிலந்தியைப் போல' எவ்வாறு நெறிமுறைகளின் சவால்களை வெற்றி கொள்வது என்று கட்டுரையாசிரியர் விளக்குகிறார்? (6 மதிப்பெண்கள்)

Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

அ ஒருமுகப்படுத்தப்பட

ஆ அவயங்களும்

இ தூண்டுகோலாக

**முற்றும்**

RAFFLES INSTITUTION
2017 YEAR 6 PRILIMINARY EXAMINATION
Higher 2

---

**தமிழ் மொழி, இலக்கியம்** **9567/2**
**தாள்** 2

**TAMIL LANGUAGE AND LITERATURE** 20th June 2017
Paper 2

**1 hour**

Additional Materials: Answer Paper

---

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. இத்தேர்வில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.
2. கொடுக்கப்பட்டிருக்கும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து , அவற்றையொட்டி அமைந்த வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்
3. தேர்வாளர் கூறியதும் ,“**START TEST**” என்பதைக் கிளிக் செய்து தேர்வைத் தொடங்கவும் .

.

---

**<u>தன்னம்பிக்கையும்- கர்வமும் !</u>**

தன்னம்பிக்கைக்கும கர்வத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் நிறைய பேருக்குத் தெரிவதில்லை. இரண்டுக்கும் இடையே நூலிழை வித்தியாசம் தான் இருப்பது போலத் தோன்றினாலும் அவை தரும் விளைவுகளில் மலைக்கும் மடுவுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இருக்கிறது. "என்னால் முடியும்" என்று நினைப்பது தன்னம்பிக்கை. "என்னால் மட்டுமே முடியும்" என்று நினைப்பது கர்வம். தன்னம்பிக்கை எல்லா சாதனைகளுக்கும் மூல காரணமாக உள்ளது. கர்வம் எல்லா அழிவுக்கும் காரணமான விஷமாக உள்ளது.

இதை விளக்க உதாரணங்களுக்குப் பஞ்சமில்லை என்றாலும் இந்த இரண்டுமே ஒரே நபரிடத்தில் எப்படி விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது என்பதைக் காண வேண்டுமென்றால் ஹிட்லரின் வாழ்க்கையைப் பார்த்தால் போதும். அசாதாரணமான அறிவும், தன்னம்பிக்கையும் கொண்ட ஹிட்லர் நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளும் முன் ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக இருந்தது. நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமாக இருந்தது. ஆனால் தன்னால் நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை திடமாக அவரிடம் இருந்தது. 1933ல் ஹிட்லர் தன் நாட்டு மக்களிடம் "எனக்கு நான்கே நான்கு வருடங்களைக் கொடுங்கள்." என்று சொன்னபடி நாட்டின் தலைவிதியை மாற்றிக் காட்டினார்.

எழுபது லட்சம் பேர் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருந்த நாட்டில் தொழிற்சாலைகளையும், வாணிப அபிவிருத்தியையும் ஏற்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கினார். நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினார். எல்லாம் அவரது தன்னம்பிக்கை செய்து காட்டியது. ஆனால் அதே தன்னம்பிக்கை கர்வமாக மாற ஆரம்பித்தவுடன் அழிவும் ஆரம்பித்தது. தன்னை மிஞ்ச ஆளில்லை என்ற எண்ணம் வலுப்பட ஆரம்பித்தவுடன் அவர் எடுத்த முடிவுகள் அவரது நாட்டை மட்டுமல்லாமல் உலகத்திலேயே பேரழிவுகளை ஏற்படுத்தின. இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட அழிவுகளை இன்னமும் கூட சரியாகக் கணிக்க முடியவில்லை என்று வரலாற்று வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

**தன்னம்பிக்கை ஏற்படுத்திய வளர்ச்சியையும், கர்வம் ஏற்படுத்திய பேரழிவையும் ஒரே மனிதனின் வாழ்க்கையில் ஆதாரப்பூர்வமாக சரித்திரம் சொல்கிறது**. ஹிட்லரின் வாழ்வில் மட்டுமல்ல ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையிலும் இந்த இரண்டுமே இதே விளைவுகளையே ஏற்படுத்தக் கூடியவை. அதுவே இயற்கையின் நியதி.

## தன்னம்பிக்கை கர்வமாக மாறினால்?

வாழ்க்கையை ஒளிமயமாக்கப் போவதும் அந்த தன்னம்பிக்கை தான். ஆனால் அது கர்வம் என்ற விஷமாக மாறி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தன்னை உயர்வாக நினைக்கும் அதே சமயம் மற்றவர்களைத் தாழ்வாக நினைக்கவும் ஆரம்பித்தால் கர்வம் நுழைய ஆரம்பிக்கிறது என்று அர்த்தம். தன் சாதனைகளைப் பெருமைப்படுத்தியும், மற்றவர் சாதனைகளை சிறுமைப்படுத்தியும் நினைப்பதும் கர்வமே. தன் தவறுகளை தவறுகளே அல்ல என்று சாதிப்பதும் கர்வத்தின் ஒரு குணமே. மற்றவர்களுடைய சிறு தவறுகளையும் சுட்டிக் காட்டி மகிழ்வதும் கர்வத்தின் தன்மையே. தனக்கு எதிரான எதையும் சகிக்க முடியாததும், மற்றவர் சாதனையை ரசிக்க முடியாததும் கர்வத்தின் செயல்களே.

பலர் செய்யும் ஒரு தவறு, கர்வத்தையும் தன்னம்பிக்கையையும் போட்டுக் குழப்பிக் கொள்வதுதான். தன்னம்பிக்கை வேறு, கர்வம் வேறு. தன்னம்பிக்கை உங்கள் மீது நீங்கள் வைக்கும் மரியாதை. கர்வம் என்பது பிறரைத் தாழ்ந்தவராய்க் கருதிக்கொள்ளும் உங்களுடைய ஆழ்மன ஆர்வம். என்னால் முடியும் என்பதும், என்னால் மட்டும்தான் முடியும் என்பதும் தன்னம்பிக்கைக்கும், கர்வத்துக்குமான ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

தன்னம்பிக்கையை உளவியல் ரீதியான உந்துதல் என்று கொண்டால், கர்வத்தை மோசமான குணாதிசயம் எனலாம். கர்வம் மனிதனை தவறுகளை நோக்கிச் செலுத்தும் மாலுமியாகி விடுகிறது. கர்வம் தவறுகளை ஏற்றுக் கொள்ளும் மனதைத் தருவதில்லை. பழியைத் தூக்கி அடுத்தவர் தோளில் சுமத்தும் வழியையே தேடச் செய்யும். காரணம், கர்வத்தின் அஸ்திவாரத்தில் ஆணவம் உறைந்து கிடக்கும்.

கர்வத்தைக் கழற்றி வைத்துவிட்டுச் சக மனிதர்களோடு கலந்து வாழும் வாழ்க்கையே ஆனந்தங்களின் இசையை திசையெங்கும் இசைக்கும். அதுவே தனிமைகளின் கூட்டை உடைத்து இனிமைகளின் கூட்டணியை அமைக்கும். கர்வத்தின் கல்வெட்டுகளைத் தாண்டி தாழ்மையின் படிக்கட்டுகளை நோக்கிய பயணமே மனிதகுலத்துக்கு அவசியம்.

தாழ்மை நம்மைப் பற்றிய ஆழமான அறிதலில் இருந்து புறப்படும். உண்மையில் நான் யார்? எனது மனம் மனிதநேயத்தின் தாழ்வாரங்களில் தான் நடக்கிறதா? பிறருக்குத் தெரியாத பலவீனங்கள் எனக்கு என்னென்ன இருக்கின்றன? கோபம், பொறாமை, சுயநலம், வெறுப்புணர்வு இப்படிப்பட்ட ஒவ்வோர் புரிதலும் நமது தாழ்மையைக் கூர்தீட்டும்.

**<u>வினாக்கள்</u>**

1 தன்னம்பிக்கை ஏற்படுத்திய வளர்ச்சியையும், கர்வம் ஏற்படுத்திய பேரழிவையும் ஒரே மனிதனின் வாழ்க்கையில் ஆதாரப்பூர்வமாக சரித்திரம் சொல்கிறது.

எழுவாய் ---------------
7 ஆம் வேற்றுமை உருபேற்ற சொல் ----------------

2 ஹிட்லர் நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டது தன்னம்பிக்கையா? அல்லது கர்வமா? ஆதாரத்துடன் விளக்குக. (பனுவல்-1)

(5 மதிப்பெண்கள்)

3 தன்னம்பிக்கைக்கும் கர்வத்திற்கும் உள்ள வேறுபாடுகளாக இரு பனுவல்களிலும் எழுத்தாளர் இருவரிடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் யாவை?

(6 மதிப்பெண்கள்)

3 தன்னம்பிக்கை-கர்வம் பற்றிக் கருத்துக்கள் இரு பனுவல்களிருந்தும் காண முடிகின்றன.பனுவல் **ஒன்றில்** குறிப்பிடாத சில கருத்துக்கள் பனுவல் **இரண்டில்** காணப்படுகின்றன.அவற்றுள் இரண்டு பாதகமான கருத்துகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்க. (15 மதிப்பெண்கள்)

RAFFLES INSTITUTION
2017 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

**தமிழ் மொழி, இலக்கியம்** **9567/3**

தாள் 3

**TAMIL LANGUAGE AND LITERATURE** **14 Sep 2017**

**Paper 3**

**3 hours**

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்து கொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** எழுத வேண்டும்.

இவ்வினாத்தாள் 3 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது

**முக்கியக் குறிப்புகள்**

**மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

## ‘அ’ பிரிவு

**நாவல்**

Q1 அறக்கருத்துகளும் பொதுவுடைமை சிந்தனையுமே ஒரு மனிதரை நல்வழியில் இட்டுச் செல்லும் கடிவாளங்கள் நிறுவுக. (25 மதிப்பெண்கள்)

Q2 ‘‘கலை கவலைதான்’’ - கரித்துண்டு நாவலில் வரும் ஓவியர் மோகனின் வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

## ‘ஆ’ பிரிவு

**சிறுகதை**

Q3 எழுத்தாளன் உள்ளும் புறமும் பரிசுத்தமானவனாக இருக்கவேண்டும் - ‘ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது’ என்னும் சிறுகதையில் இக்கருத்தைக் கதையாசிரியர் எவ்வாறு வெளிக்கொணர்கிறார் என்பதை விளக்குக. (25 மதிப்பெண்கள்)

Q4 ‘தமிழுக்கு அமுதென்று பேர்’ என்ற சிறுகதைமூலம் 21-ம் நூற்றாண்டு பிற்பகுதியில் உலகமொழிகளின் நிலைமையையும் அவற்றுள் தமிழின் அழிவு நிலையையும் கனக லதா எவ்வாறெல்லாம் கணித்துரைக்கிறார்? (25 மதிப்பெண்கள்)

## **'இ' பிரிவு**

**நாடகம்**

Q5 'சிங்கப்பூர் மாப்பிள்ளை', 'காதல் என்ன விலை?' ஆகிய இரண்டு நாடகங்களிலும் பெற்றோர்கள் திருமணம் என்ற உறவை எத்தகைய கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் என்பதை ஆராய்க.

(25 மதிப்பெண்கள்)

Q6 சிங்கப்பூர் மாப்பிள்ளை என்ற நாடகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள உத்திகள் யாவை? கதையின் கருப்பொருள் கதை வளர்ச்சிக்குப் பொருத்தமாக அமைந்துள்ளதா?ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

## **'ஈ' பிரிவு**

**கவிதை**

Q7 (அ) சங்க காலக்கவிதைகள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் வரிகள் உலக ஒருமைப் பாட்டை விளக்குவதை விவரிக்க. (13 மதிப்பெண்கள்)

(ஆ) உங்கள் பாடப்புத்தகத்தில் உள்ள திரைப்படப்பாடல்களில் மனிதன் உன்னத நிலையை அடைய எத்தகைய குணநலன்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று கண்ணதாசன் கூறும் அறிவுரைகளை விரித்து எழுதுக.

(12 மதிப்பெண்கள்)

Q8 மாலை நேர இயற்கைக் காட்சியை சிங்கை முகிலனும், ஆ.பழனியும் தத்தம் கவிதைகளில் அழகியல் நோக்கோடு எடுத்தியம்பும் விதங்களை ஒப்பிட்டு விவரிக்க.

(25 மதிப்பெண்கள்)

முற்றும்

# ST. ANDREW'S JUNIOR COLLEGE

## Preliminary Examination 2017

## Tamil Language and Literature

**3 HOURS**

**PAPER 1**

**9567/1**

**25 AUG 2017**

**குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர் விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும் பதிவு எண்ணையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப் புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து எடுத்துச் செல்லக்கூடாது.

## உயர்தரம் 2

## தமிழ் மொழி, இலக்கியம்

**பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினைப்பற்றி ஏறத்தாழ 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக.** (35 மதிப்பெண்கள்)

Q1பின்வரும் சூழலை மையமாகக்கொண்டு ஒரு கட்டுரை வரைக.



Q2 ‘இக்காலப் பெற்றோர் இளையர்களுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரத்தைக் கொடுக்கிறார்கள்’ – விவாதிக்க

Q3 ஒருநாடு மேன்மை அடைய வேண்டுமென்றால் ஒரு குடும்பம் எவ்வாறு தன் பங்கினை ஆற்ற வேண்டும் என்பது குறித்து கட்டுரை எழுதுக.

Q4 ‘வாய்மையே வெல்லும்’- இக்கூற்று எக்காலத்திற்கும் பொருந்துமா?- ஆராய்க

முற்றும்

**‘அ பிரிவு‘**

**முன்னுணர்வுக் கருத்தறிதல்** (5 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

மன்னர் காலம் தொடங்கி தற்காலம் வரை, நம் மூதாதையர்கள் வகுத்துவைத்த உணவுப் பழக்கம் சிறப்பானதாகும். உணவு, வெறும் உயிர்வாழத் தேவைப்படும் Q1 __________ மட்டுமல்லாமல், ஆரோக்கியம் கொடுக்கக்கூடிய அருமருந்தாகவும் இருக்க வேண்டும் என்பது நம் முன்னோர் கொள்கை. ஆனால், இன்றைய உணவு வகைகளோ, அப்படியே Q2___________ மாறி, நம்மைத் தனியாக மருந்துகளையும் சாப்பிட வைக்கின்றன. ஆரம்ப காலங்களில் Q3____________ கிடைக்கும் பழங்கள், காய்கள், கிழங்குகள் போன்றவற்றை அப்படியே சாப்பிட்டார்கள். இதனால்தான் அக்கால மக்கள் நோய், நொடியின்றி ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள்.

பின்னர் உணவு முறைகளில் பல Q4__________ உருவாகின. விதவிதமான உணவு வகைகள் வழக்கத்திற்கு வந்தன. இருந்தாலும் இயற்கை முறையிலான உணவுப் பழக்கங்களும் தொடர்ந்தன. ஆனால், இன்றைக்கு அப்படி ஆரோக்கியமாக வாழ்கிறோமா என்ற Q5__________ எழுகிறது. அக்கால உணவு முறை, சமைக்கும் முறை, பரிமாறும் முறை என அனைத்திலும் ஆரோக்கியத்தை முன்னிறுத்தியே வகுக்கப்பட்டன. மாறாக, இப்போது உணவின் ருசிக்குத்தான் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

**‘ஆ பிரிவு‘**

**சுயவிடைக் கருத்தறிதல் (1)** (30 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை தருக.**

எது இலக்கியம் என்ற கேள்விக்கு விடையளிக்க முன் வருவோரில் சிலர் சில புதிய கருத்துக்களை வெளியிடுகின்றனர். நாம் இதுவரையிலும் இலக்கியம் என்று பாராட்டிப் படித்துவந்த சில நூல்கள் இலக்கியம் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிவந்த ஒரு பொதுவான கருத்துக்கு, மாறான கருத்துக்களையும் வெளியிடுகின்றன. இலக்கியத்தைப் பற்றி இத்தகைய ஐயங்களும் கேள்விகளும் பிறந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இது இலக்கியம் வளர்வதற்கு வழிகாட்டுவதாகும். கண்மூடித்தனமாக ஒன்றைப் பின்பற்றிச் செல்லும்போது சிந்தனைக்கு வழியில்லை; உண்மையை நினைத்தும் பார்க்க இடமில்லை. எந்த இடத்தில் சந்தேகமும், கேள்விகளும் பிறக்கின்றனவோ அந்த

இடத்தில்தான் அறிவும் ஆராய்ச்சியும் வளரும். எனவே, தமிழ் இலக்கியம் இனித் **தேங்கி**த் தடைப்பட்டு நின்று விடாது; வளர்ந்து செல்லும்; பிற நாட்டார் வணக்கம் செய்யும் வகையிலே, போற்றும் வகையிலே இனி வளர்ச்சியடையும் என்பதில் ஐயம் இல்லை.

ஒவ்வொருவருக்கும் தாம் எண்ணுவதைப் பற்றி வெளியிடும் கருத்துரிமை உண்டு. இத்தகைய கருத்துரிமைக்கு மதிப்புக்கொடுத்து, அக்கருத்தை ஆராய வேண்டும். பிறருடைய கருத்தை மதிக்காதவர்கள் அலட்சியம் பண்ணுகிறவர்கள் அறிவிலே வளர்ச்சியடைய முடியாது; "இவர் என்ன சொல்வது? நாம் என்ன கேட்பது" என்று நினைப்பது அகங்காரத்தின் **உச்சநிலையாகும்**. இப்படி நினைப்பது தமிழர் பண்பாட்டுக்கே முரண்பட்டதாகும். "எந்தப்பொருளைப் பற்றி யார் யார் என்ன சொன்னாலும் அவற்றைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும்; சொல்லுவோர் யார் என்பதைப்பற்றி நினைக்கவே கூடாது; சொல்லும் பொருளைப்பற்றியே நினைக்க வேண்டும்; அச்சொல்லில் உண்மையிருக்கிறதா என்று ஆராய வேண்டும். உண்மையிருந்தால் கொள்ள வேண்டும்; உண்மையின்றேல் தள்ளி விடவேண்டும்; இதுவே அறிவுடைமையின் செயலாகும்" என்று வள்ளுவர் சொல்லியிருக்கின்றார்.

இன்று எல்லா நூல்களையும் இலக்கியம் என்று கொள்ளுவதில்லை. உள்ளத்திற்கு இன்பம் பாய்ச்சும் கற்பனை நிறைந்த நூல்களை இலக்கியம் என்று கொள்கின்றோம். படிக்கப் படிக்க நமது நெஞ்சத்தைக் கவரும் நடையும் உள்ளத்திலே துன்பத்தையோ, மகிழ்ச்சியையோ உண்டாக்கும் கருத்து வளமும் கொண்டு நம்மை உணர்ச்சி வசமாக்கும் தன்மையுடைய நூல்களையும் இலக்கியம் எனலாம். மேலும் நம்மைச் சிந்திக்கத் தூண்டும் சிறந்த மொழி, மீண்டும் படிக்கவேண்டும் என்னும் எண்ணத்தை எழுப்பும் இயல்பு ஆகியனவும் சிறந்த நூலிற்கான இயல்பாகும். அத்துடன் பல அரிய செய்திகளை நாம் அறிந்து இன்புறச் செய்யும் பண்பு நலம் அமைந்த நூல்களையும் சிறந்த இலக்கியம் என்று நாம் முடிவு செய்யலாம்.

நமது முன்னோர்கள் பெரும்பாலும் இலக்கியங்களைப் பாடல்களாக எழுதி வந்ததற்கு மக்கள் மனதைக் கவரும் வாசகங்களிலே இலக்கியங்கள் அமையவேண்டும் என்பதும் ஒரு காரணமாகும். செய்யுளிலே இனிய ஓசை உண்டு; பண்ணோடு பாடலாம். இனிய செய்யுட்களைப் படிக்கும்போதே, அல்லது பாடும்போதே அல்லது பிறர் பாடுவதைக் கேட்கும்போதே நம் உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும். முன்னோர்களின் உரைநடையில்கூடச் செய்யுள் வாடை வீசுவதைக் காணலாம். ஆதலால் இலக்கியத்திற்கு அதன் எழுத்து அமைப்பு, வசன அமைப்பு இனியநடை இன்றியமையாததது என்பதில் ஐயமில்லை. இலக்கியங்களைப் பயின்றவர்கள் ரசிகர்களாக வாழலாம்; பிறருக்கு நல்ல அறங்களை எடுத்துரைப்பவர்களாக இருக்கலாம்; இயற்கையின் இன்பங்களைச் சுவைப்பவர்களாகவும், சுவைக்கச் செய்பவர்களாகவும் இருக்கலாம்;

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அறம், பொருள், இன்பம், என்ற இந்த மூன்று தலைப்பின்கீழ் மனித வாழ்வைப் பற்றிய எல்லா விஷயங்களையும், மனித வாழ்விற்குத் தேவையான எல்லா விஷயங்களையும் விரிவாகக் கூறிவிட முடியும். ஆதலால்தான் அறம், பொருள், இன்பங்களைப்பற்றிக் கூறுவதே செய்யுள் என்று கூறினர்; அச்செய்யுட்களின் <u>**தொகுப்பே**</u> இலக்கியமென்றும் நூலென்றும் கொண்டனர். இதுதான் இன்று நாம் விரும்பும் இலக்கியம் பற்றி முன்னோர்கள் கொண்டிருந்த முடிவாகும்.

<u>**வினாக்கள்**</u>

Q6 இலக்கியங்கள் இனி வளர்ச்சியடையும் என்று ஆசிரியர் நம்பிக்கை கொள்வதேன்? 6 மதிப்பெண்கள்

Q7 கருத்துரிமைக்கு எதிரானவர்களால் எத்தகைய பாதகங்கள் விளையும்?

6 மதிப்பெண்கள்

Q8 ஒரு இலக்கியத்தைச் 'சிறந்த இலக்கியமல்ல' என்று எப்போது முடிவுகட்டலாம்?

6 மதிப்பெண்கள்

Q9 இலக்கியத்தின் வெற்றிக்குச் செய்யுள் நடை எவ்வாறு உதவியது?

6 மதிப்பெண்கள்

Q10 <u>சொற்பொருள்</u> (6 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.

அ தேங்கி

ஆ உச்சநிலையாகும்

இ தொகுப்பே

முற்றும்

**‘அ பிரிவு‘**

<u>**முன்னுணர்வுக் கருத்தறிதல்**</u> **Answers**

மன்னர் காலம் தொடங்கி தற்காலம் வரை, நம் மூதாதையர்கள் வகுத்துவைத்த உணவுப் பழக்கம் சிறப்பானதாகும். உணவு, வெறும் உயிர்வாழத் தேவைப்படும் Q1 **பொருள்** மட்டுமல்லாமல், ஆரோக்கியம் கொடுக்கக்கூடிய அருமருந்தாகவும் இருக்க வேண்டும் என்பது நம் முன்னோர் கொள்கை. ஆனால், இன்றைய உணவு வகைகளோ, அப்படியே Q2 **தலைகீழாக** மாறி, நம்மைத் தனியாக மருந்துகளையும் சாப்பிட வைக்கின்றன. ஆரம்ப காலங்களில் Q3 **காட்டில்** கிடைக்கும் பழங்கள், காய்கள், கிழங்குகள் போன்றவற்றை அப்படியே சாப்பிட்டார்கள். இதனால்தான் அக்கால மக்கள் நோய், நொடியின்றி ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள்.

பின்னர் உணவு முறைகளில் பல Q4 **மாறுதல்கள்** உருவாகின. விதவிதமான உணவு வகைகள் வழக்கத்திற்கு வந்தன. இருந்தாலும் இயற்கை முறையிலான உணவுப் பழக்கங்களும் தொடர்ந்தன. ஆனால், இன்றைக்கு அப்படி ஆரோக்கியமாக வாழ்கிறோமா என்ற Q5 **கேள்வி** எழுகிறது. அக்கால உணவு முறை, சமைக்கும் முறை, பரிமாறும் முறை என அனைத்திலும் ஆரோக்கியத்தை முன்னிறுத்தியே வகுக்கப்பட்டன. மாறாக, இப்போது உணவின் ருசிக்குத்தான் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

<u>**வினாக்கள்**</u>

Q6 இலக்கியங்கள் இனி வளர்ச்சியடையும் என்று ஆசிரியர் நம்பிக்கை கொள்வதேன்?

கண்மூடித்தனமாக ஒரு கருத்தைப் பின்பற்றினால் சிந்தனைக்கு வழி கிட்டாது. அதில் உண்மை நிலையை நினைத்துப் பார்க்கவும் இடமிருக்காது. ஆனால் சந்தேகமும், கேள்விகளும் அவ்விலக்கியத்தின்பால் பிறக்குமானால் அந்த இடத்தில்தான் அறிவும் ஆராய்ச்சியும் வளரும். எனவே, தமிழ் இலக்கியம் இனி வளர்ந்து செல்லும் என ஆசிரியர் நம்பிக்கைத் தெரிவிக்கிறார்.

Q7 கருத்துரிமைக்கு எதிரானவர்களால் எத்தகைய பாதகங்கள் விளையும்?

பிறருடைய கருத்தை மதிக்காதவர்கள் அலட்சியம் செய்கிறவர்களால் அறிவில் வளர முடியாது. பிறர் சொல்லி நாம் கேட்பதா என்ற மனப்போக்கு அகங்காரமானதாகும். மேலும் இவ்வாறு நினைப்பது தமிழர் பண்பாட்டுக்கு முரண்பட்டதாகவும் கருதப்படுகிறது. இவ்வாறு கருத்துரிமைக்கு எதிரானவர்களால் பாதகங்கள் விளையும்.

Q8 ஒரு இலக்கியத்தைச் ‘சிறந்த இலக்கியமல்ல’ என்று எப்போது முடிவுகட்டலாம்?

உள்ளத்திற்கு இன்பம் பயக்காத நூல்களையும் நல்ல நடையோ உணர்ச்சியோ சிறந்த கருத்து வளமோ இல்லாத நூல்களையும் சிறந்த இலக்கியம் என்று ஏற்க முடியாது. மேலும் நம்மைச் சிந்திக்கத் தூண்டும் சிறந்த மொழி. மீண்டும் படிக்கத் தூண்டும் என்னத்தை ஏற்படுத்தாத நூல்களும் சிறந்த இலக்கியமல்ல. அத்துடன் பல அரிய செய்திகளைத் தந்து நம்மை இன்புறச்செய்யும் ஆற்றல் இல்லாத நூல்களும் சிறந்த நூல் அல்ல என்று நாம் முடிவு கட்டலாம்.

Q9 இலக்கியத்தின் வெற்றிக்குச் செய்யுள் நடை எவ்வாறு உதவியது?

மனதைக் கவரும் வாசகங்களிலே இலக்கியங்கள் அமைய வேண்டும் என்பதனால் செய்யுள் நடையில் எழுதினர். செய்யுளின் இனிய ஓசை பாடுவதற்கும் ஏற்றது. அதனால் எளிதில் நம் மனதில் பதியும் தன்மை வாய்ந்தது. ஆதலால் இலக்கியத்திற்கு எழுத்து அமைப்பு, வசன அமைப்பு இனியநடை இன்றியமையாததது. அதனைத் தர வல்லது செய்யுள் நடை. அவ்வகையில் இலக்கியத்தின் வெற்றிக்கு செய்யுள் நடை உதவியது.

Q10 <u>சொற்பொருள்</u> (6 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.

அ தேங்கி- உறைந்து /

ஆ உச்சநிலையாகும்- எல்லையாகும் / வரம்பாகும்

இ தொகுப்பே – கூட்டே / இணைப்பே

முற்றும்

**ST. ANDREW'S JUNIOR COLLEGE**

**Preliminary Examination 2017**

**Tamil Language and Literature**

**3 HOURS**

**PAPER 2 (E – EXAM)**

**9567/2**

**25 AUG 2017**

**குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர் விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும் பதிவு எண்ணையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப் புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து எடுத்துச் செல்லக்கூடாது.

**சுயவிடைக் கருத்தறிதல்**

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**



**பனுவல் ஒன்று** எது நகைச்சுவை?

வாழ்க்கையின் துன்பங்களிலிருந்து தற்காலிகமாகவாவது விடுதலையளிக்கும் நபரை அனைவருக்கும் பிடிக்கும். நாம் அனைவரும் வாழ்நாள் முழுதும் ஏதோ ஒரு வகையில் துன்பத்தால் துவண்டு போகிறவர்களாகவே இருக்கிறோம். நாள்தோறும் ஏதேனும் ஒரு சோதனையோ அல்லது கவலையோ ஒவ்வொரு மனிதனுக்குமே ஏற்படுகிறது. அதனால் ஏற்படும் மன அழுத்தத்திலிருந்து விடுபட்டு மகிழ்ச்சி உணர்வை அடைய ஒவ்வொருவருமே விரும்புகின்றனர். இம்மகிழ்ச்சியை எப்போது வேண்டுமானாலும் எளிதாகத் தரக்கூடிய ஒரு அம்சம் என்னவென்றால், நகைச்சுவை உணர்வு. இந்த நகைச்சுவை உணர்வுள்ள மனிதர் அனைவராலும் விரும்பப்படும் ஒருவராவார்.

எப்போதும் தன்னை அதிஷ்டம் இல்லாதவனாகவே நினைத்துக்கொண்டு, தான் உள்ளிட்ட எல்லோரையும் குறைகூறிக் கொண்டிருக்கும் மனிதர்களை யாரும் விரும்புவதில்லை. நகைச்சுவை உணர்வு என்றால் என்ன என்பதைப் பற்றி ஒரு தெளிவான புரிதல் இருப்பது முக்கியம். பிறரை கேலியும், கிண்டலும் செய்வது நகைச்சுவையல்ல. அதெல்லாம் திரைப்படங்களுக்குத்தான் ஒத்துவரும். நிஜ வாழ்வில் நகைச்சுவை என்பது நமது எதிரியைக்கூட நண்பராக மாற்றுவதாய் இருக்க வேண்டும். பிறரை ஏளனம் செய்வதற்கும், நகைச்சுவை உணர்வுக்கும் வேறுபாடு குறைவாக இருப்பதுபோல் தோன்றும். ஆனாலும் அந்த வித்தியாசத்தைப் புரிந்துகொள்வது முக்கியம். இதை மட்டும் நாம் அறிந்துகொண்டுவிட்டால், மிகவும் வெற்றிகரமான மனிதராக இருப்போம். நகைச்சுவை என்பது அடுத்தவரைக் காயப்படுத்துமளவுக்கு கிண்டல் செய்வது என்பது சிலருடைய எண்ணம்! அது குரூர நகைச்சுவை. நகைச்சுவையில் கேலி செய்யப்படும் அந்த நபரும் இணைந்து சிரிப்பதே முழுமையான நகைச்சுவையாகும். அத்தகைய நகைச்சுவையைத்தான் ஆரோக்கியமான நகைச்சுவை என்று உலகம் போற்றும்.

## பனுவல் இரண்டு நகைச்சுவையின் பயன்கள்

அக்பர் நகைச்சுவை உணர்வுகொண்ட பீர்பாலை தனது அமைச்சர்களில் ஒருவராக ஆக்கிக் கொண்டார். மிகப்பெரிய பேரரசை பலவித நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆண்ட அக்பருக்கு, பீர்பால் போன்றவர்களின் நகைச்சுவை உணர்வு சந்தோஷத்தையும், நிம்மதியையும் அளித்தது. இது நகைச்சுவையின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது.

ஒருவேலையில் ஈடுபட்டிருக்கும்போது அதில் தீவிரமாக இருக்க வேண்டும் என்று பலரும் பொதுவாக அறிவுரை சொல்வதை நாம் கேட்டிருப்போம். அப்படியென்றால், முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு, பிறரிடம்கூட எதையும் பேசாமலிருப்பது, நமது வேலையைப்பற்றி மட்டுமே பேசுவது என்று அர்த்தமல்ல.

நமது நகைச்சுவை உணர்வானது, மற்றவர்களை சந்தோஷப்படுத்த மட்டுமல்ல. எப்போதும் தன்னம்பிக்கையாக இருப்பதற்கும், சுய கவலையிலிருந்து விடுபடவும், கஷ்டங்களை மறக்கவும், கவலையைப் போக்கவும் நகைச்சுவை உணர்வு துணைபுரியும். நாம் மேடையேறிப் பேசும் நகைச்சுவையாளராக இருக்க வேண்டியதில்லை. நம்மையும், நம்மைச் சுற்றியுள்ள சில நபர்களையும் சந்தோஷப்படுத்தினாலே போதும். வாழ்க்கை என்றும் இனிக்கும். இன்றைக்கு உலகில் ஆட்டிப் படைக்கும் சிக்கல் மன அழுத்தம். அதற்கான காரணம் உலகமயமாதலாகவும் இருக்கலாம், அல்லது வேறு பல காரணங்களாகவும் இருக்கலாம். காரணம் முக்கியமில்லை. ஆனால் மன அழுத்தம் மட்டும் வந்துவிட்டால் வாழ்க்கை அதோகதிதான். உடலும் உள்ளமும் வலுவிழக்கும். அத்தகைய மன அழுத்தம் வராமல் தடுக்கும் வல்லமை நகைச்சுவை உணர்வுக்கு மிகுதியாகவே உண்டு. நமது கோபத்தையோ, நம் மீது வேறொரு நபருக்கு இருக்கும் கோபத்தையோ அழிக்க நகைச்சுவை உணர்வைப்போல சிறந்த ஒரு ஆயுதம் இருக்கவே முடியாது. லண்டனில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் “நன்கு சிரித்து வாழும் மனிதர்களின் மூளை சுறுசுறுப்பாகவும், கற்றுக் கொள்ளும் தன்மையிலும் இருக்கும்.” என்பது தெரியவந்தது. அது நகைச்சுவையைக் கேட்பதாலோ, படிப்பதாலோ, பார்ப்பதாலோ எந்த ஒரு வகையிலும் இருக்கலாம்.

**<u>வினாக்கள்</u>**

Q11 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. ( பனுவல் ஒன்று) 4 மதிப்பெண்கள்

“நாம் அனைவரும் வாழ்நாள் முழுதும் ஏதோ ஒரு வகையில் துன்பத்தால் துவண்டு போகிறவர்களாகவே இருக்கிறோம்”

அ வினைத்தொகை

ஆ மூன்றாம் வேற்றுமை உருபேற்ற சொல்

Q12 நல்ல நகைச்சுவை என்பது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?
(பனுவல் ஒன்று) 5 மதிப்பெண்கள்

Q13 பனுவல் ஒன்றும் இரண்டும் வலியுறுத்தும் பொதுவான அம்சங்கள் யாவை?
6 மதிப்பெண்கள்

Q14 நகைச்சுவை உணர்வால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி பனுவல் இரண்டில் கூறப்பட்டுள்ள கருத்துகளைப்பற்றிய உன் விமர்சனத்தை 140 சொற்களில் எழுதுக.
15 மதிப்பெண்கள்

(முற்றும்)

## விடைகள்

11 - அ வினைத்தொகை – வாழ்நாள்

ஆ மூன்றாம் வேற்றுமை உருபேற்ற சொல்- துன்பத்தால்

Q12 நல்ல நகைச்சுவை என்பது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

நல்ல நகைச்சுவை என்பது மன அழுத்தத்திலிருந்து விடுபட்டு மகிழ்ச்சி உணர்வைத் தர வல்லதாக இருக்க வேண்டும். பிறரை கேலியும், கிண்டலும் செய்வது நல்ல நகைச்சுவையல்ல. நகைச்சுவை என்பது நமது எதிரியைக்கூட நண்பராக மாற்றுவதாக இருக்க வேண்டும். அடுத்தவரைக் காயப்படுத்துமளவுக்கு கிண்டல் கேலி செய்வது என்பது நகைச்சுவை அல்ல. நகைச்சுவையில் கேலி செய்யப்படும் அந்த நபரும் இணைந்து சிரிப்பதே முழுமையான நகைச்சுவையாகும். அத்தகைய நகைச்சுவையைத்தான் நல்ல நகைச்சுவை என்று கருத முடியும்.

Q13 பனுவல் ஒன்றும் இரண்டும் வலியுறுத்தும் பொதுவான அம்சங்கள் யாவை?

இரண்டு பனுவல்களும் நகைச்சுவை மன அழுத்தத்தைக் குறைக்கின்றது எனக் கூறுகின்றன. மேலும், நகைச்சுவை உணர்வு நமக்கு மட்டுமின்றி, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் இன்பத்தைத் தருகின்றது என்பதை இரு பனுவல்களும் கூறுகின்றன. பனுவல் ஒன்றில் நல்ல நகைச்சுவை, குறிப்பாகப் பிறருக்கு எவ்வாறு மகிழ்வூட்டும் வகையில் அமைந்திருக்க வேண்டும் என்பதை விளக்குகிறது. நகைச்சுவைப் பிறரின் மனதைக் காயப்படுத்தாமல், அனைவரும் சேர்ந்து சிரிக்க வைக்கும் தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் எனவும் கூறுகின்றது. பனுவல் இரண்டிலோ, நகைச்சுவை நம்மைச் சற்றியுள்ளவர்களைச் சந்தோஷப்படுத்துவதோடு, நம்மையும் மகிழ வைக்கிறது எனச் சொல்கிறது. ஆக இரண்டு பனுவல்களுமே மனிதர்களுக்கு நகைச்சுவை உணர்வு பயனளிக்கிறது என்பதையே பொது அம்சமாக வலியுறுத்துகின்றன.

Q14 நகைச்சுவை உணர்வால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி பனுவல் இரண்டில் கூறப்பட்டுள்ள கருத்துகளைப்பற்றிய உன் விமர்சனத்தை 140 சொற்களில் எழுதுக.
15 மதிப்பெண்கள்

மாணவர் கோணத்தில் விடை

**ST. ANDREW'S JUNIOR COLLEGE**

**Preliminary Examination 2017**

**Tamil Language and Literature**

**3 HOURS**

**PAPER 3 9567/3**

**12 Sep 2017**

**குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர் விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும் பதிவு எண்ணையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப் புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து எடுத்துச் செல்லக்கூடாது.

## முக்கியக் குறிப்புகள்

**மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

### 'அ' பிரிவு

**நாவல்**

Q1"உணர்ச்சி வடிவமாக இருப்பான் அந்த ஆள். இல்லாவிட்டால் கலை வராது. அவனுடைய புலன்களும் அவற்றின் பாற்பட்ட மனமும் சமவளர்ச்சி பெற்றிருக்கவே முடியாது. நெருங்கிப்பார் தெரியும்"- பேராசிரியரின் இக்கூற்றைக் கொண்டு அவர் மனிதர்களைச் சரியாக எடைபோடுகிறவர் என்று சொல்லலாமா? ஆராய்க.
(25 மதிப்பெண்கள்)

Q2 'இல்லறமே நல்லறம்' என்ற கருத்தை வலியுறுத்தவே கரித்துண்டு என்னும் நாவலை ஆசிரியர் மு வ படைத்திருக்கிறார் – இக்கருத்தை நீ ஏற்றுக்கொள்வாயா?
(25 மதிப்பெண்கள்)

### 'ஆ' பிரிவு

**சிறுகதை**

Q3 "சரியாக ஒரு வருஷத்தில் மனைவி, மகள், பணம் எல்லாம்.....
அதுவேறுகதை"- A126629001 சிறுகதையில் இடம்பெற்ற மேற்கண்ட கூற்றினை அடிப்படையாகக் கொண்டு, பிறன் பொருளுக்கு ஆசைப்பட்டால் எத்தகைய நிலையை அடைய நேரும் என்பதை ஆராய்க.
(25 மதிப்பெண்கள்)

Q4 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்னும் சிறுகதையின் வாயிலாக அதன் ஆசிரியர் கனகலதா நம்மிடையே எத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்த முயல்கிறார்?
அதனை உணர்த்த அவர் கையாளும் உத்திமுறைகள் யாவை?
(25 மதிப்பெண்கள்)

## ‘இ’ பிரிவு

### நாடகம்

Q5 தலைமுறைகள் மாறும்போது நாம் பின்பற்றும் பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாறுதல்களை ‘காதல் என்ன விலை’ என்ற நாடகம் எவ்வாறு படம் பிடித்துக்காட்டுகிறது என்பதை ஆராய்வதுடன் அது பற்றிய உன் கருத்துகளையும் எழுதுக. (25 மதிப்பெண்கள்)

Q6 “நீங்க மட்டும்தானா? நானும்தான்? இத்தனை வயசுவரைக்கும் அங்கே சம்பாதிச்சு இங்கே உள்ள என் குடும்பத்துக்கு அனுப்பிக்கிட்டிருந்தேன்! இதுக்கு மேலேயும் உழைக்க முடியாதுங்கிற நிலைமையிலே குடும்பத்தோடு நிரந்தரமா இருந்திடலாம்னு வந்தேன். வந்தவனை ஏன் வந்தார்னு கேட்கிறாங்க”

-மேற்கண்ட உரையாடல் நடைபெற்ற சூழலை விளக்குவதுடன் இதன் வாயிலாக நாடக ஆசிரியர் திரு சே வெ சண்முகம் சிங்கப்பூர் தமிழ்ச் சமுதாயத்திற்கு கூற விழையும் கருத்துகளையும் தெளிவாக்குக.
(25 மதிப்பெண்கள்)

## ‘ஈ’ பிரிவு

### கவிதை

Q7 அ. ‘தாய்மையின் காத்திருப்பு’ என்னும் கவிதை இன்றைய சமூக நடப்பையே சுட்டிக்காட்டுகிறது என்று கூறலாமா? விளக்குக
(13 மதிப்பெண்கள்)

ஆ. மனிதன் தெய்வநிலைக்கு உயர்வது எப்படி சாத்தியமாகிறது- கண்ணதாசனின் பாடல்வழி விளக்குக (12 மதிப்பெண்கள்)

Q8 உன் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சங்கப் பாடல்களின் வழி தமிழர்களின் வாழ்வியல் நெறிகள் எவ்வாறு புலப்படுகின்றன என்பதை விளக்குவதுடன் அந்நெறிகள் இன்றளவும் பொருந்தக்கூடியதா என்பதை ஆராய்க
(25 மதிப்பெண்கள்)

**முற்றும்**

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2017

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் | தாள் 1 (பகுதி 1A) |
| H2 TAMIL LANGUAGE AND LITERATURE | 12TH SEPT 2017 |
| 9567/1 | 2 Hours 15 Mins |
| Paper 1 (Part 1A) | (For Part 1 and 2) |

**<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>**

1.இவ்வினாத்தாளின் பகுதி 1A,1B ஆகியவை தனித்தனியாக **அச்சிடப்பட்டுள்ளன.**

**2.பகுதி 1A, 1B ஆகியவற்றிற்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.**

**3.ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.**

**4.அகராதியைப் பயன்படுத்துதல் :**

**அ)பகுதி 1A-க்கு விடையளிக்கும்போது நீ அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம். அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள்.**

**ஆ)பகுதி 1B-க்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப் <u>பயன்படுத்தக்கூடாது.</u>**

**உயர்தரம் 2 - தமிழ்மொழி, இலக்கியம்**

**தாள் 1 (பகுதி 1)**

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக. (35 மதிப்பெண்கள்)**

1. பொருளாதர முன்னேற்றத்திற்காக நாம் பலவற்றை இழந்து உள்ளோமா? ஆராய்க.

2. சகிப்புத்தன்மை இல்லாமை, சுயநலப் போக்கு ஆகியவையே உலகின் அமைதியின்மைக்குக் காரணம்.

3. துணிந்தவர் தோற்றதில்லை; தயங்கியவர் வென்றதில்லை! கருத்துரைக்க.

4. பின்வரும் தகவல்களைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.

| | |
|---|---|
| அவனுக்கு மீன் பிடித்துக் கொடுப்பதைவிட மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும். | அவ்வாறு கற்றுக்கொள்ள அவனும் தயாராக இருக்கவேண்டும். |



*********முற்றும்**********

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2017

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் | தாள் 1 (பகுதி 1B) |
| H2 TAMIL LANGUAGE AND LITERATURE | 12TH SEPT 2017 |
| 9567/1 | 2 Hours 15 Mins |
| Paper 1 (Part 1B) | (For Part 1 and 2) |

## குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர், விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும், வகுப்பையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3. இவ்வினாத்தாளில் மொத்தம் 5 பக்கங்கள் உள்ளன.

<u>‘அ’ பிரிவு</u>

<u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> (5 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

நாகரிகம் தோன்றி, நாமெல்லாம் அதில் தேறிவிட்டதாக நினைத்துக்கொண்டு இருக்கிறோம். நடையில், உடையில், உணவில், 1.____________ பொருட்களில், நாகரிகத்தின் சாயல் நிறையவே படிந்துள்ளது. ஆனால், நம் நாக்குக்கும்கூட நாகரிகம் உண்டு என்று புரிந்துகொள்ளவேண்டும்.

நாக்கின் நாகரிகம் நம் பேச்சில் 2.____________ வேண்டும். காரணமே இன்றிப் பிறரை புண்படுத்தும், எள்ளி நகையாடும் பேச்சு நாகரிகமற்றது. அதைத் தவிர்ப்பது நாகரிகமானது. மற்றவர் மனத்தில் இடம்பிடிக்க வேண்டிய பேச்சுக்கென்று சில முக்கிய அம்சங்கள் உண்டு. அதில் வார்த்தை ஜாலங்கள் நிறைந்திருக்க வேண்டியதில்லை. வழக்கமான வார்த்தைகளே போதும். 3.__________ வாசமுள்ள வார்த்தைகள் இருக்க வேண்டும். மனம் மலர்ந்து இருந்தால் வார்த்தையில் வாசம் இருக்கும். மனம்தான் நாவை 4.____________ . உள்ளத்தின் ஒளி வாக்கினில் ஒளியுண்டாக்கும்! நல்ல விதம் பேசிப் பேசி ஒரு நல்ல நட்பை உருவாக்க, நமக்கு எத்தனையோ நாட்கள் எடுக்கலாம். ஆனால் ஒரே வீச்சில் அதைத் தவிடுபொடியாக்கும் 5.____________ நாக்குக்கு, அதாவது நம்முடைய பேச்சுக்கு உண்டு. கவனமாய்ப் பேசுவது நாகரிகம்; கண்ணைப் பார்த்துப் பேசுவது நாகரிகம்; வார்த்தைகளில் கட்டுப்பாட்டுடன், சரியான நேரத்தில் பேசுவது நாகரிகம்.அத்துடன், நாலைந்து பேர் கூடியிருக்கும் இடத்தில் அனைவருக்கும் புரியக்கூடிய மொழியில் மட்டுமே பேசுவது நாகரிகம்.

## ‘ஆ’ பிரிவு

சுயவிடைக் கருத்தறிதல் (1) (30 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

நாம் இந்தப் பெரிய உலகத்தில் ஒரு சிறு மூலையில் ஒரு சூழ்நிலையில் ஒரு குடும்பத்தில் வாழ்கிறோம்; அவ்வாறு வாழ்வதற்கு உரிமை வேண்டும்; உரிமை இல்லாத வாழ்வு உயிரற்ற வாழ்வு. ஆனால், மனம் போனபடி வாழ முழு உரிமை எவர்க்கும் கிடைக்காது; ஓரளவு தான் உரிமை கிடைக்கும்; ஓரளவு கட்டுப்பாடு இருக்கத்தான் இருக்கும்.

அந்த அளவு உரிமை பெற்று வாழ வேண்டுமானால், அதற்காக நாம் உலகத்திற்குச் செலுத்த வேண்டிய வரி ஒன்று உண்டு. அதுதான் கடமை என்று கூறப்படுவது. கடமையைச் செய்யத் தவறுகிறவர்களுக்கு உரிமை கிடையாது. குடும்பத்தின் தந்தை என்று வாழ்கிற ஒருவருக்குச் சில உரிமைகள் உண்டு; ஆனால் வருவாய்க்கு உழைத்தல், குடும்பத்தைக் காப்பாற்றுதல் முதலான கடமைகளும் அவருக்கு உண்டு. மகனுக்கும் சில உரிமைகள் உண்டு; தன் பெற்றோருக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காக நடக்க வேண்டும்; ஆசிரியர்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகப் படிக்கவேண்டும்; இவ்வாறு மகனுக்கும் சில கடமைகள் உண்டு.

உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால், குழப்பம்தான் **<u>மிஞ்சும்</u>**; உள்ள உரிமையும் நிலைக்காது. இன்று உலகத்தில் பல பகுதிகளில் உள்ள சீர்கேடுகளுக்கும் குழப்பங்களுக்கும் இந்தத் தவறுதான் காரணம். பலர் இன்று உரிமையைப் பற்றியே போராடுகிறார்கள். கடமையில் கருத்துச் செலுத்துவது குறைகிறது. உரிமையைப் பற்றி மிகுதியாக நினைத்து, கடமையைப் புறக்கணிக்கிறார்களோ அப்போது குடும்பத்தில் மட்டுமல்லாது நாட்டில், உலகில் போராட்டம் மிகும். ஆகவே, எல்லோரும் **<u>ஒத்த</u>** அன்பைச் செலுத்தித் தன்னலத்தைக் குறைக்கவேண்டும்; அல்லது உரிமை பற்றி எண்ணும் அளவுக்குக் கடமை பற்றியும் உணர்வதற்குக் கற்றுக் கொள்ளவேண்டும். மனம் போனபடி திரியும் வாழ்க்கை, இரக்கமற்ற கொடிய செயல்களை வேண்டாதவை என்று எல்லோரும் எண்ணுகிறார்கள்; பேசுகிறார்கள். எண்ணமும் பேச்சும் போதுமா? இவற்றைப் போக்க வழி என்ன என்று எண்ணிப் பார்த்து, ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற சிறு பங்கைச் செய்யவேண்டும்.

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான **<u>அரணே</u>** அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ, அங்கே உரிமைப் போராட்டம் இல்லை; கடமைக்குறைவு இல்லை. அன்பின் வழியது உயர்நிலை என்கிறார் திருவள்ளுவர். அன்பு இல்லாத வாழ்க்கை பாலைநிலத்தின் உள்ள பட்ட மரம் போன்றது என்றும் கூறுகிறார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்யவேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இல்வாழ்க்கையை ஓர் அறம் என்று சிறப்பித்து, இல்லறம் என்றார்கள். மக்கட்பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவற்றை அதன் அங்கம் ஆக்கினார்கள். தேசபக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்ற பெரிய

குடும்பத்தைப் போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். ஆனால் செலுத்தப்படும் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு சிலர் வாழ்வார்களானால், அன்பு வறண்டு போகும். உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.

பழங்காலத்தில் இருந்த நிலைமைக்கு ஏற்றப்படி, உரிமை சிலருக்கும் கடமை பலருக்கும் என்று இருந்தன. இக்காலத்தில் ஒவ்வொருவருக்கும் உரிமையும் கடமையும் உண்டு. எதிர்காலத்தில் வேலைக்காரர்கள் என்று ஒரு சாரார் இருக்க மாட்டார்கள். எல்லோரும் ஒவ்வொரு வேலை செய்து உழைத்துப் பழக வேண்டி ஏற்படும். வேலைகளிலும் உயர்ந்த வேலை, தாழ்ந்த வேலை என்பது போய்விடும். வியர்வை வராத வேலைக்கு மதிப்பும் வியர்வை விடும் வேலைக்கு மதிப்புக் குறைவும் உள்ள நிலைமை மாறிவிடும். ஆகையால், எந்த உழைப்புக்கும் பழக்கப்படுத்திக்கொள்வோரே நன்றாக வாழ முடியும். எனவே, சிறுசிறு வேலைகளையும் நாமே செய்து பழகுவது நல்லது. வாகனத்தில் போகும் வசதி உடையவர்கள் வாகனத்தைத் தூசு துடைக்கவும் கற்றுக்கொள்ள முன்வரவேண்டும். உடம்பால் உழைக்கும் வேலைகள் இழிவானவை என்ற எண்ணம் நம் மனத்தை விட்டுப் போகவேண்டும்.

வேறுபாடற்ற ஒரு சூழலை நோக்கி உலகம் சென்றுக்கொண்டிருக்கிறது. மனிதரிடையே வேறுபாடுகளை வளர்க்கும் எதுவும் எதிர்காலத்தில் வாழ முடியாது. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற கருத்தையே மறக்கவேண்டும். உயர்ந்த தொழில் தாழ்ந்த தொழில் என்ற வேறுப்பாட்டை ஒழிக்கவேண்டும். அவரவர் பெறும் உரிமைகளுக்கு ஏற்ப அவரவர்க்கு வாய்க்கும் கடமைகளை மதித்துச் செய்யவேண்டும்.

**வினாக்கள்.** **(24 மதிப்பெண்கள்)**

6. உரிமையுடன் வாழ்வது ஏன் அவசியம்? அதற்கு என்ன செய்யவேண்டும்?

(7 மதிப்பெண்கள்)

7. 'உரிமை பற்றி எண்ணும் அளவுக்குக் கடமை பற்றியும் உணர்வதற்குக் கற்றுக் கொள்ளவேண்டும்', என்று ஆசிரியர் கூறுவதற்குக் காரணம் என்ன?

(6 மதிப்பெண்கள்)

8. உரிமைக்கும் கடமைக்கும் எப்போது போராட்டம் நிகழும்? (5 மதிப்பெண்கள்)

9. உடம்பால் உழைக்கும் வேலைகள் இழிவானவை என்ற எண்ணத்தை ஏன் நாம் நீக்கவேண்டும்? (6 மதிப்பெண்கள்)

10 **பொருள் கூறுக** **(6 மதிப்பெண்கள்)**

அ. மிஞ்சும்

ஆ. ஒத்த

இ. அரணே

**********முற்றும்**********

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2017

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் | தாள் 2 |
| H2 TAMIL LANGUAGE AND LITERATURE | 12TH SEPT 2017 |
| 9567/2 | 1 Hour |
| Paper 2 | |

## குறிப்புகள்

1. இத்தேர்வில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

2. கொடுக்கப்பட்டிருக்கும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றையொட்டி அமைந்த வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.

## 'இ' பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல் (2)** **(30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

**பனுவல் ஒன்று: மதிப்பெண்கள் மட்டும் வாழ்க்கை அல்ல**

தேர்வுகளில் மாணவர்கள் எத்தனை கேள்விகளுக்குச் சரியான விடைகளையோ தவறான பதில்களையோ வழங்கியிருக்கின்றனர் என்பதைக் கணக்கிடுவதே மதிப்பெண்கள். குறைவான மதிப்பெண்களைப் பெறும் ஒரு மாணவரின் திறன் குறைவு, அதிகம் பெறுபவர் புத்திசாலி என்று அர்த்தம் கிடையாது.

அதிக மதிப்பெண்கள் பெற்று சிறந்த கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் அறிவாளிகள்... இதர பள்ளிகளில் படிப்போர் சுமாரானவர்கள்... என்பனவற்றை நம்பாத பெற்றோர்களும் உண்டு. அனைவரும் திறமைசாலிகளே. ஒவ்வொருவருக்கும் தனித்துவம் இருக்கிறது என்று அவர்கள் நம்புகிறார்கள். ஒருவருக்கு எழுதுவதில் திறமை இருக்கிறது. இன்னொருவர் நல்ல பாடகராக இருக்கலாம். பொதுவாகவே தேர்வுகளில் சரியாகச் செய்யாத ஒருவருக்கு மனிதர்களைக் கையாள்வதில் திறமை இருக்கலாம். பிள்ளைகளின் தனிப்பட்ட விருப்பங்களையும் திறமைகளையும் மதித்து தட்டிக் கொடுக்கும் பெற்றோர்களும் உண்டு. அத்தகைய சூழலில் வளரும் பிள்ளைகள் மகிழ்ச்சி மிக்கவர்களாக தன்னம்பிக்கை உடைவர்களாக வளர்வார்கள். இந்த நடைமுறை உண்மையை உணர்ந்த பெற்றோர்களைப் பொறுத்தவரையில் மதிப்பெண்கள் மட்டுமே வாழ்க்கை இல்லை. நற்பண்புகள், மன வலிமை, உடல் வலிமை எனப் பல அம்சங்கள் ஒரு மனிதனுக்கு அடையாளம் தருகின்றன என்பதால் பிள்ளைகளை முழுமையான மனிதர்களாக வளர்க்கிறார்கள். வெறும் புத்தகப் புழுவாக இருப்பவர்களால் இந்த உலகில் போராடி நிலைக்க முடியாது. நம்மைச் சுற்றி நடப்பவைகளை உணர்ந்து அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுப்பவர்களாலேயே இவ்வுலகில் பெரும் வெற்றி பெற முடியும்.

அதிக மதிப்பெண்கள் பெறாத பிள்ளைகளின் அறிவுத் திறனைக் குறைத்து மதிப்பிடுவதும் அவர்களைப் புண்படுத்துவதும் அவர்களது தன்னம்பிக்கையைப் பாதித்துவிடும் என்று பெற்றோர்கள் அஞ்சுகின்றனர். அவ்வாறு பிள்ளைகள் பாதிக்கப்பட்டால் பின்விளைவுகள் கடுமையானவையாக இருக்கும். பல மாணவர்கள் மனவுளைச்சலால் பாதிக்கப்பட்டு தற்கொலை வரை செல்வதைக் கேள்விப்படும் பெற்றோர்கள் பெரும் பயம்கொள்கின்றனர். வெறும் மதிப்பெண்களுக்காக தங்களது பிள்ளைகளின் உயிரைப் பணயம் வைக்க அவர்கள் தயாராக இல்லை. மாணவர்களை மனிதர்களாகவே பார்ப்பது அவசியம். ஏனெனில் படிப்பில் சிறந்து விளங்கவில்லை என்றால் எதிர்காலம் இல்லை என்று பொருள் அல்ல.

(அடுத்த பக்கம் பார்க்க)

**பனுவல் இரண்டு: மதிப்பெண்களே வாழ்க்கை**

இந்தக் காலத்தில் மதிப்பெண்கள் ஒருவரின் அறிவுத் திறனுக்கான அளவுகோலாக மாறிவிட்டன. சிறந்த மதிப்பெண்களே ஒளிமயமான எதிர்காலத்துக்கு வித்திடும் என்ற நம்பிக்கை இன்று ஆழமாக வேரூன்றி உள்ளது.

குறைவான மதிப்பெண்களைப் பெற்றால், தங்களது பிள்ளையை அறிவற்றவர் என்று யாரேனும் நினைத்துவிடுவாரோ அல்லது அதிக மதிப்பெண்கள் எடுக்காவிடில் பிள்ளையின் எதிர்காலமே பாழாகிவிடுமோ என்ற அச்சம் இன்று பல பெற்றோர்களை வாட்டி வதைக்கிறது. அன்று நம் முன்னோர்கள் கற்றவருக்கே சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறியதன் உண்மையை இப்பெற்றோர்கள் உணர்ந்துள்ளனர். போட்டிமிக்க இச்சமுதாயத்தில் அவர்களது பிள்ளைகள் பின்தங்கி விடுவார்கள் என்று அஞ்சுகின்றனர். அதனாலேயே தங்களுடைய பிள்ளைகள் கல்வியில் சிறக்கவேண்டும் என்று இவர்கள் உறுதியாக உள்ளனர்.

இன்றைய உலகமயமாதல் சார்ந்த உலகில், சிறப்பாக வாழவேண்டும் என்றால் ஒரு துறையில் மிக உன்னத நிலையை அடையவேண்டும். அதற்கு ஒரே வழி கல்வியே! உலகின் மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களில் இடம் கிடைப்பதை மிகப் பெரிய அங்கீகாரமாக பலர் கருதுகின்றனர். அதற்காக இளம் வயதிலேயே கடின உழைப்பைப் போடுவதற்குப் பெற்றோர்கள் ஊக்கப்படுத்துகின்றனர். 20 வருடங்களுக்கு முன்னர் துணைப்பாட வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. ஆனால், இன்றோ துணைப்பாட வகுப்புகளுக்குப் போகாத மாணவர்களைக் காண்பது அரிதாகிவிட்டது. அதிகம் பணம் இதனால் செலவானாலும் தங்கள் பிள்ளைகள் சிறப்பான தேர்ச்சியைப் பெறவேண்டும் என்று பெற்றோர்கள் பெரிதும் விரும்புகின்றனர். இத்தகைய தேர்ச்சியே எதிர்காலத்தில் நல்ல வளமான, மதிப்பான வாழ்க்கையை ஏற்படுத்தி தரும் என்றும் பலராலும் நம்பப்படுகிறது. தேர்வுகளில் மிகச் சிறந்த தேர்ச்சி பெறும் மாணவர்களே கௌரவிக்கப்படுகின்றனர், மதிக்கப்படுகின்றனர். அது அவர்களை உற்சாகப்படுத்தி மேலும் சிறக்க ஊக்கப்படுத்துகிறது. இம்மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் கல்வியில் வெற்றி பெறுவது மட்டுமே இலக்காக உள்ளது.

**<u>வினாக்கள்</u>**

Q1 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று) (4 மதிப்பெண்கள்)

நம்மைச் சுற்றி நடப்பவைகளை உணர்ந்து அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுப்பவர்களாலேயே இவ்வுலகில் பெரும் வெற்றி பெற முடியும்.

அ) சுட்டுப்பெயர்

ஆ) தொழிற்பெயர்

Q2 'இன்றோ துணைப்பாட வகுப்புகளுக்குப் போகாத மாணவர்களைக் காண்பது அரிதாகிவிட்டது', என்ற தொடர் எதனை வலியுறுத்துகிறது? (பனுவல் இரண்டு) (5 மதிப்பெண்கள்)

Q3 இரு பனுவல்களிலும் உணர்த்தப்பட்டுள்ள பெற்றோர்களின் அச்சம் எவ்வாறு வேறுபட்டுள்ளது? (6 மதிப்பெண்கள்)

Q4 பெற்றோர்களிடையே பிள்ளைகளின் கல்வி சார்ந்த வளர்ப்பு பற்றிய சிந்தனை குறித்து எந்தப் பனுவல் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும்? உன் கருத்துக்களைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

************** முற்றும் ***************

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2017

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் | தாள் 3 |
| H2 TAMIL LANGUAGE AND LITERATURE | 15TH SEPT 2017 |
| 9567/3 | 3 Hours |
| Paper 3 | |

➢ **தேர்வு எழுதுவோருக்கான முக்கியக் குறிப்புகள்:-**

1. மொத்தம் 4 கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும்.

3. மீதம் உள்ள ஒரு கேள்விக்கு ஏதேனும் ஒரு பகுதியிலிருந்து பதிலளிக்க வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

➢ **இவ்வினாத்தாளில் மொத்தம் 2 பக்கங்கள் உள்ளன.**

நாவல்

1. கரித்துண்டு நாவலில் இடம்பெற்றிருக்கும் நிர்மலாவின் கடிதம் நாவல் வளர்ச்சிக்கு எந்த அளவில் உதவியாக உள்ளது என்பது குறித்து விளக்குக.

2. சூழ்நிலைகளே மனிதர்களின் வாழ்க்கையை முற்றிலும் மாற்றி விடுகின்றன என்ற கருத்தை நாவலைக் கொண்டு ஆராய்க.

சிறுகதை

3. 'ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது,' என்னும் சிறுகதை எழுத்தாளர்களுக்கு நல்ல பாடங்களை வழங்குகிறது. விளக்குக.

4. 'விடியுமா' என்ற சிறுகதையின் தலைப்பு அக்கதைக்குப் பொருத்தமாக அமைந்துள்ளதா? ஆராய்க.

நாடகம்

5. ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’ என்னும் நாடகம் “போலித்தன்மையைத் தோல் உரித்து காட்டுகிறது”. ஆராய்க.

6. ‘காதல் என்ன விலை’ என்னும் நாடகத்தில் உணர்த்தப்படும் கருத்துக்கள் இன்றைய சமுதாயத்துக்கும் மிகவும் பொருந்துவதாக உள்ளது – கருத்துரைக்க.

கவிதை

7. புறநானூற்று பாடல்கள் வழி நமக்கு உணர்த்தப்படும் வாழ்க்கை நெறிகளை விளக்குக.

8. ஹைக்கூ கவிதைகள் மூலம் நாம் கற்றுக்கொள்ளக்கூடிய விழுமியங்கள் இன்றைய சூழ்நிலைக்கும் பொருந்துமா?

**********முற்றும்**********

“செய்வன திருந்தச் செய்”

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2017

உயர்தரம் 2, தாள் 1 பகுதி 2

விடைக்குறிப்பு

முன்னுணர்வுக் கருத்தறிதல்

1. உபயோகிக்கும், பயன்படுத்தும்

2. பிரதிபலிக்க

3. ஆனால்

4. கட்டுப்படுத்துகிறது

5. சக்தி, ஆற்றல்

கருத்தறிதல்

6. உரிமையுடன் வாழ்வது ஏன் அவசியம்? அதற்கு என்ன செய்யவேண்டும்?

7 மதிப்பெண்கள்

- இந்தப் பரந்த உலகத்தில் ஒரு சிறு மூலையில் ஒரு சூழ்நிலையில் ஒரு குடும்பத்தில் வாழ்கிறோம் - 1

- அவ்வாறு வாழ்வதற்கு உரிமை வேண்டும் - 1

- உரிமையற்ற வாழ்வு உயிரற்ற வாழ்வாகும் அதனால் உரிமையுடன் வாழ்வது அவசியமாகும் – 1

- அத்தகைய உரிமை பெற்று வாழ வேண்டுமானால் நாம் நமக்கென இருக்கும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் – 1.5

- ஏனெனில் கடமையைச் செய்யத் தவறுகிறவர்களுக்கு உரிமை கிடையாது. – 1.5

பொ – 6 மொ - 1

7. ‘உரிமை பற்றி எண்ணும் அளவுக்குக் கடமை பற்றியும் உணர்வதற்குக் கற்றுக் கொள்ளவேண்டும்’, என்று ஆசிரியர் கூறுவதற்குக் காரணம் என்ன? 6 மதிப்பெண்கள்

- ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக உரிமையும் கடமையும் விளங்குகின்றன.

– 0.5

- உரிமையை மட்டும் அதிகமாக வலியுறுத்தி கடமையைப் புறக்கணிக்கும் போது, குழப்பம்தான் மிஞ்சும்; அதோடு இருக்கும் உரிமையும் நிலைக்காது. இன்று உலகத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்கும் குழப்பங்களுக்கும் இந்தத் தவறுதான் காரணம்.

- 2

- இத்தவற்றால் குடும்பத்தில், நாட்டில் மற்றும் போராட்டம் அதிகரிக்கும். – 0.5

- இரக்கமற்ற கொடிய செயல்களை வேண்டாதவை என்று எல்லோரும் எண்ணுவதற்கும் பேசுவதற்கும் மட்டும் உரிமை உள்ளது என்று எண்ணாமல் அவற்றைப் போக்க வழி என்ன என்று எண்ணிப் பார்த்து, ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற சிறு பங்கைச் செய்து கடமையையும் ஆற்றவேண்டும். - 2

பொ – 5 மொ – 1

8. உரிமைக்கும் கடமைக்கும் எப்போது போராட்டம் நிகழும்? (5 மதிப்பெண்கள்)

- உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வை நீக்கக்கூடிய அன்பு எனப்படுவது இல்லாத நிலையில் உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் நிகழும். – 2

- அதுபோல செலுத்தப்படும் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு வாழ்வோமானால், அங்கு அன்பு நீங்கி உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும். - 2

பொ – 4 மொ - 1

9. உடம்பால் உழைக்கும் வேலைகள் இழிவானவை என்ற எண்ணத்தை ஏன் நாம் நீக்கவேண்டும்? (6 மதிப்பெண்கள்)

- பழங்காலம் போன்று இல்லாமல் இப்பொழுது ஒவ்வொருவருக்கும் உரிமையும் கடமையும் உண்டு. – 0.5

- அதனால் எதிர்காலத்தில் வேலைக்காரர்கள் என்று ஒரு சாரார் இருக்க மாட்டார்கள் என்பதால் எல்லோரும் ஒவ்வொரு வேலை செய்து உழைத்துப் பழக வேண்டிய நிலை ஏற்படும். - 2

- வேலைகளிலும் உயர்ந்த வேலை, தாழ்ந்த வேலை என்பது போய்விடும். வியர்வை வராத வேலைக்கு மதிப்பும் வியர்வை விடும் வேலைக்கு மதிப்புக் குறைவும் உள்ள நிலைமை மாறிவிடும். – 2

- ஆகையால், எந்தச் சிறு வேலைக்கும் உழைப்புக்கும் தம்மைப் பழக்கப் படுத்திக்கொள்வோரே நன்றாக வாழ முடியும். – 0.5

அதனாலேயே உடம்பால் உழைக்கும் வேலைகள் இழிவானவை என்ற எண்ணத்தை நாம் நீக்கவேண்டும்.

பொ – 5 மொ 1

10 **பொருள் கூறுக** **(6 மதிப்பெண்கள்)**

அ. மிஞ்சும் – மீதமாகும், மிச்சமாகும்

ஆ. ஒத்த – சமமான

இ. அரணே - பாதுகாப்பே

SERANGOON JUNIOR COLLEGE

JC2 H2 PRELIMINARY EXAMINATION 2017

தாள் 2

விடைக்குறிப்பு

**வினாக்கள்**

Q1 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று) (4 மதிப்பெண்கள்)

நம்மைச் சுற்றி நடப்பவைகளை உணர்ந்து அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுப்பவர்களாலேயே இவ்வுலகில் பெரும் வெற்றி பெற முடியும்.

அ) சுட்டுப்பெயர் - இவ்வுலகில்

ஆ) தொழிற்பெயர் – வெற்றி

Q2 'இன்றோ துணைப்பாட வகுப்புகளுக்குப் போகாத மாணவர்களைக் காண்பது அரிதாகிவிட்டது', என்ற தொடர் எதனை வலியுறுத்துகிறது? (பனுவல் இரண்டு) (5 மதிப்பெண்கள்)

- இன்றைய உலகமயமாதல் சார்ந்த உலகில், சிறப்பாக வாழவேண்டும் என்றால் ஒரு துறையில் மிக உன்னத நிலையை அடைவதற்கு கல்வி மிக அவசியம் என்று உணர்ந்து - 1

- அதிகம் பணம் துணைப்பாட வகுப்புகளுக்குச் செலவானாலும் தங்கள் பிள்ளைகள் சிறப்பான தேர்ச்சியைப் பெறவேண்டும் என்று பெற்றோர் விரும்பிகின்றனர் – 0.5

- ஏனெனில் இத்தகைய தேர்ச்சியே எதிர்காலத்தில் நல்ல வளமான, மதிப்பான வாழ்க்கையை ஏற்படுத்தி தரும் என்று நம்புகின்றனர் - 1

- அதோடு தேர்வுகளில் மிகச் சிறந்த தேர்ச்சி பெறும் மாணவர்களே கௌரவிக்கப்படுகின்றனர், மதிக்கப்படுகின்றனர் என்பதால் அந்நிலையை அடைய துணைப்பாட வகுப்புகள் உதவும். - 1

- ஆக இம்மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் கல்வியில் வெற்றி பெறுவது மட்டுமே இலக்காக உள்ளதால் பல மாணவர்கள் துணைப்பாட வகுப்புகளுக்குச் செல்கின்றனர். – 0.5

Q3 இரு பனுவல்களிலும் உணர்த்தப்பட்டுள்ள பெற்றோர்களின் அச்சம் எவ்வாறு வேறுபட்டுள்ளது? (6 மதிப்பெண்கள்)

பனுவல் 1

- அதிக மதிப்பெண்கள் பெறாத பிள்ளைகளின் அறிவுத் திறனைக் குறைத்து மதிப்பிடுவதும் அவர்களைப் புண்படுத்துவதும் அவர்களது தன்னம்பிக்கையைப் பாதித்துவிடும் என்று பெற்றோர்கள் அஞ்சுகின்றனர். - 1

- அவ்வாறு பிள்ளைகள் பாதிக்கப்பட்டால் பின்விளைவுகள் கடுமையானவையாக இருக்கும். பல மாணவர்கள் மனவுளைச்சலால் பாதிக்கப்பட்டு தற்கொலை வரை செல்வதைக் கேள்விப்படும் பெற்றோர்கள் பெரும் பயம்கொள்கின்றனர். – 1

பனுவல் 2

- குறைவான மதிப்பெண்களைப் பெற்றால், தங்களது பிள்ளையை அறிவற்றவர் என்று யாரேனும் நினைத்துவிடுவாரோ - 1

- அல்லது அதிக மதிப்பெண்கள் எடுக்காவிடில் பிள்ளையின் எதிர்காலமே பாழாகிவிடுமோ என்பவற்றோடு - 1

- போட்டிமிக்க இச்சமுதாயத்தில் அவர்களது பிள்ளைகள் பின்தங்கி விடுவார்கள் என்று அஞ்சுகின்றனர். - 1

**VICTORIA JUNIOR COLLEGE**

**JC 2 PRELIMINARY EXAMINATION 2017**

**H2 Tamil Language and Literature** **9567/1**
**Paper 1 (part1)** **2hours 15 minutes**
( Total Time for Part1 &part2 )

**Date:14-09-2017**

**Part -1 (Essay) (Time 2 to3.15pm only)**

# தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. இவ்வினாத்தாளின் பகுதி 1, பகுதி2 ஆகியவை தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.
2. பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றிற்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.
3. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப்படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.
4. **அகராதியைப் பயன்படுத்துதல் :**

   அ. பகுதி 1-க்கு விடையளிக்கும் போது நீ அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப்பயன்படுத்தலாம். அகராதியைப்பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் **1மணி 15** நிமிடங்கள் மட்டுமே.

   ஆ. பகுதி 2-க்கு விடையளிக்கும் போது நீ அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

This document consists of **2** printed pages

[Turn over]

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக .**

(35 மதிப்பெண்கள் )

1. **" தீதும் நன்றும் பிறர் தர வாரா"** என்று கூற்று உண்மையா ? விவரிக்கவும்.

2. நம் நாட்டு இளையோர் எதிர்நோக்கும் பிரிச்சினைகளும் அதனைச்சமாளிக்கும் வழிகளும்.

3. உலகின் நல்வாழ்விற்கு அடிப்படையான அன்பும் அமைதியும் மக்கள் உள்ளங்களில் குறைந்து விட்டன – விவாதிக்க

4. **பின் வரும் சூழலைக்கொண்டு ஒரு கட்டுரை வரைக..**

நான் தன்னந் தனிக்காட்டு ராணி .கவலை இல்லவே இல்லை





நாங்க சேர்ந்து வாழ்வோம் ,மகிழ்ச்சியாக ,ஜோடி ஜோடியாக, குடும்பமாக வாழ்வோம்

முற்றும்

==================================================================

**VICTORIA JUNIOR COLLEGE**

**JC 2 PRELIMINARY EXAMINATION 2017**

**H2 Tamil Language and Literature** **9567/1**
**Paper 1 (part2)** **2hours 15 minutes**
( Total Time for Part1 &part2 )

**Date: 14-09-2017**
**Part-2 - Compre 1** 2 pm to 4.45 pm

---

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. இவ்வினாத்தாளின் பகுதி 1, பகுதி2 ஆகியவை தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.
2. பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றிற்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.
3. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப்படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.
4. **அகராதியைப் பயன்படுத்துதல் :**

அ. பகுதி 1-க்கு விடையளிக்கும் போது நீ அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப்பயன்படுத்தலாம். அகராதியைப்பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் **1மணி 15** நிமிடங்கள் மட்டுமே.
ஆ. பகுதி 2-க்கு விடையளிக்கும் போது நீ அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

---

This document consists of **4** printed pages

[Turn over

## “ அ “ பிரிவு

**முன்னுணர்வுக் கருத்தறிதல்** **( 5மதிப்பெண்கள் )**

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக.**

அழகாகக் கலையைப் படைத்து மகிழ்விப்பது வேறு. அந்த அழகு இன்னது என்று விளக்குவது வேறு. அவ்வாறு விளக்கும்போது, உணர்ச்சி வயப்பட்டு மயங்காமல், அறிவியல் நெறியில் நின்று ஆராய்ந்து தெளிவாகக் கூறுதலே கடமையாகும்.

கண்ணுக்குப் புலனாகும் கவர்ச்சித் தன்மையை மட்டும் நாம் Q1 __________என்று வழங்குகிறோம். ஆனால், கலைத் துறையில் அழகு என்பது மிக விரிவான பொருளில், செவி முதலிய புலன்களுக்கு உரிய கவர்ச்சித் தன்மையையும் குறிக்க வழங்குகிறது. இனிமை மிகுந்த ஓசையையும் நயமான அசைவையும் குறிக்கவும் அழகு என்ற சொல்லே பயன்படுகிறது. Q2_____________ இன்பம் தருவனவற்றையெல்லாம் ‘அழகு’ எனக் குறிக்கின்றனர்.

அக்கருத்தின்படி, ஓவியத்திலும் சிற்பத்திலும் மட்டுமல்லாமல், இசையிலும் இலக்கியத்திலும் அழகுQ3__________ என்பர். உணர்ச்சிக்கு ஏற்றவாறு பொருந்த அமைந்த ஒலி நயத்தை அழகானது என்பர். உரிய இடத்தில் தக்க பொருளில் அமைந்த Q4______________அழகான சொல் என்பர்.

அழகு எங்கு உள்ளது? பொருள்களில் உள்ளதா? பொருள்களைப் புலன்கள் வாயிலாக நுகரும் மனத்தில் உள்ளதா? இதில் கருத்து Q5___________ உண்டு. அழகு, பொருள்களின் பண்பு அன்று என்றும், கலையின் பண்பு அல்லது கலைஞரின் மனத்தின் பண்பு எனக் கூறவேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றன

**( அடுத்த பக்கம் பார்க்க)**

“ஆ” பிரிவு

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (30 மதிப்பெண்கள்

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**

மனிதன் இயல்பில் குறையுடயவனாய் இருக்கிறான். மனிதனுடைய குறைகளில் தலையாயது அறியாமை; அறியாமைதான் எல்லாக் குற்றங்களுக்கும் முதலாக இருப்பது. அறியாமை மயக்கும்; பொருளல்லவற்றைப் பொருளென்று போற்றச் செய்யும்; துன்பத்தை இன்பமாகக் கருதச் செய்யும்; பெரியோரைப் பகைவராகக் கொள்ளச் செய்யும்; **<u>சிற்றினத்தாரை</u>** நட்பாகக் கொள்ளத் தூண்டும். அம்மம்ம! அறியாமை செய்யும் தீமையைப் பகைவர் கூடச் செய்யார். ஆதலால், திருவள்ளுவர் முதலில் மனிதனை அறியாமையிலிருந்து விலகுக என்று அறிவுறுத்துகிறார்.

அறியாமையைக்கூடச் சில வேளைகளில் மன்னிக்கலாம். ஆனால், அறியாமையை அறிவு என்று நம்பி இறுமாப்புக் கொள்ளச் செய்யும் புல்லறிவாண்மை மிகமிகக் கொடிது. அறியாமையுடையோர் திருந்த வாய்ப்புண்டு. காரணம், தாம் அறியாமையுடையோம் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். புல்லறிவாண்மையுடையோன் திருந்தவே முடியாது. புல்லறிவாண்மை அறிவின் வாயிலை அடைத்துவிடும். உலகமே திரண்டு கூறினாலும் அவன் ஒத்துக்கொள்ள மாட்டான். அதனால், அவனை உலகத்துப் பேய் என்பர் திருவள்ளுவர். அறியாமை அதனை உடையவனுக்கு மட்டுமே தீங்கு செய்யும். புல்லறிவாண்மை பேயைப் போலச் சமுதாயத்திற்குத் தீங்கு செய்யும்.

அறியாமை அகன்று, புல்லறிவாண்மை போய் மனிதன் **<u>விளக்கமுற</u>** உதவி செய்யும் வாயில் கல்வியே. மனிதன், மனிதனாக விளங்கத் துணை செய்யும் முதல் வாயில் கல்வி. திருவள்ளுவர் கல்வியை ஓர் இயக்கமாகவே வற்புறுத்துகிறார். “கற்க” என்பது அவராணை. ஆம், உடல் நலத்துக்குரிய உணவு உண்பது மனித குலத்திற்கு வழக்கமாகிவிட்டது. ஆனால், உயிர் நலத்துக்குரிய நூல்களைக் கற்பது இன்னும் பலருக்கு வழக்கமாகவில்லை. அதனால்தான் திருவள்ளுவர், மனிதன் ஓயாது கற்க வேண்டும், ஒவ்வொரு நாளும் கற்க வேண்டும் என்கிறார்.

கற்கும் ஆர்வம் தலைப்பட்டு முயற்சி தோன்றியவுடன் கற்பதற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுப்பது ஒரு நுட்பமான கலை. ஒரு மனிதனின் முன்னேற்றம் அவன் கற்பதற்குத் தேர்ந்தெடுக்கும் நூலிலேயே அடங்கியிருக்கிறது. இன்று வாழும் மானிடர் பலர் இந்தக்

கலையைக் கைவரப்பெறவில்லை. தாம் கற்பதற்குரிய நூலைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒருவர் தம்முடைய வாழ்க்கையில் அமைந்துள்ள மனக்குற்றங்களை அறிந்துகொள்ள வேண்டும். உடல் நோய்க்கு மூலிகைகள் மருந்து, மனக்குற்றத்திற்குக் கருத்துகளே மருந்து. மனிதன் தன் மனக் குற்றங்களை அறிந்துகொண்டு, அக்குற்றங்களை நீக்குதற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மனக் குற்றம் நீங்கும் வரை கற்க வேண்டும்; அக்குற்றம் நீங்கிய நல்வழியில் என்றும் நின்று **ஒழுக** வேண்டும். இது வள்ளுவர் காட்டும் வழி.

கற்பதற்குரிய நூல்கள் பல்கிப் பெருகி வளர்ந்து கிடக்கின்றன. அவை முழுவதையும் தேர்ந்தெடுத்துக் கற்றுத் தெளிதற்கு ஒரு மனிதனுக்குரிய வாழ்நாள் போதாது. ஆதலால், நல்ல நூல்களைக் கற்றலோடு கற்றோர் வாயிலாகக் கேட்பது, மேலும் துணை செய்யும் என்பது திருவள்ளுவர் கருத்து. அது மட்டுமன்று. தம்மில் மூத்த சான்றோர், நல்ல நூல்களைக் கற்று, கற்ற கல்வியை வாழ்க்கையில் சோதித்துப் பார்த்து ஒழுக்கமாக்கிக் கூறுவர். அங்ஙனம் கூறும் சான்றோரின் சொற்களைக் கேட்பதன் மூலம் எளிதில் வாழ்க்கையில் முன்னேறலாம். கற்கும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கலாம். எனவே, ஒருவன் முழு மனிதன் ஆவதற்குக் கற்கும் முயற்சி மட்டும் போதாது. நல்லவை கேட்கும் முயற்சியும் தேவை.

## II வினாக்கள் ( 24 மதிப்பெண்கள் )

Q6 அறியாமை இல்லாமல் வாழ்வதால் பெறும் நன்மைகள் யாவை?

Q7 அறியாமைக்கும் புல்லறிவாண்மைக்கும் உள்ள வேறுபாடு யாது?

Q8 ஏன் நூல்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும்?

Q9 ஆசிரியர் நமக்குக் கேட்டல் அவசியம் என்று கூறுவது ஏன்?

## Q10 சொற்பொருள் ( 6 **மதிப்பெண்கள்)**

அடியில் தரப்பட்டுள்ள சொற்கள் மேற்காணும் கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவை பகுதியில் தரும் பொருளினை எழுதுக.

**அ** சிற்றினத்தாரை

**ஆ** விளக்கமுற

**இ** ஒழுக

**The End**

**VICTORIA JUNIOR COLLEGE**

**JC 2 Preliminary EXAMINATION 2017**

**H2 Tamil Language and Literature** **9567/2**
**Paper 2** 1hr. only

**E- Exam** **Date : 14-09-2017**

---

# தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைநன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின் படி வினாக்களுக்கு உரிய விடையைக் கணினியில் தட்டச்சுச்செய்யவேண்டும்.

2. விடையைத் தட்டச்சுச்செய்யும் முன் வினா எண்ணை மறக்காமல் குறிப்பிடுக.

This document consists of **printed 6 pages**

[Turn over]

**சுயவிடைக்கருத்தறிதல் (2)** **(30 மதிப்பெண்கள் )**

பின்வரும் இரண்டு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

**பனுவல் ஒன்று:**




## எழுத்தாளர் கபிலன்

| *என்னைப் பற்றி* | *என்னோடு தொடர்புக்கு* | *என் படைப்புகள்* | *என் நண்பர்கள்* |
|---|---|---|---|

ஆசை இல்லாதவர்கள் உலகில் இல்லை. ஆசைப்படுவது மனித இயல்பு தான். ஆனால் ஆசையைப்பற்றி விரிவாகச் சிந்தித்தால் அதைப்பற்றிய தெளிவு நம்மை அதன் தீமைகளில் இருந்து காப்பாற்றும். "ஆசை தான் துன்பத்திற்குக் காரணம்" என்றார் புத்தர். ஆசை என்பது சிறுவயது முதற்கொண்டு அவரவருக்கு ஏற்ப விதவிதமாய் வளர்கிறது. இதில் சில இயற்கையானவைகளாகவும், சில ரசனை உணர்வால் தனிநபர் ஆசையாகவும் அமைகின்றன. இவ்வாசைகள் நிறைவேற சிலர் அல்லல்படுகின்றனர். சிலர் தியாகங்களைச் செய்கின்றனர். ஆசைகள் ஆரம்பத்தில் ஓர் எண்ணமாய்த் தோன்றும். அவற்றை ஆராயாமல் உணர்ச்சி வசப்படுவதன் காரணமாய்ப் படிப்படியாக மனத்தில் இடம் பிடித்துக்கொள்ளும். இது மனிதனை அடிமைப்படுத்தி அவனிடம் ஏக்கத்தை வளர்த்து அமைதியைக் கெடுக்கும்; இதற்காக தவறு செய்யக்கூடத் தூண்டும். இதற்கிடையே ஓர் ஆசை முடியும் முன் இன்னோர் ஆசையைக் கொண்டு வந்து நிறுத்தும்; ஆதலால் ஆசைக்கு எல்லையில்லை. சிலர் எதைப் பார்த்தாலும் அது தங்களிடம் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதனால் அழகான ஒன்றை ரசிக்கும் போது அந்தப் பொருளுக்கும் நமக்கும் இடையே நாகரிகமான



**ஆவணங்கள்**

- 2015
- 2014
- 2013
- 2012
- 2011

தூரம் இருக்கிறது. ஆசை என்ற பெயரில் அதன் உரிமையாளனாய் இருக்க வேண்டும் என்று நினைக்கும் போது அந்தத் தூரத்தின் நாகரிகம் போய்விடுகிறது.

தர்மத்திற்கு விரோதமான ஆசைகள் சில உண்டு. மனிதன் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியது இது போன்ற ஆசைகளில் தான். ஆசைகளுக்கு எல்லை வகுத்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் அவை தர்மத்தின் எல்லைக்குள்ளே இருக்க வேண்டும் என்பதாகும். பலருக்குத் தேவைக்கும் ஆசைக்கும் வித்தியாசம் புரிவதில்லை. தேவைகள் ஆசையாக மாறலாம், ஆனால் ஆசைகள் தேவைகளாக மாறக்கூடாது. அப்போது தான் ஆசைகளினால் பாதிப்பு ஏற்படுகின்றது. தேவைகள் ஒவ்வொருவருக்கும் மாறுபடும். மற்றவர்கள் ஒன்றை வைத்திருக்கிறார்களே என்று நினைத்து நாமும் அதேபோல் வைத்திருக்க வேண்டும் என்று எண்ணுவது ஒருவிதமான தொற்று ஆசையாகும். தன்னல ஆசைகளைத் துறந்து பொதுநல ஆசைகளை வளர்க்க வேண்டிய நாம், ஆசைகள் அளவுக்கு மீறி வெறியாக மாறி விட்டன. உலகம் இன்று ஆசையின் உச்சத்திற்கே சென்று விட்டது. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை கொண்டோர் அதிகரித்து வருகின்றனர். மனித ஆசைகள் இறக்கைக்கட்டிப்பறக்கின்றன. அதனால் மனிதன் மனிதனாக இல்லை. மனிதன் மாறி விட்டான் மரத்தில் ஏறி விட்டான்.

**Go to next page**




# பனுவல் இரண்டு- கருத்துக்களம்

**எழுத்தாளர் : முகிலன்**

| | | | |
|---|---|---|---|
| *என்னை அறிக* | *என்னோடு உரையாட* | *என் படைப்புகள்* | *என் நண்பர்கள்* |

நல்லது நண்பரே! நீங்கள் கூறுவதைப்பாரத்தால் ஆசைகளே மனதில் இருக்கக்கூடாதா?.ஆனால் நான் கருத்தில் மாறுபடுகின்றேன். மனிதன் ஆசைப்படவேண்டும். ஆசைப்பட வேண்டும் என்பது தான் பலரின் கருத்து. ஆசைகளை மனத்தராசில் நிறுத்துப் பார்த்துத் தான் மனதில் அனுமதிக்க வேண்டும். மன அடக்கத்தைக் கையாண்டு அவர்களின் நிலைக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப, தர்மத்தை மீறாத வகையில் ஆசைகள் அமைந்து பிரச்சனைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆசைகள் சில நிறைவேறும்; சில நிறாசைகளாகப் போகும். அந்த நிறாசைகளையே நினைத்துக் கொண்டிருந்தால் மன உளைச்சல் தான் அதிகரிக்கும். ஆசையைப் பற்றிய ஓர் உண்மை என்னவென்றால் அதுவும் மாறும் இயல்புடையது, அதன் மறுபக்கத்தில் துன்பம் உள்ளது; அது ஒரு விலங்கைப் போன்றது. அனுபவ முதிர்ச்சியினால் தான் ஆசையைப் பற்றிய தெளிவு பெருகும், அப்போது ஆசைப்படும் பொருள் எல்லாம் நன்மையைச் செய்யும் என்று சொல்ல முடியாது.

அதே சமயத்தில் சில ஆசைகள் பாராட்டைப் பெறுவதோடு, பிறருக்கு நன்மையும் செய்கின்றன. ஒரு படைப்பாளி அல்லது சிந்தனையாளன் தங்கள் ரசனையால் சிலவற்றை உலகிற்கு அளித்து தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்கின்றான். கல்வியிலும், அறிவிலும் ஆசைவைத்தால் அறிவாளிகள் உருவாகுவார்கள்.



**ஆவணங்கள்**

- 2017
- 2015
- 2014
- 2013
- 2012

ஆசைகளை மனிதன் எப்படிக் கையாள்கின்றான் என்பதில் தான் அவனது புத்திச்சாலித்தனம் இருக்கிறது. தன்னல ஆசைகளை விடப் பொதுநல ஆசைகளே உயர்ந்தவை. தன்னல ஆசைகளைத் துறந்து பொதுநல ஆசைகளை வளர்க்க வேண்டிய நாம், ஆசைகள் அளவுக்கு மீறி வெறியாக மாறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒருமனிதன் பறவையைக்கண்டான் விமானம் படைத்தான். எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான். இதுவும் ஆசை தான் .இந்த ஆசை அறிவியல் வளர்ச்சியைத்தந்தது. இன்றைய தகவல் தொழில் நுட்பத்தின் பரிணாமவளர்ச்சியே மனித ஆசையால் தோன்றியவை, வளர்ந்தவை என்றால் மிகையாது. ஆறறிவு உடைய உயர்திணைகளாகிய நாம் மனத்தைச் சமநிலைக்குக் கொண்டுவந்து தியானம் செய்து நம் ஆசையை நல்லவைகளாக்கி வளர்ச்சியை நோக்கி, யாரும் வருந்தாவகையில் நல்வழியில் செலுத்துவோம்.

**அடுத்தபக்கம் பார்க்க- வினாக்கள் உள்ளன.**

**<u>வினாக்கள்</u>**

**Q1. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று)**

**(4 மதிப்பெண்கள் )**

உலகம் இன்று ஆசையின் உச்சத்திற்கே சென்று மண்ணாசை பொன்னாசை கொண்டோர் அதிகரித்து வருக்கின்றனர்.

1. **இடவாகுப்பெயர்**
2. **உம்மைத்தொகை**

**வினாக்கள்:**

1. ஆசைக்கு வரம்பு கிடையாதா? ஏன் ? **(4 மதிப்பெண்கள்** )
2. ஆசைகளினாலும், தொற்றுநோய் போன்ற ஆசைகளினாலும் மனிதன் அடையும் அல்லல்களை விவரிக்க . **(6 மதிப்பெண்கள்** )
3. ஆசைகளின் வேறுபாடுகளை இப்பனுவல்களைக்கொண்டு ஆராய்ந்து , உனது கருத்துகளையும் சேர்த்து 140 சொற்களில் எழுதுக. பனுவல் ஒன்று இரண்டை உதவிக்குப் பயன்படுத்திக் கருத்துரைக்கலாம்.

**( 15 மதிப்பெண்கள் )**

# <u>முற்றும்</u>

============================================================

**VICTORIA JUNIOR COLLEGE**

**JC 2 PRELIMINARY EXAMINATION 2017**

**H2 Tamil Language and Literature** **9567/3**

**Paper 3** **3 hours**

**Date: 19-09-2017**

---

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. **ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.**

2. **விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்**

---

This document consists of **3** printed pages

[Turn over]

➢ **<u>தேர்வு எழுதுவோர்க்கான முக்கியக் குறிப்புகள்</u>**:-

- மொத்தம் **<u>நான்கு கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.</u>**
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு கேள்விக்கும் **மதிப்பெண்கள் 25** வழங்கப்படும்.

**<u>"அ" பிரிவு</u>**

**<u>நாவல்</u>**

**Q1** " கரித்துண்டு நாவலுக்கு நிர்மலாவின் கடிதம்தான் திருப்புமுனையாக அமைந்துள்ளது".

இக்கூற்று உண்மையா உண்மையா**?** விவரிக்க.

**Q** .2குமரேசன் என்ற கதைமாந்தர் கரித்துண்டு நாவலுக்குத் தேவையா**?**

ஆராய்ந்து விவரிக்க.

**<u>" ஆ பிரிவு "</u>**

**<u>சிறுகதை</u>**

**Q** .3 **"** தமிழுக்கு அமுதென்று பேர் " என்னும் சிறுகதையின் கருப்பொருள்

இன்றைய **நவீனக்காலத்தில்** உண்மையாக நடக்குமா**?** ஆராய்ந்து விவரிக்க.

**Q** .4 **"**ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது" என்ற சிறுகதை**,** சிறுகதை உத்திகளோடு அமைந்த சிறந்த கதை. உண்மையா**?** விவரிக்க

**அடுத்த பக்கம் பார்க்க**

**“ இ பிரிவு ”**

**நாடகம்**

Q **.5‘சிங்கப்பூர் மாப்பிள்ளை**’ நாடகத்தில் வருகின்ற செல்வியையும் **,**

‘**காதல் என்ன விலை**’ என்னும் நாடகத்தில் வரும் வள்ளியையும் ஒப்பிட்டு **,**

இவர்களின் குணநலங்களை ஆராய்ந்து விவரிக்க.

**Q** .6**“காதல் என்ன விலை”** என்னும் நாடகத்தில் வரும் வள்ளியின்

**பெற்றோர்களைச்** சிறந்த**,** பொறுப்பான பெற்றோர் என்று கூறலாமா**?**

இந்நாடக நூலை ஆராய்ந்து விவரிக்க.

**“ ஈ பிரிவு ”**

**கவிதை**

**Q** .7மனிதனை விட மரம் உயர்வானதா **?** மரம் என்னும் கவிதையை ஆராய்ந்து இவ்வினாவிற்கு உன் பதிலை விவரிக்க.

**(அல்லது)**

**Q** .8பாரதிதாசன்**, “எந்நாளோ”** என்று**, அன்று** ஏக்கத்தோடு கேட்பது **இன்று**

நிறைவேறியதா**? பிறகாவது** நிறைவேறுமா**?** இதனை **எந்நாளோ** என்னும்

கவிதை வரிகளின் வழியாக ஆராய்ந்து விவரிக்க.

**முற்றும்**

--------------------------------------------------------------------------

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++